830 30

தமிழரசு

கார்த்திகைத் திங்கள்

22 NOV 1937

சேலம் சங்கர் பிலிம்ஸ் 'அ

எம். ஆர். சந்த

காங்க்ரீன் என்னும் இரண சஞ்சீவி

இம் மருந்தானது எல்லாவித இரணங்களையும், கட்டிகளையும் ஆற்றும். மதுமேக நோயால் பீடிக்கப்பட்டவர்களுக்குக் காணும் இராஜக் கட்டியானது எவ்வளவு அபாய நிலையில் இருந்தாலும் குணமாய் விடும். ஆஸ்பத்திரிகளில் பார்த்து தீராதென அனுப்பி விட்ட கேசுகளை ஆச்சரியமாய் குணம் செய்யும். அநேக ஆங்கில வைத்தியர்கள் இதை உபயோகிக்கின்றன.

ஆஸ்பத்திரிகளில் பெரிய டாக்டர்களாக இருக்கும் என் சகோதர வைத்தியர்களுக்குத் தெரிவிப்பதாவது: உங்கள் ஆஸ்பத்திரிகளிலாவது அல்லது தனிப்பட்டாவது பார்க்கப்பட்ட ராஜ கட்டிகள் (சைனஸ்) வைத்து (டையபடிக்கோமா) வந்து இனி இக்கேசு பிழைக்காது என்று நினைக்கும் சமயம் நீங்கள் கைவிட்ட சமயம் உங்கள் (இன்சொலின்) குணம் தராத காலத்திலாவது இதை உபயோகித்து உயிரைக் காப்பாற்றுங்கள். ஆஸ்பத்திரிகளில் ஆப்பரேஷன் செய்யாமல் இரணங்களை ஆற்றி விடுங்கள். உங்களுக்கு இதன் குணம் தெரிந்துக் கொள்ளும் வரையில் உங்களால் முடியாது என்றபோது என்னிடமாவது அனுப்புங்கள். உங்கள் பார்வையும் வைத்துக் கொள்ளுங்கள். முக்கியமாய் ஜெனரல் ஆஸ்பத்திரி, ராயப்பேட்டை ஆஸ்பத்திரி, டிஸ்ட்ரிக்ட் ஆஸ்பத்திரிகளிலி
ருக்கும் டாக்டர்களையும் டாக்டர் குருசாமி முதலியாரவர்க
கிருஷ்ணசாமி ஐயங்கார் அவர்களையும், பாண்டலே அவர்
ராம ஐயங்கார் அவர்களையும், இந்தியன் மெடிகல் ஸ்கூ
பால் அவர்களையும் வற்புறுத்தி மறுமுறையும் கேட்டு
தாவது உங்களால் முடியாது என்று எண்ணிய பிறகா
இரண சஞ்சீவியை உபயோகித்துப் பாருங்கள்.

கண்டமாலை, அரையாப்புக் கட்டி இவைகளை
ராஜ கட்டிகளையும், புரைப் புண்களையும் ஆற்றி

இம்மருந்து சேத்துப்புண், சொறி சிரங்கு,
மோகப்பருவு இவைகளை நீக்கும். ஆராத மேகப்புண், மேகப்படை
கட்டி இவைகளுக்குப் பூச இரணம் ஆறும். பவுத்திர வியாதிக்கு
மேல் பூசினால் இரணம் ஆறிவிடும்.

விலை புட்டி 1-க்கு ரூபா 1.

குறிப்பு:—கணக்கற்ற இரணங்களும், இராஜகட்டிகளும் குணமான நற்சாட்சி பத்திரங்கள் எங்களிடம் இருப்பினும் இடமில்லாமையால் இங்கு குறிப்பிடவில்லை.

எமது விலாசம்:—

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார்,

31, வைத்தியநாத முதலி தெரு, சென்னை.

முந்துங்கள்! முந்துங்கள்!!

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார்

எழுதிய

அனுபவ வைத்திய நூல்

(2-ஆம் பதிப்பு)

இப் புத்தகம் ஒவ்வொரு வீட்டிலும் தவருது இருக்க வேண்டியது இன்றியமையாத தாகும். இந் நூல் வீட்டில் இருப்பது குடும்ப வைத்தியர் ஒருவர் உங்கள் இல்லத்தில் கூடவே யிருப்பதுபோலாகும். நோய் உண்டான காலத்தில் நீங்களே இந் நூலின் உதவியைக்கொண்டு சிகிச்சை செய்து கொள்ளலாம். இந் நூலில் எல்லா நோய்களின் விவரமும், அவைகள் உண்டாவதற்கு முன் தோன்றும் குறிகளும், அவைகளைப் போக்கும் சுலபமான வழிகளும், அதற்குரிய எளிய மருந்து வகைகளும் காணக் கிடைக்கும்.

அனுபவ வைத்திய நூலை வைத்துக்கொண்டே எவரும் ஒரு சிறந்த வைத்திய ராகலா மென்பது திண்ணம்.

முன் பதிப்பைவிட இப்பதிப்பில் அநேக விஷயங்கள் சேர்க்கப்பட்டு உயர்ந்த கிளேஸ் காகிதத்தில் அச்சிட்டுள்ளது. சொற்ப பிரதிகளே கைவச மிருக்கின்றன. முந்துங்கள்.

இதன் விலை ரூபா 2.

பழய 2-ஆம் பாகம் விலை அணு 8.

தபால் சார்ஜ் வேறு

சிறந்த வரலாறு — உயர்ந்த கருத்துகள்

லெனின்

லெனினது வாழ்க்கை, தோற்றம், செயல், குணம் முதலிய விவரங்கள் அனைத்தையும் இந் நூலில் பரக்கக் காணலாம். அவரது திருவுருவப் படமும் இதில் சேர்க்கப் பட்டுள்ளது. கிளேஸ் காகிதம் 36 பக்கம் விலை அணு 2.

வேண்டுவோர் $2\frac{1}{2}$ அணு தபால் ஸ்டாம்பு அனுப்பவும்.

'தமிழரசு' புத்தகாலயம்,

31, வைத்தியநாத முதலி வீதி, சென்னை.

காங்க்ரீன்

என்னும்

இரண சஞ்சீவி

இம் மருந்தானது எல்லாவித இரணங்களையும், கட்டிகளையும் ஆற்றும். மதுமேக நோயால் பீடிக்கப்பட்டவர்களுக்குக் காணும் இராஜக் கட்டியானது எவ்வளவு அபாய நிலையில் இருந்தாலும் குணமாய் விடும். ஆஸ்பத்திரிகளில் பார்த்து தீராதென அனுப்பி விட்ட கேசுகளை ஆச்சரியகரமாய் குணம் செய்யும். அநேக ஆங்கில வைத்தியர்கள் இதை உபயோகிக்கின்றனர்.

ஆஸ்பத்திரிகளில் பெரிய டாக்டர்களாக இருக்கும் என் சகோதர வைத்தியர்களுக்குத் தெரிவிப்பதாவது: உங்கள் ஆஸ்பத்திரிகளிலாவது அல்லது தனிப்பட்டாவது பார்க்கப்பட்ட ராஜ கட்டிகள் (சைனஸ்) வைத்து (டையபடிக் கோமா) வந்து இனி இக்கேசு பிழைக்காது என்று நினைக்கும் சமயம் நீங்கள் கைவிட்ட சமயம் உங்கள் (இன்சொலின்) குணம் தாராத காலத்திலாவது இதை உபயோகித்து உயிரைக் காப்பாற்றுங்கள். ஆஸ்பத்திரிகளில் ஆப்பரேஷன் செய்யாமல் இரணங்களை ஆற்றி விடுங்கள். உங்களுக்கு இதன் குணம் தெரிந்துக் கொள்ளும் வரையில் உங்களால் முடியாது என்றபோது என்னிடமாவது அனுப்புங்கள். உங்கள் பார்வையும் வைத்துக் கொள்ளுங்கள். முக்கியமாய் ஜெனரல் ஆஸ்பத்திரி, ராயப்பேட்டை ஆஸ்பத்திரி, டிஸ்ட்ரிக்ட் ஆஸ்பத்திரிகளிலிருக்கும் டாக்டர்களுக்கும் டாக்டர் குருசாமி முதலியாருக்கும், கிருஷ்ணசாமி ஐயங்கார் அவர்களுக்கும், பாண்டலே அவர்களுக்கும் ராம ஐயங்கார் அவர்களுக்கும் இந்தியன் மெடிகல் ஸ்கூல் பிரின்சிபால் அவர்களுக்கும் வற்புறுத்தி மறு முறையும் கேட்டுக் கொள்வதாவது உங்களால் முடியாது என்று எண்ணிய பிறகாவது எங்கள் இரண சஞ்சீவியை உபயோகித்துப் பாருங்கள்.

கண்டமாலை, அறையாப்புக் கட்டி இவைகளையும் எத்தகைய ராஜ கட்டிகளையும், புரைப் புண்களையும் ஆற்றிவிடும்.

இம்மருந்து சேத்துப்புண், சொரி சிரங்கு, முகத்தில் காணும் மோகப்பருவு இவைகளை நீக்கும்.

ஆராத மேகப்புண், மேகப்படை கட்டி இவைகளுக்குப் பூச இரணம் ஆறும். பவுத்திர வியாதிக்கு மேல் பூசினால் இரணம் ஆறிவிடும்.

சில அபிப்பிராயங்கள்

சென்னை கந்தப்பமுதலித் தெருவு, நெ. 21, P. சோமசுந்திர செட்டியார் தெரிவிப்பது:—நான் என் தாயாருக்கு ஏற்பட்டிருந்த

ராஜகட்டிக்காக டாக்டர் மல்லய்யாவிடமும், ரங்காசாரியாரிடமும் இராயப்பேட்டை ஆஸ்பத்திரியிலும் காட்டி குணமடையாமல் சாகும் நிலையில் இருந்தபோது துரைசாமி ஐயங்கார் சொல்லியபடி தங்களிடம் வந்து மருந்து கேட்டேன். தாங்கள் கொடுத்த இரண சஞ்சீவியால் முள்ளந்தண்டிலும் மார்பிலும் வயிற்றிலும் இருந்த கட்டிகள் சுகமாய் விட்டது. பிறகு இன்பசாரம் சாப்பிட்டதில் இரத்தம் விருத்தி யடைந்தது. நீரில் சர்க்கரை அதிகமாய் இருந்ததும் மறைந்து விட்டது. 12—12—33.

தே. வ. இ. சோமசுந்திரம் செட்டியார், கல்லல். தெரிவிப்பது :—

எனக்கு முதுகில் ஏற்பட்டிருந்த ராஜ கட்டிகளை ஒரு தரம் திருப்பத்தூர் ஆஸ்பத்திரியில் ஆப்பரேஷன் செய்து ஒரு வருடமாய் ஆராமல் நீர் வந்துக்கொண்டே இருந்ததும் தவிர மேல்கொண்டு பல கட்டிகளும் முதுகு பூராவும் சல்லடைக் கண்கள் போல் உண்டாய் விட்டது. பாதை பொறுக்க முடியாமல் கஷ்டப்பட்டிருக்கும் சமயத்தில் டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்கள் கல்லல் ஆ. மு. ஆ. வீட்டுக்கு வந்தபோது காண்பித்தேன். அவர் பட்டணம் வந்தால் பூரணமாய் குணப்படுத்தலாம் என்று சொல்லி இரண சஞ்சீவியைப் போடக் கொடுத்தார் சொஞ்சம் வலி குறைவாயிருந்தது அதுசமயம் ஆ. மு. ஆ. முருகப்ப செட்டியார் அவர்கள் இந்த கேசை உங்களால் குணப்படுத்த முடியுமானல் பட்டணம் அனுப்பலாம் இல்லாவிடில் திருப்பத்தூரிலேயே பார்க்கலாம் என் மகன் இந்த வியாதியால் இறந்து போனுன் என்று சொன்னதைக் கேட்ட பின் உறுதி சொன்னதின் மேல் நான் பட்டணம் வந்து ஒரு மாதம் மருந்தை போட்டதில் சகல கட்டிகளும் ஆச்சரியமான வகையில் இரண சஞ்சீவியால் குணமாய் விட்டது என்னிடம் ஒரு டஜன் இரண சஞ்சீவியை வைத்துக் கொண்டு ஏழைகளுக்கு கொடுத்து சுகப்படுத்தி வருகிறேன். இரண சஞ்சீவியை ஒவ்வொரு வீட்டிலும் கையிருப்பாக வைத்திருப்பது அவசியம். 10—9—33.

குறிப்பு:—இன்னும் கணக்கற்ற இரணங்களும் இராஜகட்டிகளும குணமான நற்சாட்சி பத்திரங்கள் எங்களிடம் இருப்பினும் சில மாத்திரம் இங்கு குறிப்பிட்டோம்.

விலை புட்டி 1-க்கு ரூபா 1.

விலாசம்:—

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார்,

31, வைத்தியநாத முதலி தெரு, சென்னை.

இனி நீங்கள் கவலைப்பட வேண்டாம்

நீங்கள் பசி யின்றி கஷ்டப்பட்டாலும், இருதய வியாதி, பித்த சோகை, வீக்கம், மதுமேகம், பாரிச வாய்வு, க்ஷய இருமல் சுரம் இவற்றில் எந்த நோயால் நீங்கள் பீடிக்கப்பட் டிருந்தாலும்,

இன்பசாரம்

புருஷத் தன்மையைத் தரும்

புத்திர உற்பத்தியை யளிக்கும்

என்ற எங்கள் ஒப்பற்ற உயரிய மருந்தை வர வழைத்து உப யோகியுங்கள். உங்கள் நோய் உடனே பரிதி முன் பனிபோல் நீங்கி விடும்.

இன்பசார மாத்திரையை இரவில் படுக்கைக்குப் போகும்போது தூள் செய்து வாயில் போட்டுக்கொண்டு பால் சாப்பிட்டுவரின் பசி அதிகரிக்கும்; நரம்புகளுக்கு உணர்ச்சி ஏற்படும்; இரத்த விருத்தி யுண்டாக்கும். இம் மாத்திரையானது தங்கம் ஒன்றையே செந்தூரம் செய்து பவளம், முத்து, காரோபா முதலான சத்து வஸ்துக்களுடன் விதை தினுசுகளும் சேர்த்துத் தயார் செய்யப்பட்டது.

இன்பசாரம் ஆணுக்கு இழந்துபோன ஆண் தன்மையை அதி கரிக்கச் செய்வதோடு இரு பாலர்களின் இச்சையையயும் பூர்த்தி

செய்து கொள்ள வேண்டிய வலிமையை அளிக்கும். நெடுநாள் குழந்தை யில்லாத தம்பதிகளுக்குப் புத்திர சந்தானத்தையும் உதவும்.

இன்பசார மாத்திரையானது க்ஷய இருமலையும் சுரத்தையும் 10 நாளில் குறைத்து விடுகின்றது. க்ஷயரோகத்தைப் போக்குவதில் இதற்கு நிகரான மருந்து இல்லை என்பது நிச்சயம்.

இன்பசார மாத்திரைகள் ஒடிந்த எலும்பைக் கூட்டுவதிலும் சொர்ப்பன ஸ்கலிதத்தை நீக்குவதிலும், சரீரத்திலுள்ள இரணத்தை ஆற்றுவதிலும் சிறந்தது. நூற்றுக் கணக்கான நல்லுரைகள் பெற்றுள்ளது. ஒரே வேளையில் குணம் தெரியும்.

விளம்பர மருந்துகளைப் போல் இம்மருந்தை நினைத்தலாகாது. இதன் அரிய குணத்தை டாக்டர்களும், நோயாளிகளும் ஏராளமாக அனுபவித்துப் புகழ்ந்திருக்கிறார்கள்.

இன்பசார மாத்திரையைப்பற்றிய

சில நற்சாக்ஷிப் பத்திரங்கள்

குழந்தை பிறந்தது

கனம் டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு;

நான் இருபது வருஷமாக காசி, இராமேஸ்வரம் முதலான இடங்களுக்குச் சென்று பல தானங்களைச் செய்தும் எனக்குப் புத்திர சந்தான மில்லாத காரணத்தால் தங்கள் மருந்தால் புத்திர உற்பத்தி யுண்டானால் இருபது ஆயிரம் கொடுப்பதாய் வாக்களித்தேன். தங்களுடைய இன்பசார மாத்திரையின் பெருமையை என்னென்று புகழ்வேன்.

எனக்கு உள்ள சொத்து ஒன்பதாயிரம் தாளக்கூடிய வீடு ஒன்றுதான். என்னிடம் வேறு பணங் கிடையாது. வேண்டுமானால் கிருஷ்ணா அண்டு கம்பெனியாரையும் கங்கிபாட்டி சுப்பிரமணியம் செட்டியாரையும் கேட்டுக் கொள்ளுங்கள்.

தங்களுடைய மருந்தால் எனக்கு ஆண் குழந்தை ஒன்று பிறந்தது. இத்துடன் 4 சவரன் அனுப்பி யிருக்கிறேன். பெற்றுக் கொண்டு என்னை மன்னிக்கவும்.

தங்கள் அன்புள்ள,

தேவரப்பட்டு அப்பய்ய செட்டியார்.

அன்பார்ந்த டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு,

இதுவரையிலும் 6 புட்டி இன்பசார மாத்திரையை என் மனைவிக்குக் கொடுத்துள்ளேன். அதனால் நான் எதிர் பார்க்காத வண்ணம் குணம் கண்டிருக்கிறேன். இரத்த விருத்தியும் நல்ல பசியும் எடுக்கின்றது. என் மனைவி பிழைத்தது ஆச்சரியமே !

வேறொரு பெண்மணிக்கு இதைக் கொடுத்திருக்கிறேன். அவர்களுக்கு இரத்த மில்லாமல் வெளுத்திருந்த உடம்பு இப்போது இரத்தம் பரவிவிட்டது. இன்னும் இரண்டு புட்டி வி. பி. யில் அனுப்பவும்.

இப்படிக்கு

28—4—33, காஞ்சிபுரம். Dr. T. N. நடராஜன். L. M. P.

ஒரு மாதம் சாப்பிடக்கூடிய 30 மாத்திரைகள் அடங்கிய

புட்டி 1-க்கு விலை ரூபா 5.

தைலாமிர்தம்

இத் தைலம் பலவித உயர்ந்த பச்சிலைகளின் ரசமும் பசுவின் பால் கோரோசனை முதலாண உயர்ந்த வஸ்துக்களும், மூளையைக் குளிரச் செய்யும் வித்துத் தினுசுகளும் மற்றும் பல கடைச் சரக்குகளும் சேர்த்துத் தயார் செய்யப்பட்டது.

இத் தைலத்தைத் தேய்த்து ஸ்நானம் செய்து வர, கண் எரிச்சல், கண் சிவப்பு, கண்ணில் நீர் வடிதல், கண் குத்தல், கண்ணில் பூ விழுதல், பார்வை மந்தம், கண் கூசல் முதலான சகல நேத்திர ரோகங்களையும், மூளைக் கொதிப்பு, தலை சுத்தல், மயக்கம், புத்தி மந்தம், சோம்பல் முதலானவைகளையும் நீக்கி மூளைக்குக் குளிர்ச்சியைத் தந்து, புத்தித் திட்சண்யத்தை உண்டு பண்ணும். ஒத்தைத் தலைவலி, கழுத்து நரம்பு வலி, மண்டைக் குத்தல் இவைகள் போம். மூளையின் கொதிப்பால் உண்டாகும் பைத்தியம் நீங்கும்.

5 பலம் கொண்ட டின் ரூபா 1. தபால் சார்ஜ் பிரத்தியேகம்.

M. A. Maricayan & Co.

AYURVEDA VAITHIYA SALAI

PORTO - NOVO P. O., S. A. DISTRICT, INDIA

அறிவுடைய நண்பர்கட்கோர் அன்பான விண்ணப்பம்.

இழந்துபோன பலத்தை ஒரே வேளை லேகியம் சாப்பிட ஒரு மணி நேரத்தில் கொடுக்கும். துரையே கவனியுங்கள்.

மேடல் பெற்ற **ஊர்க் குருவி சத்தின் லேகியம்**

இந்த லேகிய பாகம் மற்றோர் செய்து கொடுத்தால்
ரூபா 2000 இனாம்

வெண்பா

ஊர்க்குருவி சத்தெடுத்து உன்னதமாய் செய்த இந்தச்
சீர்கொண்ட லேகியத்தைத் தின்றவர்கள்-பேர்கொண்ட
சிங்கம்போல் வீரஞ் சிறந்தாண்மை தத்துவராய்
மங்கையுடன் வாழ்வார் மகிழ்ந்து.

இந்த லேகியத்தை ஒவ்வொரு புருஷர்களும் பரீக்ஷித்து சந்தோஷமடைவீர்களாக. தத்தம் துர்ச் செயலால் ஜீவரெத்தினமாகிய இந்திரியத்திற்கு ஏற்பட்டிருக்கும் கெடுதிகளை நீக்குவதில் இதைவிட சிறந்த மருந்து கிடைப்பது அரிது. இந்திரிய நஷ்டம் இந்திரிய நீப்பு சீக்கிர ஸ்கலிதம் நித்திரை ஸ்கலிதம் எழுவகை தாதுக்களின் பலஹீனம் அஸ்தி வெட்டைச் சூடு நரம்பு தளர்ச்சி சதா இடுப்பு வலி மலச்சிக்கல் பசி மந்தம் பித்தாதிக்க உஷ்ண வாய்வு கிருமிரோகம் தூர் நீர் வியாதிகள் தேகத்தில் ஓடித்திரியும் பலவித வாய்வு ரோகம் பாரிச வாய்வு நெஞ்சுவலி விரை வாதம் கைகால் அசதி மயக்கம் மறதி முதலியன நிவர்த்தியாகும். சிங்க வீரிய ஆண் தத்துவத்தை யுண்டாக்கி இந்திரியத்தை மணிபோல் கட்டிப் போக இன்பத்தைக் கொடுக்கும். மருந்து உபயோகிக்கும் விபர நோட்டீஸ் மருந்துடன் அனுப்பப்படும்.

40 நாள் 80 வேளை 16 பலம் டப்பி 1-க்கு ரூ.	12	0	0	வி. பி.
20 நாள் 40 வேளை 8 பலம் டப்பி 1-க்கு ரூ.	6	0	0	செலவு
12 நாள் 24 வேளை 5 பலம் டப்பி 1-க்கு ரூ.	3	8	0	வேறு.

நெட்டால், பினாங்கு, சிங்கப்பூர், கிள்ளான், கூவாலாலம்பூர், பரா முதலிய பிரதேச வாசகர்கள் மருந்தின் கிரயமும் தபால் சார்ஜ் ரூ. 2—8—0 யும் சேர்த்து முன் பணம் அனுப்பி மருந்து பெறவேண்டும். ஷை ஊரார் வி. பி. யில் அனுப்பும்படி எழுதுங் கடிதங்களை அங்கீகரிக்கப்பட மாட்டாது. விலாசம் தெளிவாய் எழுதவும். வியாபாரிகளுக்கு 100-க்கு ரூ. 10 வீதம் கமிஷன் கொடுக்கப்படும். பல ஊர்களிலும் ஏஜெண்டுகள் தேவை. ஆர்டர் செய்யும்போது இந்த பேப்பரில் கண்டதாக எழுதவும்.

☞ எமது பினாங்கு, ஈப்போ சோல் ஏஜண்டுகள்:—

தா. கு. சுப்பிரமணிய செட்டியார்,
ஜவுளி, வியாபாரம், நெ. 95. சோலியா ஸ்டிரீட்,
பினாங்கு, P. O. S. S.

பிராஞ்சு ஆபீஸ்:—நெ. 70. பெல்பீல்டு ஸ்டிரீட்.
ஈப்போ, P. O. F. M. S.

காஸ்டோலின்

(இது சர்வ படையையும் சம்மரிக்கும்)

சரீரத்தில் இடுப்பிலும், கழுத்துப் பட்டைகளிலும், துடையின் இடுக்கிலும், சாமான் கூட்டின் மேலும் படரும் படையானது இரவுபகலாக மானாபிமானம் விட்டு பலர் முன்னிலையில் சாமான் கூட்டில் கையைவைத்து நமை நீங்க சொறிந்துக் கொள்ளச் செய்கின்றது.

சிலர்க்கு முகத்திலும் கழுத்திலும் படர்ந்து விகாரத்தை உண்டு பண்ணுகின்றது. சிற்சிலருக்கு முழங்காலுக்குக் கீழ், கணுக்காலுக்குமேல் படர்ந்து எந்நேரமும் நீர் கசிந்துகொண்டு இரணமாய் இருக்கின்றது.

இத்தகைய வியாதிக்கு இங்கிலீஷ் மருந்தில் ஆசிட்சாலிசிலிக் என்னும் பவுடரை மெதிலேடட் ஸ்பிரிட் என்னும் திரவத்துடன் கலந்து பலர் படை மருந்து என்று விற்கின்றார்கள். இம் மருந்தை வாங்கி பூசினவுடன் எரிச்சல் கொடுத்து உதிர்வதுபோல் காணப்பட்டு மீண்டும் திரும்பி விடுகின்றது. எரிச்சலும் பொறுப்பது கஷ்டமாகின்றது. சிலருக்குக் குணமே கிடைப்பதில்லை. ஆதலால் அத்தகைய மருந்தைக் காட்டிலும் தமிழ் மருந்தே வேருடன் களையக்கூடியது. ஆகையால் எங்களால் தயார் செய்யப்பட்டுள்ள காஸ்டோலின் என்னும் விளக்கெண்ணெயினால் தயார் செய்த படை மருந்தை உபயோகித்துப் பாருங்கள்.

வேண்டுவோர் 6 அணா தபால் தலை அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

Rangoon,

Dated 24th August 1933

Dear Doctor

I have the pleasure to inform you that your GASTOLINE has got a very good effect in curing all kinds of skin diseases as the stock previously recieved by V. P. P. is nearly finished, and there is a good demand for it, I request you to send ½ dozen bottles by earliest V. P. P. & oblige.

Thanking you in anticipation, yours faithfully

E. K. Panchanatham,

c/o The Rangoon Electric Tramway & Supply Co. Ltd.

Merchant Street, Rangoon.

எமது விலாசம்:—

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார்,

31, வைத்தியநாத முதலித் தெரு, சென்னை

அன்பே ஆண்டவன்

1937 Nov

தமிழரசு

(ஒரு செந்தமிழ் மாத வெளியீடு)

'எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன்....'

ஆசிரியர் : டாக்டர் மே. மாசிலாமணி முதலியார்

மலர் 8	ஈஸ்வரஞு கார்த்திகைமீ 1937ஞு நவம்பர்மீ 15 உ	இதழ் 11

பொருள் அடக்கம்

ஆசிரியர் குறிப்புகள் ... 633
ஏமாளி ... 64
வீண் வெட்டிக்குத்தானே ! ...
பூந்தி, அல்வா, சாது ...
பத்தினி பத்தி ...
பொல்லாப்பின் போக்கு ...
ஐயோ பேய்!
லக்ஷ்மி நாராயணன்
பிச்சுவின் ஏமாற்றம்
ஏமாறிய தாசி
பழிக்குப் பழி
நண்பனின் துயரம்

குறிப்பு:—'தமிழரசி'ல் வெளிவரும் பெ
பெயர்களாகும். அவை யாரையும் குறிப்பிடுவன

கட்டுரையாளர்களின் கருத்துகளுக்கும்
ஆசிரியர் ஒருசிறிதும் பொறுப்பாளி யாகார்.

நம்பிப் பிரசுரிக்கும் கட்டுரைகள் முன்னமே
யாயின் அதற்குப் பத்திராதிபர் உத்திரவாதியா

வெளிவந்து விட்டது! வெளிவந்து விட்டது!!

எ து? எ து?

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார்

எ ழு தி ய

அனுபவ வைத்திய நூல்

(இரண்டாம் பதிப்பு)

இப் புத்தகம்
ஒவ்வொரு வீட்டி
லும் தவருது இருக்க
வேண்டியது இன்றியமையாத
தாகும். இந் நூல் வீட்டில் இருப்
பது குடும்ப வைத்தியர் ஒருவர் உங்கள்
இல்லத்தில் கூடவே யிருப்பதுபோ லாகும்.
நோய் உண்டான காலத்தில் நீங்களே இந் நூலின்
உதவியைக்கொண்டு கிகிச்சை செய்துகொள்ளலாம். இந்
லில் எல்லா நோய்களின் விவரமும், அவைகள் உண்டா
ன் தோன்றும் குறிகளும், அவைகளைப் போக்கும் சுலப
வழிகளும், அதற்குரிய எளிய மருந்து வகைகளும்
க் கிடைக்கும். இவ் வனுபவ வைத்திய நூலை வைத்
கொண்டே எவரும் ஒரு சிறந்த வைத்திய ராகலா
ம்பது திண்ணம். முன் பதிப்பைவிட இப்
பில் அநேக விஷயங்கள் சேர்க்கப்
உயர்ந்த கிளேஸ் காகிதத்தில்
சிடப்பட்டுள்ளது. சொற்ப
பிரதிகளே கைவசமிருக்
கின்றன. இதன்
விலை ரூபா 2.
விலை அணு 8. தபால் சார்ஜ் வேறு.

சு' புத்தகாலயம்,
நாத முதலி வீதி, சென்னை.

'ஹிந்தி' கட்டாய பாடம் வேண்டாம்

சென்னை கார்ப்பொரேஷன் ஆரம்பப் பாடசாலைகளில் 'ஹிந்தி' கற்றுக்கொடுக்க சாத்தியப்படும்படி சென்னை ஆரம்பப் பாடசாலை சட்ட விதியில் மாறுதல் (திருத்தம்) செய்யும்படி சென்னை கார்ப்பொரேஷன் அரசாங்கத்தை கேட்டுக் கொண்டதற்கு இணங்க அரசாங்கத்தார் மறுத்துவிட்டது மிகவும் போற்றத்தக்கது. இது பொதுவாக பொதுமக்களுக்கும் முக்கியமாய் பெற்றோர்கட்கும் பெரும் ஆறுதலை அளிக்கும் என்பதில் ஐயமில்லை. சென்னை கார்ப்பொரேஷன் பச்சிளங் குழந்தைகளின் தன்மையை கிஞ்சிற்றேனும் உணராது விவேகமின்றி செய்ய முற்பட்ட ஒரு காரியத்திற்கு [illegible]கத்தார் ஒத்துவர மறுத்துவிட்டது முற்றிலும் நியாயமான செய்கையாகும். ஆனால் அரசாங்கத்தார் கார்ப்பொரேஷன் ஆரம்பப் பாடசாலைகளில் 'ஹிந்தி' மொழியைக் கற்றுக்கொடுக்க அநுமதிக்க மறுத்துவிட்டனரேனும், தாங்கள் 'ஹிந்தி'யை வேறிடங்களில் கட்டாய பாடமாக்க கொண்ட சித்தத்தை மாற்றிக்கொள்ளாதது மிகவும் வருந்தற்பாலது. 'ஹிந்தி'யை கட்டாய பாடமாக்கக் கூடாது என்று பல கண்டனங்களும் வேண்டுகோள்களும் அனுப்பியும், அரசாங்கத்தார் தாங்கள் கொண்ட கோரிக்கையில் பிடிவாதமாகவே இருக்கின்றனர். இவ்வித மனப்பான்மை கொண்டிருப்பதுடன் அதற்கு இருக்கும் எதிர்ப்பை அவர்கள், வகுப்புவாதம் என்றும் கூறுகின்றனர். இந்தக் கூற்றில் ஏதாவது உண்மையிருப்பின் அது வாய்திறவாது மௌனம் சாதிக்கும் ஒரு கூட்டத்தாருக்கே முற்றிலும் பொருத்தமாகும். பிராமண வகுப்பினரில் பொறுப்புவாய்ந்த பலரும் அரசாங்கத்தாரின் இச்செய்கை வேண்டப்படாததொன்றே என்று நன்றாக உணருகின்றனர். ஆனால் அதை வாய்விட்டுச் சொல்லவோ அல்லது பொதுக் கூட்டங்களில் கூறவோ முன் வருகின்றனர். அல்லர் ஏனென்றால் அவ்விதம் செய்து, 'ஹிந்தி' மொழியை கட்டாய பாடமாக்குவதற்கு

மிகப் பலத்த எதிர்ப்பு இருக்கிறதென்று பொறுப்புள்ள இடங்களில் உரை இடமளித்து, ஆனால் அவர்கள் மனதிற்கு பிடித்தமான மந்திரிகளின் செய்கைகட்கு இடைஞ்சலோ இடையூறோ ஏற்படுவதை விரும்பவில்லை. எனவே இவ்வெதிர்ப்பை வகுப்புவாதமாக்குவது பார்ப்பனர்களேயன்றி வெளிப்படையாய் இவ்வெதிர்ப்புபை நடத்தும் மற்றையோரல்லர்.

இனி 'ஹிந்தி'யை கட்டாய பாடமாக்குவதால் தாய்மொழி பாதிக்கப்படமாட்டாது என்பதற்கு பிரதம மந்திரி கனம் சக்ரவர்த்தி திரு. சி. இராஜகோபாலாச்சாரியார் கூறுங்காரணம் பெரிதும் ஆச்சரியத்தை விளைவிப்பதாய் இருக்கிறது. அவர் இவ்விவகார சம்பந்தமாய் விஷயங்களை அறியாது இவ்வளவு மோசமான நிலையில் இருப்பார் என்று நாம் கருதவில்லை. அவர் 'ஆங்கிலம் பாடசாலைகளில் கட்டாயப் பாடமாக கற்றுக்கொடுக்கப்படுகின்றனவே' என்கின்றார். 'தேசியத்தின் பேரில் தேசியத்திற்காக பதவிவகித்து நிர்வாகத்தை நடத்துகிறோம்' என்னும் மந்திரி இவ்விதங் கூறுவது மிகவும் வெட்கக் கேடான காரியம். ஆங்கிலத்தை கட்டாய பாடமாக்கியதினால் தாய்மொழி எவ்வள[illegible] பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதை கனம் திரு. சி. இராஜகோபாலாச்சாரியார் உணர்வாரா? பொது மேடைகளில் ஏறிப்[illegible]சும் வீரர்களில் எத்தனை பேர் 'எனக்குத் தமிழில் பேசத் தெரிய[illegible]து. ஆகையால் ஆங்கிலத்தில் பேசுகின்றேன்' என்று சிறிதேனும் வெட்கமென்பதின்றிக் கூறுகின்றனர் என்பதை கனம் மந்திரி உணர்வாரா? அவர்கள் இந்த நிலையை அடைய காரணம் என்ன என்பதை கனம் மந்திரி எடுத்துக் காட்டுவாரா? மற்றும் இப்போதுள்ள மாணவர்கள் எவ்வளவுதூரம் தப்பில்லாது தமிழில் எழுதவும் படிக்கவும் வல்லவர்கள் என்பதை உணர்வாரா? அவர்கட்கு தமிழில் கற்கக்கூடிய சிறந்த நூல்கள் இன்னின்ன இருக்கின்றன என்பதாவது தெரியுமா? ஏதோ கொஞ்சம் தமிழ் படித்தவர்களும், சங்கநூல்கள் காவியங்களாகிய பெருநூல்கள் ஒருபுறமிருக்க, 'நல்வழி, மூதுரை, நன்னெறி, வெற்றிவேற்கை' எனபன போன்ற சிறு நூல்களையாவது கசடற கற்றிருக்கின்றனரா? அதிலுள்ள நுட்ப திட்பங்களை உணர்ந்திருக்கின்றனரா? இல்லையே. இதற்கெல்லாம் காரணம் என்ன என்பதை கனம் மந்திரி கூறுவாரா? ஆங்கிலத்தை கட்டாய பாடமாக்கிய

தனாலன்றோ தாய்மொழியாகிய தமிழிக்கு இக்கேவல நிலை ஏற்பட்டதென்று பொறுப்புவாய்ந்த ஒரு மந்திரி உணராமலிருப்பது, நாட்டின் அதிர்ஷ்டக்குறைவேயாம். கனம் மந்திரி நாம் மேலே கூறிய காரணத்தை தனது செய்கைக்கு ஆதாரமாகக் கூறியதற்கு ஒருவர் மிகப் பொருத்தமான பதில் அளித்தார். கனம் மந்திரி ஆங்கிலம் கட்டாய பாடமாக இருப்பதை எடுத்துவிடலாமே என்றார். தேசீய மணம் வீசுபவைகள் தவிர வேறொன்றுமே கூடாதென்னும் மந்திரிக்கு தேசீயத்தின் பேரால் 'ஹிந்தி' கட்டாய பாடமாக்குவேன்' என்று வீரூப்புக் கூறும் மந்திரிக்கு, அவ்விதம் செய்யத் தைரியமுண்டா? அதைச் செய்யமுன் வருவாரா? என்று கேட்கிறோம்.

நிற்க, கனம் மந்திரி இந்த ஹிந்தி எதிர்ப்பின் உண்மையை உணர வேண்டுமாய் விரும்புகின்றோம். 'ஹிந்தி'யை கட்டாய பாடமாக்கக் கூடாது என்போர் 'ஹிந்தி'யை வெறுப்பவர்க ளல்லர். 'ஹிந்தி' படிக்கவே கூடாதென்பவர்களுமல்லர். ஆனால் அதைக் கட்டாய பாடமாக்குவதைத்தான் கூடாது என்கின்றனர். ஒரு மொழியை கட்டாய பாடமாக்கியதனால் தமிழ், நாம் மேலே எடுத்துக் காட்டியபடி இவ்வளவு சீர்கேடுற்றிருக்கின்றமையால், இருமொழிகளை கட்டாய பாடமாக்கிவிட்டால், தாய் மொழியின் நிலை இன்னும் கேவலமான நிலைமையை அடைந்துவிடும் என்பதே அவர்கள் கூறும் வாதம். எனவே கனம் மந்திரி 'ஹிந்தி'யை பாடசாலைகளில் விரும்புவோர் படிக்கலாம் (Optional) என்ற பாடமாக வைக்கலாம். 'ஹிந்தி'யை கட்டாய பாடமாக்குவதைவிட இவ்விதம் செய்வதால் கனம் மந்திரியின் கோரிக்கை மிக எளிதில் கைகூடும் என்பதே எமது துணிபு. ஏனென்றால் ஆதியில் ஆங்கிலத்தை கட்டாய பாடமாக்கியபோது அதை பெரும்பாலோர் கற்றனர் என்று கூறமுடியாது. இப்பொழுது சுமார் பதினைந்து அல்லது இருபது ஆண்டுகளாகத்தான் ஆங்கிலம் கற்றவர்கள் தொகை பெருகியுள்ளது. நிலத்தினால் வரும் வளம் சுருங்கி, அதனால் வருவாய் குன்றவே, பெற்றோர்கள் ஆங்கிலம் கற்றவர்களே பணம் சம்பாதிப்பவர்களாய் நல்நிலையிலுள்ளாராய் இருப்பதைப் பார்த்து, தங்கள் புதல்வர்களும் அவ்வாறே சம்பாதித்து நல்நிலையில் வாழவேண்டும் என்று விரும்பினர். ஆங்கிலங் கற்றாற்றான் அவ்வித நிலையை அடைய முடியுமென்பதையும் உணர்ந்து

அவர்களை ஆங்கிலப் பயிலச் செய்தனர். அதைப்போலவே 'ஹிந்தி' யைப் படித்தோரே நல்ல அந்தஸ்தை அடையமுடியும், அவர்கள் தான் இந்திய நாடெங்கு தங்குதடையின்றிச் சென்று வாணிபம் செய்து பணந்திரட்ட இயலுமென்பதை உணர்ந்தால், பெற்ரோர் கள் தாங்களாகவே தம் மக்களை 'ஹிந்தி' பயிலச்செய்வர். இந்த உணர்ச்சி நாளடைவில் ஏற்படுவது திண்ணம். அப்பொழுது 'ஹிந்தி'யை கட்டாய பாடமாக்காமலேயே கனம் மந்திரியின் கொள்கை நிறைவேறும். எனவே பெரும் எதிர்ப்புக்கும் மனக் கசப்புக்கும் இடையே அதை கட்டாய பாடமாக்காது, அதை 'விரும்புவோர் படிக்கலாம்' என்ற பாடமாக பாடசாலைகளில் புகுந்துமாறு கனம் மந்திரியை கேட்டுக் கொள்ளுகிரோம்.

மாயையும் இந்தியா மந்திரியும்

லண்டனில் ராயல் ஏகாதிபத்தியச் சங்கத்தாரும் கிழக்கு இந் திய சங்கத்தாரும் சேர்ந்து, பம்பாய் மாகாண கவர்னராக ஆட்சி நடத்திவிட்டுச் சென்றவரும், இனி வங்காள மாகாண கவர்னாக வரப் போகிறவருமான பிரார்போன் பிரபுவுக்கும் அவர்தம் மனைவி யாருக்கும் ஓர் விருந்தளித்தனர். அக்கூட்டத்தில் இந்தியா மந் திரியான ஜெட்லண்டு பிரபு தலைமை வகித்தார். அ[illegible]காலை அவர் பேசியபோது இந்தியாவிற்கும் இங்கிலாந்திற்கும் இருந்துவரும் நட்புரிமையைப்பற்றிப் பேசினர். அவ்விதம் பேசுங்காலத்துக்கு 'இந்தியர்களின் மனோரதத்தை நிறைவேற்றி வைக்கும் ஒரே நோக் கத்துடனும், பிரித்தானியாவுக்கும் இந்தியாவுக்குமுள்ள நட்புறவை வளர்க்கும் ஒரே நோக்கத்துடனுமே இந்தியாவில் ஜனநாயக ஆட்சி முறையில் ஓர் அரசாங்கத்தை நிறுவ முயற்சி செய்யப்படு கின்றது.....................காங்கிரஸ் கொள்கையில் அரசியலை தகர்த் தெறிய வேண்டும் என்பது இன்னும் காணப்படுகிறது. ஏதோ ஒரு கெட்ட மூடுமந்திர நோக்கத்துடனே நாம் இந்த அரசியல் திட்டத்தை வகுத்திருக்கிறோம் என்னும் விநோதக் கருத்து இன் லும் எங்கும் பரவி நிற்கிறது'...............என்று கூறினர். இது மாயையே (மயக்கம்) என்றும், ஆங்கிலேயர்கட்கும் இந்தியர்கட்கு முள்ள உறவை கறைப்படுத்தும் இந்த மாயை நீக்குவது மனங் க[illegible]த ஒத்துழைப்பு வேண்டுவதின் அவசியத்தினை உணர்வோரின் பெருங் கடமையாகும் என்றும் கூறினர். இந்தியா மந்திரி இவ்

விதம் கூறியதற்கு அண்மையில் கல்கத்தாவில் கூடிய அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டியின் தீர்மானமே காரணமாகும் என்று கருதுகிறோம். கல்கத்தாவில் கூடிய காங்கிரஸ் கமிட்டி கூடுமான வழிகளி லெல்லாம் புதிய அரசியல் திட்டத்தை தகர்த்தெறிய வேண்டும் என்றும், மாகாண அரசாங்கங்கள் ஐக்கிய அரசாங்கத் திட்டத்தை இவ்விதம் எதிர்ப்பதாக தங்கள் சட்ட சபைகளில் தீர்மானம் நிறைவேற்ற வேண்டுமென்றும், இந்த அரசியலை தங்கள் மாகாணங்கள் மீது சுமத்த வேண்டாமென்று பிரிட்டிஷ் அரசாங்கத்தை கேட்டுக்கொள்ள வேண்டுமென்றும் தீர்மானித்தது.

நாட்டில் இந்தப் புதிய அரசியல் திட்டத்தை காங்கிரஸ் மட்டுமல்ல, ஏனையக் கட்சிகளெல்லாமே எதிர்க்கின்றன. அதைப் பற்றி ஒரு நல்வார்த்தை சொல்லுவார் ஒருவருமே இந்தியாவில் கிடையாது. ஏன்? பிரிட்டிஷ் சர்க்காரின் செயல்களே இதற்குக் காரணம். இவ்விதமான நிலைமை ஏற்பட்டதற்கு நமது செயல்களே காரணமென்பதை உணராது இருக்கும் இந்தியா மந்திரி தன் மாயையில் ஆழ்ந்து கிடக்கிறார். இந்தியர்கள் அவ்விதம் கிடக்கவில்லை. பிரிட்டிஷ் அரசாங்கத்தார் புதிய அரசியல் திட்டம் வகுக்கும் சம்பந்தமாய் மிதவாதப் போக்குடையவர்கள் கேட்ட சிறு கோரிக்கையைக்கூட நிறைவேற்றவில்லை. அவர்கள் ஐக்கிய சட்டசபைக்கு மறைமுகமான (Indirect) தேர்தல் கூடாதென்றனர். மாகாணங்கட்கு இரண்டு சட்டசபைகள் வேண்டாம், ஒரு சட்டசபையே போதுமென்றனர். இன்னும் சுதேச ராஜ்ஜியப் பிரதிநிதிகள் அந்த ராஜ்ஜிய குடிமக்களால் தேர்ந்தெடுக்கப் படவேண்டும், அவர்களை சுதேச மன்னர்கள் நியமித்தல்கூடாது என்றனர். இவைகளில் எதையாவது பிரிட்டிஷ் அரசாங்கத்தார் நிறைவேற்றி வைத்தனரா? இல்லையே! உண்மை இப்படியிருக்கும் போது யார்தான் புதிய அரசியலை வரவேற்பார்கள்! இந்த நிலைமை ஒருபுறமிருக்க, இந்தப் புதிய அரசியல் திட்டம் இந்திய அரசாங்கத்தில் மாகாணங்களில் மாகாண சுய ஆட்சி, ஆட்சிக்கு வருமுன்னிருந்த இரட்டை யாட்சியை ஏற்படுத்துகிறது. இரட்டையாட்சியால் நன்மை எதுவும் விளையாது, அதை நடத்த இயலாது என்று இரட்டை யாட்சியை நடத்தியவர்கள் நன்றாக அநுபோகத்தில் அறிந்து கொண்டனர். இரட்டை யாட்சியை ஏற்று நடத்திய கட்சிகள் நாட்டில் செல்வாக்குப் பெறுது போனமைக்கு

அந்த பயனற்ற—மந்திரிகட்கு ஒரு சிறிதும் அதிகாரத்தை மாற்றிக் கொடுக்காத—அந்த இரட்டையாட்சி அரசியல் சட்டமே காரணமாகும். அந்த ஆட்சியில் மந்திரிகள் பொறுப்பல்லாத காரியங்கட்கு எல்லாம் அவர்களையே மக்கள் பொறுப்பாக்கினர். எதிரிகளும் அவ்விதமே பிரசாரம் செய்தனர். மந்திரிகளோ தங்கட்கு அதிகாரம் எதுவுமில்லாதபடி "மத்தளத்துக்கு இரண்டு புறமும் இடி" என்ற நிலைமையில் இருந்து வந்தனர். அதனால் நாட்டில் தங்கட்கிருந்த செல்வாக்கை இழந்தனர். ஆகவே இப்படிப்பட்ட நிலையை உண்டாக்கிய இரட்டை யாட்சியையே மீண்டும் இந்திய அரசாங்கத்தில் ஏற்படுத்தினால், அதை எவ்விதம் அவர்கள் வரவேற்பர்? ஐ. சி. எஸ். போட்டிப் பரீட்சையில் இந்தியர்களோடு ஆங்கிலேயர்கள் போட்டி போட்டு தேற முடியாதவர்களானார்கள். அதனால் ஆங்கிலேய ஐ. சி. எஸ். உத்தியோகஸ்தர்கள் தொகை குறைவதாயிற்று. இதைப் பார்த்த இந்தியா மந்திரி பரீட்சையில் தேறும் திறமையில்லாது போன ஆங்கிலேயர்களையும் ஐ. சி. எஸ். உத்தியோகஸ்தர்களாக நியமிக்க தாம் அதிகாரத்தை பார்லிமெண்டு மூலம் கைக்கொண்டார். இவைபோக இப்பொழுது இந்திய அரசாங்க செக்ரட்டரியேட்டில் ஆங்கிலேய உத்தியோகஸ்தர்களை கொண்டுவந்து நிரப்பப்படுகிறது. இவைகளெல்லாம் இந்தியர்கள் மனதில் நம்பிக்கையை வளர்ப்பதற்கான செய்கைகளா? இந்தியர்களிடம் உண்மையாக அதிகாரத்தை மாற்றிக் கொடுப்பதற்கு ஏதுவான செய்கைகளா? எனவே இப்பொழுது இந்தியா மந்திரியேதான் இவைகளைப்பற்றி ஆலோசித்து, இந்தியாவின் நன்மையைக் கோரியே எல்லாம் செய்யப்பட்டுள்ளது என்னும் மாயையில் வீழ்ந்து கிடப்பதிலிருந்து வெளியேற வேண்டுமே யல்லாது, இந்தியர்களல்ல. இந்தியர்கள் மாயையில் விழாது விழிப்பாகவேதா னிருக்கின்றனர்.

காங்கிரஸ் தலைவர்கட் கொரு வார்த்தை

சென்னை கார்பொரேஷன் காங்கிரஸ்கட்சியில் ஊழல்களும் ஒழுங்கீனமான செய்கைகளுமிருப்பதாக, அக்கட்சியைச் சேர்ந்த சிலர்பேரில் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியார் 'கட்டுப்பாடு' என்னும் பேரால் நடவடிக்கை எடுத்துள்ளார்கள். அவர்கள் திரு. தாமோதரம்நாயுடுவை காங்கிரஸ் கட்சியிலிருந்து தள்ளி கார்பொரேஷனில்

அவர் வகித்துவரும் ஸ்தானத்தை ராஜிநாமாச் செய்யும்படி கேட்டுள்ளார்கள். அவ்விதமே திரு. பி. கே. விநாயக முதலியாரையும் திரு. எம். பாலசுப்பிரமணியத்தையும் கட்சியிலிருந்து தள்ளிவிட்டனர். அவர்களையும் அவர்கள் வகித்துவரும் ஸ்தானத்தை ராஜிநாமாச் செய்யும்படிக் கேட்டுள்ளார்கள். அத்துடன் அவர்கள் எந்த காங்கிரஸ் ஸ்தாபனத்திலும் உறுப்பினர்களாக இருக்கக் கூடாதென்றும் அவர்கள் பெயர்களை அடித்துவிட்டனர். மற்றும் அவர்களை ஸ்தல ஸ்தாபனங்கள், சட்டசபைகள், காங்கிரஸ் கமிட்டிகள் முதலியவைகட்கு தேர்ந்தெடுக்கக்கூடாதென்றும் தடுத்திருக்கிறார்கள். இவர்கள்போக திரு. பி. எம். ஆதிகேசவலு நாயக்கர் பேரிலும் திரு. டி. ஜி. லட்சுமணசுவாமி முதலியார் மீதும் நடவடிக்கை எடுத்துள்ளனர். அவர்களை, கார்ப்பொரேஷன் நிரந்தரக் கமிட்டிகளில் அவர்கள் வகித்துவரும் ஸ்தானங்களை ராஜிநாமாச் செய்யும்படி கேட்டுள்ளார்கள். அவர்கள் கார்ப்பொரேஷனில் மெம்பர்களாக இருக்கும்வரை அவர்கள் எந்தக் கமிட்டிக்கும் அபேட்சகர்களாக நிற்கக்கூடாது என்றும் கூறியுள்ளார்கள். கார்ப்பொரேஷனில் அங்கம் பெருத மற்றொருவர் மீதும் த. கா. கமிட்டியார் தங்கள் பாணத்தை தொடுத்துள்ளார்கள். காங்கிரஸ் கமிட்டி அங்கத்தினர் ஜாபிதாவில் அவர் பெயரை அடித்துவிட்டனர். அவர் காங்கிரஸ் கமிட்டிகட்கோ, ஸ்தல ஸ்தாபனங்கட்கோ, சட்டசபைகட்கோ ஐந்தாண்டுகட்கு அபேட்சகராக நிற்கக் கூடாதென்றும் தடுத்துள்ளார்கள். சில நாட்களாக கார்ப்பொரேஷன் காங்கிரஸ் கட்சியின் பெயர் ஊரில் அடிபட்டு வருகிறது. அங்கு ஒழுங்கீனமான செய்கைகள் தாண்டவமாடுவதாய் புகார்கள் கிளம்பிக் கொண்டிருந்தன. ஆனால் எவ்வித ஒழுங்கீனமான செய்கைகள் செய்யப்பட்டன, செய்யப்படுகின்றன என்பது இதுவரை தெளிவாய் வெளிவரவில்லை. எல்லாம் மூடுமந்திரமாகவே இருக்கின்றன. இப்பொழுது த. நா. கா. கமிட்டியார் இவ்வித நடவடிக்கை எடுத்ததற்கு, கார்ப்பொரேஷன் கல்வி அதிகாரியாக ஒரு பார்ப்பனரல்லாதார் தேர்ந்தெடுக்கப்பட்டதே காரணமாக முளைத்துள்ளதாகத் தோற்றுகிறது. கார்ப்பொரேஷன் கல்வி அதிகாரி பதவிக்கு பலர் மனுப்போட்டனர். அவர்களில் திரு. டி. சிவசைலம்பிள்ளை தேர்ந்தெடுக்கப்பட்டார். கார்ப்பொரேஷன் காங்கிரஸ்கட்சிக் கூட்டத்திலும் அவரே தேர்ந்தெடுக்கப்பட்டார்.

பின்னர் கார்ப்பொரேஷன் கூட்டத்திலும் அவரே தேர்ந்தெடுக்கப் பட்டார். ஆனால் இது திரு. சத்தியமூர்த்திக்குப் பொறுக்க வில்லை. அப்பதவிக்கு மனுப்போட்டவர்களில் திரு. வி. ராஜ கோபால ஐயர் என்பவரும் ஒருவர். இவர் திரு. சத்திய மூர்த்திக்கு சகோதரராம். இவரை அப்பதவிக்கு தெரிந் தெடுக்க வேண்டுமென அவர் முயன்றாராம். அது பலிக்கவில்லை. காங்கிரஸ்கட்சியிலுள்ள பார்ப்பனரல்லாதார்கள் கட்சிக் கூட்டத் திலும் கார்ப்பொரேஷன் கூட்டத்திலும் பார்ப்பனரல்லாதார் ஒருவரையே தேர்ந்தெடுத்தனர். தனது சகோதரரைத் தேர்ந் தெடுக்காது ஒரு பார்ப்பனரல்லாதரையே தேர்ந்தெடுத்ததைப் பார்த்த திரு. சத்தியமூர்த்தி, இது கையுறையின் (லஞ்சத்தின்) வேலை என ஓலமிட்டாராம். அதன் பேரில் த. நா. கா. கமிட்டி யார் விசாரணை ஒன்று நடத்தி மேற்கண்டவாறு நடவடிக்கை எடுத்துள்ளார்கள். ஆனால் அக்கமிட்டியார் இவ்விதம் நடவடிக்கை எடுத்திருப்பதாக பத்திரிகைகளில் அறிவித்துள்ளனரேயன்றி, அதற்குரிய காரணங்களை வெளியிடவில்லை. ஒருவருக்கு தண்டனை விதித்தால், அத்தண்டனை எதற்காக விதிக்கப்படுகிறதென்று தெரி யப்படுத்துவதன்றோ முறை! அதைவிட்டு தண்டனைமட்டும் விதித் துள்ளோம் என்று கூறினால், எதற்காக அத்தண்டனை என்று பொதுமக்கள் உணர்வதெங்ஙனம்? கட்சிக்கூட்டத்திலேயே தேர்ந் தெடுத்த ஒருவரையே கார்ப்பொரேஷன் கூட்டத்திலும் தேர்ந் தெடுத்தது ஒரு குற்றமாகுமா, ஒழுங்கீனமான செய்கையாகுமா? ஆகாவே. எனவே எதற்காக அத்தண்டனை விதித்துள்ளோம் என்று பொதுமக்கட்கு அறிவிக்க வேண்டியது த. நா. கா. கமிட்டியார் கடமையாகும். அவ்விதம் செய்யவில்லையேல், இது எதேச்சாதி காரமேயாகும்.

இங்கு காங்கிரஸ் தலைவர்கட்கு ஒரு வார்த்தை கூற விரும்பு கிறோம். சென்ற பொதுத் தேர்தலில் ஜஸ்டிஸ்கட்சி தோல்வி யடைந்து, காங்கிரஸ்கட்சியினர் பெரும்பான்மையினராக வெற்றி பெறவே, தாங்கள் ஜஸ்டிஸ் கட்சியை அழித்துவிட்டதாக கூறினர். அப்பொழுது நாம் ஜஸ்டிஸ்கட்சி அழித்தாலும் அதன் கொள்கை அழியாது என்றும், ஜஸ்டிஸ்கட்சியின் கொள்கை உயிர்வாழ வகையில்லாத ஜனசமூகத்தில் பெருந்தொகையினரான பார்ப்பன

ரல்லாதாருக்கு வாழ்க்கைக்கு வழிதேடிக் கொடுப்பதே யாகையால் அக்கொள்கை வேறு எவ்விதமாகவேணும் தலைதூக்கவே செய்யும் என்றும், எனவே காங்கிரஸ் தலைவர்கள் தங்கள் கட்சியில் ஒற்றுமை குலையாதிருக்க வேண்டுமானால் இந்தப் பார்ப்பனர்—பார்ப்பனரல்லாதார் போராட்டத்துக்கு திருப்தி அளிக்கக்கூடிய ஒரு முடிவைக் காணவேண்டும் என்றும் கூறியுள்ளோம். அது இப்பொழுது உண்மையாய்விட்டது. ஜஸ்டிஸ்கட்சியை அழித்தும், அது காங்கிரஸ்குள்ளேயே நுழைந்துவிட்டதே என்று திரு. சத்தியமூர்த்தி பதைக்கிறாராம். இனியாவது காங்கிரஸ் தலைவர்கள் காங்கிரஸிலே ஒற்றுமை நிலவுவதன் பொருட்டு இக்கேள்விக்கு ஒரு முடிவு காண முயல்வார்களா?

வாழ்த்துகிறோம்

சென்ற செவ்வாய் அன்று நடந்த சென்னை கார்பொரேஷன் கூட்டத்தில் திரு. ஜே. சிவசண்முகம் பிள்ளை ஏகமனதாய் மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர் தாழ்ந்த வகுப்பை (ஆதிதிராவிட) சேர்ந்தவர். சென்னை கார்பொரேஷனில் தாழ்ந்த வகுப்பைச்சேர்ந்த ஒருவர் அதன் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பது இதுவேதான் முதல் தடவையாகும். எனவே இவரையும் இவரை மேயராகத் தேர்ந்தெடுத்த கார்பொரேஷன் சபையாரையும் வாழ்த்துகிறோம். இவருடைய தலைமையில் கார்பொரேஷன் நிர்வாகம் செவ்வனே நடைபெற்று, இவருக்குப் பேரும் புகழும் பெருகுவதாக.

திரு. மெக்டொனல்டு மரணம்

இங்கிலாந்தில் தொழிற்கட்சி அரசாங்கப் பொறுப்பை வகித்த போது முதல்தொழிற்கட்சி பிரதம மந்திரியாயிருந்த திரு. ராம்சே மெக்டொனல்டு அமெரிக்காவிற்கு கப்பலில் பிரயாணம் செய்து கொண்டிருக்கும்போது இறந்துவிட்டார். இவர் மரணம் இங்கிலாந்துக்கு பெரும் நஷ்டமாகும். இவர் அமெரிக்காவிற்கு உபந்நியாசங்கள் செய்வதற்காக தனது குமாரி திருமதி சீலாவுடன் சென்றார்.

———

ஏமாவி

[எஸ். ஸி. அப்பா]

திருப்பூர் என்கிற நகரத்தில் ஒரு குடியானவன் இருந்தான். அவனுடைய வீட்டிற்கு ஜயப்பூரிலிருந்து ஒருவன் விருந்தாளியாக வந்திருந்தான். அவனுக்கு விருந்து நடந்தது. போஜனம் அருந்திய பிறகு தாம்பூலம் போட்டுக்கொண்டே விநோதமாகத் திருடர்களைப்பற்றி பேசிக்கொண்டிருந்தார்கள். இதில் திருடர்களின் கன்னக்கோல்வைக்கும் திறமையையும், சுவரிலுள் அலமாறிகள், பீரோக்கள், மரதட்டிகள் முதலியவைகளை சந்தடியில்லாது திறப்பது, சாமான்களைச் சப்தமின்றி எடுத்துக்கொண்டு போவது முதலான சாமர்த்தியங்களையும்பற்றி பேசிவிட்டுப் படுக்கைக்குச் சென்றார்கள்.

குடியானவன் தன்னுடைய ஆட்டை வீட்டுவாசலில் கட்டிவிட்டுப் படுத்துக்கொண்டான். விருந்தாளி திண்ணையில் படுத்தான். சாதாரணமாக ஒருவன் அயலூர்களில் சென்று நித்திரைசெய்யப் போவானாகில், அவனுக்குச் சரியானபடி நித்திரை பிடிக்காது. புது இடமானதால் மனதானது சற்று திடுக்கிட்ட பாவனையாகவே இருக்கும். படுக்கைப் பிசகால் பலவாறு கனவுகளும், பகலிற்கண்ட நினைவுகளும், அக்காலங்களில் அறிவிற்குப் புலப்படுவது சகஜம். அதுபோலவே விருந்தாளியும் நித்திரை பிடிக்காமல் படுத்துக் கொண்டிருந்தான். நடுநிசியும் ஆகிவிட்டது. இருட்டோ அமாவாசை இருட்டாக இருந்தது. ஆடானது காலினால் பூமியைப் பிராண்டிக்கொண்டிருந்தது. காதைப் 'படபட' வென்று அடித்தது.

இதைக் கவனித்த விருந்தாளி கள்ளன் வருவதாக எண்ணினான். அந்த ஆடுசெய்யும் சப்தத்தைத் திருடன் கன்னக்கோல் வைக்கிறான் என்று ஊர்ஜிதம் செய்துகொண்டு படுத்தபடியே தன் காலை மெதுவாக நீட்டி ஆராய்ச்சி செய்தான். அப்போது இவன் காலில் ஒரு தூண்பட்டது. திருடன் வந்துவிட்டானென்று ஆத்திரங்கொண்டு, திடீரென எழுந்து ஒரு மூலையில் அடுக்கியிருந்த கன்னங்கரேலென்றிருந்த பானைகளை திருடன் என்று எண்ணி, 'திருடன், திருடன்' என்று கூச்சலிட்டுக்கொண்டே இரண்டு கைகளாலும் பானைகளை இறுகப்பிடித்துக் கொண்டான். பானைகளைப் பிடிக்கவும் அவைகள் 'மடமட' வென்று இவன்பேரில் விழுந்தது. ஒருபானையிலுள்ள எண்ணை இவன்பேரில் கொட்டியது. மற்றொரு பானையிலிருந்து கறிப்பொடி இவன்மேல் விழுந்தது. இவனே இப்பொழுது பார்ப்பதற்குத் திருடனாகத் தோன்றினான்.

இதற்குள், சகலரும் எழுந்து திருடனைப் பிடிக்கத் தயாராய் தீபங்களை ஏற்றிவந்து புதுவிருந்தாளியைத் திருடனென எண்ணி

‘வீண்வெட்டிக்குத்தானே’

[B. K. முத்துசாமி.]

எங்களூர், அவுட்போஸ்டு எட்கான்ஸ்டபிள் காவடிப் பிள்ளைக்கு, பிரபலகேடி ஆண்டியிடம் பிரத்தியேகப் பிரியம். ஊரில் ஏதாவது சண்டை கிண்டை, கலகம் கிலகம், திருட்டுப் பிரட்டு, நடந்தால் முதன்முதல் லாக்கப் செய்வது ஆண்டிப் பிள்ளையவர்களைத்தான். போலீஸ் ஸ்டேஷனிலிருக்கும் காலிடைரியை நாள்தோறும் நிரப்பும் கேடியிடம் எவர்தான் பிரியங்கொள்ளார்?

வருஷத்தில் 364 நாட்கள், அரசாங்கத்தாரின் விருந்திற்கும், கட்டிடத்திற்கும் பாத்தியமுள்ளவன் அவன். ‘ஏன்டா ஆண்டி! ஒரு வாட்டித்தான் திருடி, செயிலுக்குப் போனுயே? ஏன் சும்மா அங்க போய் குந்திக்கறே?’ என்று யாராவது கேட்டால், தனது 30 செங்காவிபடிந்த பற்களை ஒருதரம் இவ்வுலகத்திற்குக் காட்டிவிட்டு அசடுவழிய ‘இந்தக் கட்டை எங்கேயிருந்தால் என்ன? மணிப்படி சோறுமவாராசா கட்டடத்திலே!’ என்பான்.

ஒருநாள் இரவு 8 மணி இருக்கும். காவடிப் பிள்ளை வழக்கப் பிரகாரம் ஸ்டேஷன் நாற்காலியில் சாய்ந்தவண்ணம் அரைத்தூக்கத்திலாழ்ந்திருந்தார். அச்சமயம் ஒரு பருத்த பேர்வழி, அங்கு தோன்றி ஸார்! ஸார்!! என்ன அக்கிரமம்? இருட்டுவதற்குள் இப்படி கண்ணில் மண்ணைத் தூவி பர்ஸை யடித்துக்கொண்டு போய் விட்டானே!’ என படபடப்புடன் கூறினர். திடுக்கிட்டெழுந்த பிள்ளை ‘என்ன? பர்ஸ் போய்விட்டதா? காலிபர்ஸ்தானே!’ என்ருர்.

‘நன்ருய் சொன்னீர்கள். 100 ரூ. நோட்டு வைத்திருந்தேன். பின்புறம்வந்து லபக்கென வாயில் துணியைத் திணித்து பாவி அடிச்சுக்கிண்டு போய்ட்டானே........’ என கண்களில்வந்த சிறுதுளி கண்ணீரைத் துடைத்துக்கொண்டே கதறினர் வந்தவர். ‘டேய் 303!’ என்ருர் பிள்ளை. முதல் நாள்தான் விடுதலையாகி வந்திருந்த ஆண்டியுடன் வந்துநின்ருன் 303, கூப்பிட்ட 60-வது நிமிஷத்தில்:

அடித்தனர். பிறகு அடி பொறுக்காமல் தன்னுடைய வரலாற்றைச் சொன்னதும் புதுவிருந்தாளி என்று அறிந்து எல்லோரும் ஏமாளித் தனமடைந்த விருந்தாளியைக் கைகொட்டி நகைத்தனர். மறுநாள் அவனுக்கு மற்ருேர் விருந்து நடந்தது. என்னே இவனது வீரச் செயல்!

வழக்கப்பிரகாரம், தான் திருடவேயில்லே என ஆண்டி சாதிக்க, மேன்மைதங்கிய நியாயாதிபதி மாமூல்படி 3 மாதக் காலம் சிறை தண்டனை விதிக்க, ஒரு தினுசாக கேஸ்முடிந்தது. சுவர்க்கலோகத்திற்குள் போவதுபோல் மிகுந்த உற்சாகத்துடன் சர்க்கார் விடுதிக்குள் 'தில்லானு' பாடிக்கொண்டே நுழைந்தான் ஆண்டி.

'என்னப்பா....வந்துட்டாயா மறுபடியும்? நீ இல்லாமே பொழுதே போகல்லே ஆண்டி....' என வந்தவிருந்தாளியைக் குசலப்பிரசனம் செய்தான் ஜெயில்வார்டர் ஜெகந்நாத நாயுடு.

'அண்ணே! உன்னைப் பார்க்காமே எம்மூட்டுநேரம் குடிசையிலேயே குந்தியிருப்பது? அதான் வந்துட்டேன்....' என்று சந்தோஷப் பெருக்குடன் கழறினன் கேடி. பத்து தினங்கள் பறந்தன. மறுநாள் சொல்லிக் கொள்ளாமலே போய்விட்டது. அதற்கடுத்தநாள், 'அண்ணே! ஊருலே ஏதாச்சும் விசேசமுண்டா?' என்று வார்டரை வினவினன் ஆண்டி.

வார்டர் நாயுடு சொன்னான்:—'ஆண்டி! ஆண்டி!! ஒரு விசேசமில்லே! சொல்ல மறந்துபூட்டேனே....நேத்து ரவைப் பொழுது உனது குடிசை யிருக்குப்பாரு, அது தீப்புடிச்சு வெந்து சாம்பலாப் போயிடுச்சாமே....'

'என்ன? என்ன? இது நிசங்களா?' என்ருன் கலக்கத்துடன் ஆண்டி. ஆமாம், என்பதற் கறிகுறியாக, நாயுடு தலையை யசைத்துக் கொண்டிருக்கும்போதே, 'ஆ!' என யலறியபடி கீழே சாய்ந்தான் பிரபல கேடி.

இவ்வெதிர்பாரா நிகழ்ச்சியைக்கண்ட நாயுடு, 'என்னப்பா ஆண்டி?' என்ருன்.

ஆண்டி ஈனஸ்வரத்துடன் கூறுவான்:—

'அண்ணே! நான் இந்தத் தடவை செயிலுக்குவந்து தண்டனை யனுபவிக்கிறது வீண்வெட்டிக்கு. தடவைக்குத்தடவை நான் சுரண்டறபோது எல்லாம் சொத்து எனக்கு சொந்தம். ஆனு, இந்த வாட்டிக் கடைத்தெருவிலே அடிச்ச பணப்பையை, நூது ரூபாய் நோட்டை. அக்கினிபகவான் அடிச்சுக்கிட்டுப் போய்ட்டான். அப்பன்னு, இந்தத் தண்டனை வீண்வெட்டிக்குத்தானே?'

பூந்தி, அல்வா, சாது

[கே. ஆர். வேணுகோபாலன்]

ஓர் ஊரில் ஐயர் ஒருவர் இருந்தார். அவருக்குப் பூந்தியின் பேரில் மிகவும் பிரியமாதலால் அவருக்குப் பூந்தி என்று பெயர். அவர் மனைவிக்கு அல்வாவின் பேரில் விருப்பமாகையால் அந்தம்மாளுக்கு அல்வா என்று பெயர். அவர் வீட்டில் பிரியமாய் ஓர் கன்றை வளர்க்கிறார். அதன் அருமைப் பெயர் சாது. இம்மாதிரி முறையே இவர்களுக்குப் பட்டப் பெயர் வெகு சீக்கிரத்தில் கிடைத்தது. நாமும் அப்பெயரைக் கொண்டே அவர்களை அழைப்போம். ஓர்நாள் பூந்தி, தன் சாதுவை ஓட்டிக்கொண்டு வயற்புறத்திற்கு மேய்க்கச் சென்றார். அவ்வழியே ஓர் சாது சங்கத்திலிருந்து ஓர் பரம சாது தப்பி வரும்போது நம் ஐயரைக் கண்டு 'ஐயா இன்று நான் உம் வீட்டில் கொஞ்சம் பசிப்பிணியை நிவர்த்தித்துக் கொள்ள நினைக்கிறேன்' என்றார். உடனே பூந்தி வந்தவரை நோக்கி 'ஐயா! வீட்டில் அல்வா இருக்கிறது. போய்ச் சாப்பிடும்' என்றார். உடனே அப்பரம சாது வீடிருக்கும் இடத்தை அவராலேயே தெரிந்துகொண்டு வீட்டிற்குச் சென்றார், அங்கே அல்வா அம்மாள் ஏதோ வேலை செய்துகொண்டிருந்தாள். பிறகு வந்தவரை நோக்கி 'எங்கே? வந்தீர்கள்' என்று வினவ, வந்தவர் 'நான் வெகு தூலைவிலிருந்து வருகிறேன். மிகவும் பசியாயிருக்கிறதென்று நம் ஐயரிடம் சொன்னேன். அதற்கு அவர் வீட்டில்போய்ச் சாப்பிடும் என்று சொன்னார்' எனபதிலளித்தார். 'ஆனால் உட்காந்திருங்கள் பூந்தி வரட்டும்' என்று சொன்னாள். உடனே அவருக்கு மிகவும் சந்தோஷமாய் விட்டது என்? அல்வாவுடன் பூந்தியும் வருகின்றதே என்றுதான். பிறகு சிறிது நேரம்சென்று பூந்தி சாதுவை ஓட்டிக் கொண்டுவந்து தன் மனைவியை நோக்கி சாதுவைக்கட்ட கயிறு கொண்டுவா என்றார். உடனே, உட்கார்ந்திருந்தவர் யாரிடமும் சொல்லாமல் எழுந்து ஓடினார். என்? ஓடக்காரணமென்ன? தானும் ஓர் சாதுவாய் இருந்தமையாலும், அவ்வாட்டின் பெயர் (சாது) என்று அறியாமையினாலும், தன்னை நயவஞ்சகமாய் அழைத்துவந்து கட்டப்போகிறார்கள் என்ற பயத்தினாலும் அவ்வாறு செய்தார். உடனே, நம் பூந்தி அவர் ஓடினதின் காரணத்தை யறிந்து கொண்டு 'ஐயா இந்தாரும், இந்தாரும்' என்று கையில் கயிற்றைப் பிடித்தவண்ணம் பின் தொடர்ந்தார். இவர் கையில் கயிற்றுடன் ஓடி

வருவதைக்கண்ட முன்சென்றவர் பின்னும் கொஞ்சம் துரிதமாய் ஓடினுர். பிறகு, ஓர் இடத்தில் இருவரும் சந்தித்தனர். நம்பூந்தி தன் வரலாற்றை முழுமையும் சொல்லித் தன்வீட்டிற்கு அழைத்துச் சென்று அன்னமிட்டு அனுப்பினுர்.

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களால் தயார் செய்யப்பட்ட மருந்துகள் யாவும் கிழ்க்கண்ட விலாசங்களில் பெற்றுக்கொள்வலாம்.

முத்துவிநாயகர் ஸ்டோர்,
கல்லல் S. I. R. (இராமநாதபுரம் ஜில்லா.)

லங்கா குரோஸரி ஸ்டோர்,
செட்டித் தெரு, கொளும்பு.

தி. ஞானப்பிரகாசம்,
122, மோகல் வீதி, ரங்கோன்.

வி. சா. காசி செட்டியார்,
47, மார்க்கட் வீதி, சிங்கப்பூர்.

A. V. R. A. அடைக்கப்ப செட்டியார்,
19, ஜடாமுனி கோயில் தெரு, மதுரை.

A. N. லெட்சுமணன் செட்டியார்,
வலம்புரி. வலையபட்டி
பொன்னமராவதி போஸ்டு, புதுகோட்டை ஸ்டேட்.

A. V. R. A. ADYCAPPA CHETTIYAR,
Lalji Mansing Building, 1st Floor Lohar Chawl,
Near Crawford Market, Bombay. 2.

பத்தினி பக்தி

[தேவகோட்டை ஸ்ரீ V. இராமநாதன்]

(All rights reserved with the author)

முன் வெளியான பாகத்தின் சுருக்கம் :—வீரபுர ராஜ்ய மன்னர் ஆல் சந்ததியற்று இறந்தமையால் அவருக்குப் பின் குடிகள் அவ்வரசவழி வந்த பத்மாவதி தேவி என்னும் அணங்கை அரசியாக்கினர். தன்னை அரசியாக்கியதற்காக நன்றி செலுத்தும் பொருட்டு இராணி பத்மாவதி தேவி ஓர் சபை கூட்டினாள். அதில் தான் குடிமக்கட்கு நன்றி செலுத்துவதாகவும், அவர்களின் நன்மைக்கே தான் எப்பொழுதும் உழைப்பதாகவும், தான் பெண்கள் முன்னேற்றத்தை முதன்மையாக கவனிக்கப் போவதாகவும், அதற்காக மகளிர் குருகுலமொன்றை தோற்றுவிப்பதாகவும், அதை சரிவர நடத்துவதற்கு ஜெயசேகர் என்பவரின் குமாரி இந்துபாலாவை நியமிப்பதாகவும், மற்றும் அயல்நாட்டிலுள்ள இந்தியர்களின் நலத்தைக் காக்க சேனாதிபதியின் குமாரர் சுரேந்திரரை நியமிப்பதாகவும் கூறுகிறாள். அத்துடன் சபை கலைகிறது.

இரண்டாம் அத்தியாயம்.

என்னே பிரமனின் சிருஷ்டி! அடடா! கார்முகிலனைய கூந்தல்! பிறைத்திங்களும் வெஃகும் நுதல்! கயற்கண்! முத்தன்ன வெண்ணகை! பவள இதழ்! விற்புருவம்! ஆலிலை வயிறு! எட்பூநாசி! சங்கு நிகர்த்த கண்டம்! சாயலரம்மை! மின்னல் எழில்! கட்டுமஸ்தான தேகம்! கச்சின்கண் அடங்காக் கனதனம்! கடைந்தெடுத்தாற் போன்ற கைகால்கள்! இயற்கையழகு இவ்வாறாக, தங்க நிறமான தேகத்தில் அவள் உடுத்தியிருந்த பச்சை நிறப் பட்டாடையும் அரக்கு நிற இரவிக்கையும் அழகுக்கு அழகு செய்தாற்போல் ஆயிரமடங்கு அவள் எழிலை எடுத்துக் காட்டின. காதிலணிந்திருந்த வயிரக்கம்மல்களும், கழுத்திலிட்டிருந்த பொற்சங்கிலியும், கரத்தில் போட்டிருந்த மெல்லிய வளையல்களும், நெற்றியிலிட்டிருந்த ஜவ்வாதுத் திலகமும் அவளைக் காண்போர் மனதைக் கவரத் தக்கவாறு விளங்கின. இயற்கையழகுடன் செயற்கை அழகும் ஒன்றினால் அதனை விஸ்தரிப்பதெங்ஙனம்? சுருங்கக் கூறினால் ஓவியவல்லுநர் ரவிவர்மாவால் தீட்டப்பட்ட எந்த பெண்ணுருவமும் அவளுக்கிணையாகாதெனலாம். இன்னும் முற்றும் துறந்த முனிசிரேஷ்டர்களும் இவளைக் கண்டால்

கண்டதும் காமுற்று நிலை குலைவரென்றால் அவளின் அழகை மேலும் விஸ்தரித்தால் மிகைப்படுமாதலின் மேல் நோக்குவோம்.

இப்பேரழகி யார்? இவளின் தொழிலென்ன? மணமான மாதோ? என்றால், இன்னும் மணம் ஆகவில்லை. ஏந்திழை பெயர் இந்துபாலா. மகளிர் குருக்குலத்தை மாண்புடன் மேற்பார்ப்பது இவள் தொழில்.

இவளுக்கு வயது சுமார் இருபத்திரண்டு இருக்கலாம். தேசப் பற்றும் ராஜப்பற்றும் மிக்க ஜெயசேகர் என்பாருக்கும் அவர் தர்ம பத்தினி ரூபாவதி என்ற அம்மையாருக்கும் ஏகபுத்திரியாகப் பிறந்து நாளொருமேனியும், பொழுதொருவண்ணமுமாக வளர்ந்து உற்ற வயதில் உரியகலை பல பயின்று ராணி பத்மாவதியின் அன்பிற்கும் அபிமானத்திற்கும் ஆளாகி மகளிர் குருக்குலத்தை மேற்பார்வையிடும் சீரிய தொண்டேற்றுச் சிறப்புடன் விளங்கினாள். இவளின் அழகிலும் இவள் பெற்றோரின் திரண்ட ஆஸ்தியிலும் ஆசைகொண்ட பலர் இவளை மனைவியாக அடைய ஒருவரோடொருவர் போட்டியிட்டனர். ஆனால் நம் இந்துபாலாவோ தனக்கு எல்லா வழியாலும் ஒத்தநலனும் எழிலும் வாய்ந்த சேனாதிபதி ஜெயபாலரின் குமாரன் சுரேந்திரநாதன்மேல் காதலுற்றிருந்தாள். இவளின் பெற்றோர் இவள் விருப்பப்படி நடாத்திவைக்கச் சித்தமாயிருந்தனர்.

உண்ணக் குறைவில்லை; உடுக்கக் குறைவில்லை; எண்ணக் குறைவில்லை; எக்குறைவுமில்லை; என்ற நிலையிலுள்ள இந்துபாலா ஒருநாள் மாலையில் தங்கள் பங்களாவின் மேன்மாடியிலுள்ள பெரிய ஹாலில் போடப்பட்டிருந்த வட்டமேஜை முன் அமர்ந்த வண்ணம் ஏதோ ஒரு புத்தகத்தைப் படித்துக்கொண்டிருந்தாள். அப்பொழுது மேஜைமேலிருந்த 'டெலிபோன்' மணி அடித்தது. புத்தகத்தை வைத்துவிட்டு டெலிபோன் கருவியை எடுத்துக் காதில் வைத்துச் சிறிதுநேரம் கேட்டாள். சட்டென்று புன்னகை பூத்த முகத்தினளாய், 'ஹலோ! நல்லது. நான் இரவு ஏழு மணிக்கு உங்கள் வரவை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறேன். கட்டாயம் வருவீர்களா? நிச்சயந்தானே? ரைட்டோ!' என்று கூறி டெலிபோன் கருவியைக் கீழேவைத்து மறுபடியும் புத்தகத்தைப் புரட்டினாள். புத்தகத்தைக் கண்கள் பார்த்தன. ஆனால் கருத்துட் புகவில்லை. காரணம் பின்னர் அறிவீர்கள்.

சரியாக ஏழுமணிக்கு மேன்மாடியினின்றும் கீழிறங்கி நேராகப் பின்புறமுள்ள பூங்காவில் புகுந்து சலவைக் கல்லாசனமொன்றில் கலையோ பிணையோ கவினார் மடமயிலோவென அமர்ந்

திருந்தாள். இளந்தென்றல் வீசிக்கொண்டிருந்தது. பூங்காவின் மத்தியிலுள்ள நீர்நிலையைச் சுற்றியுள்ள மின்சார தீபங்கள் பிரகாசித்துக்கொண்டிருந்தன. அவைகளின் ஒளி நீர்நிலையில் விழுவதால் உண்டான பிரதி ஜோதியும், விரியுமலர்களின் நறுமணவாடையும், பழுத்த கனிகளின் இனித்த வாசனையும் அங்கு வீற்றிருந்த நம் இந்துபாலாவின் இதயத்தில் ஓர்வித உணர்ச்சியை யூட்டின. அதன் உத்வேகத்தில் காதல் ஊசலாடியது. சட்டென்று எழுந்தாள். முகம் மாறுபட்டது. 'இன்னும் ஏன் வரவில்லை? இங்கு தானே வந்து சந்திப்பதாக டெலிபோன் மூலம் சொன்னார். ஒருவேளை நான்தான் சரியாகக் கேட்கவில்லையோ? இல்லாவிட்டால் அவர் தான் ஒருவேளை மறந்துவிட்டாரோ? வரட்டும் சொல்லுகிறேன்!' என்று தனக்குள் முணுமுணுத்தபொழுது பூங்காவின் பின்புற வாயலில் ஒரு மோட்டார் வண்டி வந்து நின்ற சத்தம் கேட்டது. அதிலிருந்து சுமார் இருபத்து ஐந்து வயது மதிப்பிடத்தக்க கட்டழகனொருவன் உள் நுழைந்தான். இந்து பாலா நின்றவிடம் வந்தடைந்தான்.

சிலிர்த்த இரவில் தெண்ணிலா வீசிய அந்நேரத்தில் பேரழகியை ஒரு கட்டழகன் அணுகினனென்றால் அங்கு காதலைத் தவிர வேறென்ன நிலவும்! அவனைக் கண்ட அவள், 'என்ன இது?...........நீங்கள்...........வரவர........' என்று அம்மட்டோடு நிறுத்தி விழிக்கொரு சிமிட்டும் வெளிக்கொரு பகட்டுமாக பூமியைப் பார்க்கவண்ணம் காற்பெருவிரலால் தரையில் ஏதோ கீறிய வண்ணம் [illegible]ருள். அவனும் சற்று மௌனமாக நின்றான். அவளோ நிப[illegible]ந்தபாடில்லை. அவனாலோ அதற்கு மேலும் தாமதிக்க முடியவில்லை. எனவே அவளின் மலர்க்கரங்களைப்பற்றி, வேடிக்கையாக 'சேலைகட்டிய மாதரை நம்பினால் தெருவில் நின்றலைய வேண்டியதுதான்' என்றான். அவன் பிடிப்பிலிருந்த தனது கரங்களைத் தவிர்த்து, 'ஆம்! வேஷ்டி கட்டிய ஆடவர்களை நம்பினால் வெளியில் நின்றலைய வேண்டியதுதான்' என்றாள். அவன் சிரித்தான். அவளை பார்போடணைத்து, 'இந்து! இந்து!' என்று அவள் பெயரைச் சுருக்கிக் கூப்பிட்டான்.

இந்துபாலா:—'இவ்வளவு நேரம் ஏன் தாமதம்? என்னை ஏழு மணிக்கே வந்து காத்திருக்கச் செய்ததற்காக உங்களைத் தக்கபடி சிக்ஷிக்க வேண்டும்!' என்று கூறி புன்னகையொடு தனது பெருவிரலால் அவனின் குழிந்த கன்னத்தில் கொஞ்சலாகத் தடவி கடைக்கண்ணால் நோக்கினாள்.

வாலிபன்:—'தண்டனையா! ஆம்! வேண்டியதுதான்!' என்று கூறித் தலையசைத்தான்.

இந்துபாலா:—‘ஆம்! தண்டிக்காவிட்டால் இன்னுமொரு முறைகூட இவ்வாறு செய்யத் துணிவீர்கள்’ என்று கூறினாள். ஒருவரையொருவர் இறுகத் தழுவினரேயல்லாது வேறெவ்வித தண்டனையும் நடைபெறவில்லை. ‘காதல! இங்கு வரும்படியாகக் கூறிய காரணமென்ன?’ எனக் கேட்டாள்.

வாலிபன்:—‘இந்து! வேறு விசேஷமில்லை. ராணி பத்மாவதி தேவியார் உனக்கிட்ட கட்டளையை ஏற்று செவ்வனே நடத்தி வருகிறாய்! அதேபோல் என் கட்டளையை நிறைவேற்ற நாளைப் பன்னிரண்டு மணிக்கு இந்நாட்டை விட்டுப் புறப்பட எண்ணியுள்ளேன். ஆதலால் என் காதற் களஞ்சியமாகிய உன்னைக் கண்டு செல்லவே இங்கு வரச் செய்தேன்’ என்றான்.

இந்துபாலா:—‘என்ன?........என்ன? நாளைக்குப் பயணமா? என்னைப் பிரிந்து செல்லவும் துணிந்தீர்களா? ஊஊம்! முடியாது.... முடியாது’ என்று சிறு குழந்தைபோல் மொழிந்தாள்.

வாலிபன்:—‘இந்து! என்ன உளறுகிறாய்? நீ என்ன ஒன்றும் அறியாதவளா? நீயும் நானுமட்டும் காதலுறவாடிக் களித்திருந்தால் நாமும் நம் நாடும் க்ஷேமமுற்றுவிட முடியுமா? நமது நாட்டில் பிறந்த சகோதர சகோதரிகள் உண்ண உணவிற்கும் உடுக்க உடைக்கும் நிற்க நிழலுக்கும் திண்டாடித் தெருவில் நிற்கிறார்கள் அயல்நாடுகளில். அந்நிலையிலும் அவர்களைப் புண்படுத்துகிறார்கள் அவ்வவ்த் தேசத்தார்கள். அப்படியிருக்க அவர்களின் துயர்களையச் செல்லும் என்னைத் தடுப்பது முறையாகுமா?’ என்[illegible].

இந்துபாலா:—‘என் அன்பே! அதெல்லாம் நி[illegible]ான்! ஆனால் நான் உங்களைப் பிரிந்து எப்படியிருப்பேன்?’ [illegible]ன்று கூறிக் கலங்கினாள்.

வாலிபன்:—‘பேதாய்! கலாசாலையில் நாம் கல்விபயின்ற பொழுது நமக்குள் ஏற்பட்ட அன்பு காதலாகியது. அக்காதலை ஸ்திரமென்றெண்ணி கண்ணீர்விடும் உன்பால் எனக்கு இரக்கமேற்படுகிறது. கண்மணி! உன் பெற்றோர்கள் உன்னை வேறொருவனுக்கு வாழ்க்கைப்படச்செய்தால் என் செய்வாய்?’ என்றான்.

இந்துபாலா:—‘ஓகோ! அந்தப்பயம் வேண்டாம்! முன்பே அவர்களை இந்த விஷயத்தில் சரிக்கட்டிவிட்டேன். அதன்பிறகுதான் அன்பு காதலாகியது! ஒருவேளை உங்கள் பெற்றோர்கள் என்னை மருமகளாக அடைய மறுத்தால்?’ எனக்கேட்டாள்.

வாலிபன்:—‘இந்து! அவர்களை ஆரம்பத்திலேயே இந்த விஷயத்தில் இணங்கச் செய்துவிட்டேன். நம் காதலுக்கு எவ்வித இடையூறுமில்லை. கடவுள் கடாக்ஷம்’ என்றான்.

சற்றுநேரம் இருவரும் மெய்மறந்த ஆனந்தத்திலிருந்தனர். இந்த நிலையில்அவன் சபலமடைந்தான். 'காதலி! என்றான். அதற்கு மேல் அவன் மன எழுச்சியை வார்த்தைகளால் கூற முடியவில்லை. இப்பொழுது இந்துபாலா அவனுக்கு சுய உணர்ச்சியை ஊட்டினாள். 'இந்து! சென்று வருகிறேன்' என்றுகூறி அவளது பிடிப்பிலிருந்து விடுவித்துக்கொண்டு இரண்டடி நடந்தான். அதற்குமேல் அவன் கால்கள் அடியெடுத்து வைக்க மறுத்தன. இந்து அவனிடம் ஓடி இறுகக் கட்டிக்கொண்டு, 'காதல! முதன் முதலில் வலங்கைத் தீவிற்குச் செல்லுங்கள். அங்கு எவனோ ஒருவன் நம் நாட்டு மக்களை காலால் உதைத்துத்தள்ள வேண்டுமென்று கழுதையாய் கத்தினானும். அவனைத் தலைகுனியச் செய்யுங்கள். வெற்றி உங்கட்கே!' என்றாள்.

'பிரிய காந்தா! சென்றுவருகிறேன்' என்றான்.

'சென்று வருக! சீக்கிரம் வருக! க்ஷேமமாய் வருக' என்றாள். மணியும் ஒன்பதுக்குமேலாகியது. இருவரும் பிரிய மனமற்றுப் பிரிந்து நடக்க மனமற்று நடந்து அகன்றனர்.

வாசகச் சகோதர சகோதரிகள் இதுவரை நடந்த சம்பாஷணையிலிருந்து இந்துபாலாவுடன் உரையாடி அகன்றவன் சுரேந்திரநாதன் என்பதை அறிவார்களாதலின் அதனைக் கூறாது விடுத்தனம்.

மறுநாள் மாலை சுமார் நான்குமணி வேளையில் வெற்றிபுரியிலிருந்து நூறுமைல்களுக்கப்பாலுள்ள இரயில்வே நிலையமொன்றில் நம் இந்துபாலா வண்டியின் வருகையை எதிர்பார்த்து நின்றிருந்தாள். வண்டியும் வந்தது. அவள் மிகுந்த பரபரப்புடன் வண்டியினுள் யாரையோ தேடுபவள்போல் காணப்பட்டாள். வண்டியினுள்ளிருந்து 'இந்து' என்று கூப்பிடும் குரல் கேட்டது. அவள் சட்டென்று சத்தம் வந்த திக்கில் பார்த்தாள். ஆனந்தங்கொண்டாள். 'காதல! உங்களை மறுமுறையும் கண்டு செல்லவே இங்கு வந்தேன்! என்னை மறந்திடவேண்டாம்! மறந்து அங்கொருமாதை நினைந்திட வேண்டாம்! காரியத்திலேயே கண்ணாயிருங்கள். இதோ எனது புகைப்படமொன்று' என்றுகூறி தனது புகைப்படத்தைக் கொடுத்தாள். அவன் தன் பெயரிழைக்கப்பட்ட மோதிரமொன்றைக் கொடுத்தான். அதனைக் கண்களில் ஒத்திக்கொண்டாள். கரங்குவித்தாள். கண்ணீர் சொரிந்தாள். 'கருணைக் கடவுள் அருள் சுரக்கக் கூடுவோம்' என்றாள். வண்டியும் புறப்பட்டது. இந்துபாலா வெளிவந்து தனது மோட்டாரிலேறி ஊர் நோக்கினாள்.

(தொடரும்)

பொல்லாப்பின் போக்கு

[குமாரன்]

'என்ன காலமிது? இப்படியா அக்கம்பக்கத்து நல்ல மனுஷாளிடத்திலெல்லாம் பொல்லாப்பு தேடிக்கொள்வது!' என்று விசனித்தாள் கனகு.

ஆனால் அகோரம் பிள்ளையின் கோபம்மட்டும் இன்னுந் தணியவில்லை. உண்மையில் அவர் ஒரு அகோர மூர்த்தியாகவே விளங்கினார்.

'என்ன அக்கிரமம்! பொழுதுவிடிந்தால், பொழுதுபட்டால் இந்தத் தொல்லைதானா? அவன் கொல்லை மேடென்றால் அதற்காக நம் கொல்லையில் அவன் சாக்கடையைத் திருப்பிவிடுவதா? எத்தனை காலம் இந்தச் சங்கடத்தைப் பொறுப்பது? என்றைக்குத்தான் அவன் வீட்டில் இடிவிழுமோ! இத்துன்பம் ஒழியுமோ!...........'

கனகு அவர் முன்பு வாய்திறக்கப் பயந்தாள். தன் கணவர் ஒரு முன்கோபி என்பது அவளுக்குத் தெரியும். பக்கத்து வீட்டுப் புண்ணியமூர்த்தி பிள்ளை மானி, ஒரு வம்பு தும்புக்குப் போகமாட்டார் என்றெல்லாம் அவள் அறிவாள். ஏதோ தவறுதலாக சாக்கடை ஜலம் வழிந்தோடி விட்டதென்றால் அதற்கு அவரென் செய்வார்? தன் கணவர் இப்படி அவரைக் கடிந்துகொண்டது அவளுக்குச் சிறிதும் பிடிக்கவில்லை. தான் ஏதேனும் சொல்லப் புகுந்தால் ஒருவேளை அவர் தன்மீது சீறிவிழுந்தாலும் விழுவார் என அஞ்சிய அவள், வாய் பேசாது தன் வீட்டலுவல்களைக் கவனித்துக்கொண்டிருந்தாள்.

அடுத்த வீட்டுப் புண்ணியமூர்த்தி பிள்ளை அந்த வீட்டுக்குக் குடிவந்து 2 வருஷ காலந்தானாகிறது. இந்த 2 வருஷ காலமும் இருவரும் சிறிதும் மனமுறிவில்லாமல் சினேகமாகவே யிருந்தனர். இந்தச் சாக்கடை சம்பந்தமாக எப்போதேனும் அகோரம் பிள்ளைக்குச் சிறிது கோபம் வருவதுண்டு. ஆனால் அது அதிக நேரம் நீடித்திருக்காது. அதனால் இருவரது நட்புக்கும் எவ்வித ஹானியும் உண்டானதில்லை.

இந்த முறைமட்டும் என்ன காரணத்தாலோ அகோரம் பிள்ளையின் கோபம் ரௌத்திராகாரமாய்விட்டது. புண்ணியமூர்த்தி பிள்ளையின் முகத்தில் இனி விழிக்க யோக்கியதை இல்லாதபடி பேசிவிட்டார்.

அகோரம் பிள்ளைக்கு ஒரு பெரிய எஸ்டேட்டில் குமாஸ்தா வேலை. மாதம் 5 கல நெல்லும் ரூ. 2 ரொக்கமும் சம்பளம். சம்பளத்தைத் தவிர 'கிம்பளம்' எதுவும் கிடையாது. சொந்த

பாவத்தில் வரும்படி வரக்கூடிய சொத்து எதுவுமில்லை. எனவே மாதாமாதம் வரும் சம்பளத்தைக்கொண்டு அவர் தன் குடும்பத்தை நடத்த வேண்டியிருந்தது. இளமையில் சொகுசாக வளர்க்கப்பட்ட அவருக்கு அந்த வரும்படியில் காலந்தள்ளுவது சிரமமாகத்தானிருந்தது.

எஸ்டேட்டு மணியம் என்றால் அது ஒரு தாஸில்தார் போல வாக்கும் என்று அவர் அடிக்கடி எண்ணிக்கொள்ளுவார். அப்போது வயலில் பாடுபடுவோர்களது மனம் புண்படும்படியாகப் பேசிவிடுவார். இதனால் குடியானவர்கள் பலர் இவரைச் சமயம் பார்த்து கவிழ்த்துவிட எண்ணி யிருந்தார்கள்.

புண்ணியமூர்த்தி பிள்ளையை விரோதித்துக் கொண்டதற்குச் சில தினங்களுக்கு முன்னால் அகோரம் பிள்ளைக்கு அவருடைய முதலாளியிடமிருந்து தபால் ஒன்று வந்தது. அதைப் படித்துப் பார்த்த அவர், அப்படியே கல்லாய்ச் சமைந்துவிட்டார்.

'இன்று முதல் உம்மை வேலையினின்றும் நீக்கிவிட்டோம. நாளை அவ்விடம் வரும் நமது காரியஸ்தர் வீரபாகு பிள்ளையிடம் கணக்குகள் ஜாடாவையும் ஒப்பித்துவிடவும்'—என்று அந்தக் கடிதத்தில் வரையப்பட்டிருந்தது. இதை யறிந்தபோது அவர் மனைவி மனஞ்சோர்ந்து நின்றாள். 'என்ன காலமோ இது!' என்று பெருமூச்செறிந்தாள்.

அன்றுமாலை வீரபாகு பிள்ளை வந்ததே அவரிடம் எல்லாவற்றையும் கொடுத்துவிட்டுத் திரும்பினார். சம்பள பாவத்தில் அவர் பத்துவழிதான் அதிகமாயிருந்தது. சீக்கிரத்தில் அதை எப்படியாவது கொடுத்து விடுவதாக வீரபாகு பிள்ளையிடம் தெரிவித்துக் கொண்டார்.

பின்னும் ஒரு வாரத்தில் தீபாவளி. ஊரில் எங்கும் சீனு வெடிகளின் ஓசை காதைப்பிளக்கிறது. வீடுகளில் பலகார வாசனை மூக்கைத் துளைக்கிறது. புண்ணியமூர்த்தி பிள்ளை வீட்டிலும் சிறுவர்கள் பட்டாஸ் கட்டுகளைச் சுட்டவண்ணமிருக்கின்றனர். வீட்டினுள்ளிருந்து ஏதோ சில பக்ஷணங்களின் வாசனை வெளிவந்துகொண்டிருக்கிறது.

ஆனால் அகோரம்பிள்ளையின் வீட்டில் தீபாவளியை வரவேற்க எவ்வித ஏற்பாட்டையுங் காணோம். கையில் துட்டில்லாமல் என்ன காரியமாகும்?

தீபாவளி தினமும் வந்தது. 'குழந்தைகள் பட்டாசு, பட்சணம்' என்று கனகாளைப் பிடுங்கித் தின்கின்றன. அவள் ஏதோ சில சாக்குப் போக்குகள் சொல்லி அவர்களைச் சமாதானப்படுத்த முயன்றாள். ஆனால் அதே சமயத்தில் அவள் உள்ளம் துக்கத்தால்

குமுறுவதை அவர்கள் கண்டார்களா? தினசரி உணவுக்கே பண்டமில்லாத நிலைமையில் இந்தத் தீபாவளி எப்படி போகப்போகிறதோ என்று ஏங்கினள். கூடத்திலிருந்த கணவரிடம் வந்து நின்று ஏதோ சொல்ல வாயெடுத்தாள்.

அவர் முகத்தில் ஈயாடவில்லை. சோகமே உருவெடுத்தாற்போலிருந்தார். சமையலறையில் தன் மனைவியிடம் குழந்தைகள் செய்த 'லூட்டி'களை அவர் கவனியாமலில்லை. 'ஐயோ! இந்தப் பாழும் தீபாவளி இப்போது ஏன் வந்தது?' என்று கிலேசத்துடன் குந்தியிருந்தார்.

கணவர் முகஞ்சோர்ந்திருப்பதைக்கண்ட கனகு பேசாமல் உள்ளே போய்விட்டாள். ஏதோ சொல்லவந்த அவள் தம்மனே நிலை யறிந்து மௌனமாய் உள்ளே சென்றதைக்காண அவர் மனந் தாளவில்லை. என்றும் தளராத அவருள்ளம் அன்று பெரிதும் நெகிழ்ந்துவிட்டது. தனக்குப் பழக்கமான இரண்டொருவரிடஞ் சென்று ஒரு சிறு தொகையேனும் கடனாக வாங்கி இந்தத் தீபாவளியைப் போக்கலாமென்று வெளியே புறப்பட்டார்.

அன்றிரவு 5 மணி யிருக்கலாம். வீதிகள்தோறும் குழந்தைகளும் பெரியவர்களும் புது ஆடைகள் உடுத்து வாணங்களையும், வெடிகளையும் கொளுத்தித் தீபாவளியை வரவேற்றுபசரித்தவண்ணமிருந்தனர். காலையில் வெளியே சென்ற அகோரம்பிள்ளை அப்போது குனிந்த தலையுடன் தம்வீட்டை நோக்கி நடந்தார். தூரத்தில் வரும்போதே அவர் வீட்டிலும் வெடி சப்தம் கேட்டது. என்றாலும் அவரால் தம் செவிகளை நம்பமுடியவில்லை. ஆனல் அருகில் வந்தபோது அவருக்குண்டான ஆச்சரியத்திற் களவில்லை. அப்படியே அவர் ஸ்தம்பித்து நின்றுவிட்டார்.

'அப்பா! அப்பா! நீ எங்கே போனே? நானு புதுவேட்டி கட்டிருக்கேனே, நீ பாத்தியா! அம்மா ஒனக்குகூட பெரியவேட்டி வச்சிருக்காளே!' என்றான் பாலு.

'என் அப்பா! நேத்தி காலமே பிடிச்சு நீங்க எங்கே போயிருந்தீங்க? தீபாவளி வர்ர சமயத்திலாவது நீங்க வீட்டுக்கு வந்துட வேண்டாமா? அம்மா ஒங்களைக் காணும் காணுமின்னு சொல்லிண்டிருக்கே!' என்றாள் மீனு.

'உள்ளேவா அப்பா!' என்று சொல்லித் தன் தந்தையின் கையைப் பிடித்து இழுத்துப்போனன் பாலு.

தன் கணவர் வந்துவிட்டதைக்கண்ட கனகு எண்ணெய்க் கிண்ணத்தைக் கொண்டுவந்து அவர் எதிரில் வைத்து, 'ஏன் இந் நேரம்! நாளுங் கிழமையும் சுருக்க வரக்கூடாதா? நீங்கள் அனுப்

பிய துணிமணி, சாமான்கள் எல்லாம் நேற்று காலையிலேயே வந்து விட்டதே!'

'என்ன என்ன! நான் அனுப்பினேனு? எனக்கொன்றும் புரியவில்லையே!' என வியப்போடு தம் மனைவியை நோக்கினர்.

'என்ன இப்படிச் சொல்லுகிறீர்கள்? நீங்கள் வெளியே போன ஒரு நாழிக்கெல்லாம் அந்தப்பயல் வேலன் ஒரு தட்டில் கடைச் சாமான்கள் கொண்டுவந்தானே!

'யாரு?...........வேலனு?............

'ஆமாம். அதற்கப்புறம் பொழுதோட ஜவுளிக்கடையிலிருந்து ஒரு பையன் துணி மூட்டை யொன்று கொண்டுவந்து வைத்தான். அவன் யாரோ புதுசாயிருந்தான். அவனண்டேகூட சொல்லி அனுப்பினேனே உங்களை வரச்சொல்லி!

'என்ன ஆச்சரியம் இது! இப்படி யார் அனுப்பியிருக்கக் கூடும்? பாவாடை சட்டைகளெல்லாம்கூட அவரவர்களுக்கு அளவு பிடித்துத் தைத்தது போலிருக்கே!—நான் தேடிப்போன பேர்வழி களெல்லாம் கைவிரித்து விட்டார்கள்...........'

'பின்னே! கடவுள்தான் நாம் படும் கஷ்டத்தைக்கண்டு இப்படி அனுப்பியிருப்பாரோ!'

என்னவோ! எனக்கு எல்லாம் அதிசயமாகத்தானிருக்கிறது.'

பிறகு மங்கள ஸ்நானம் முடித்து புதுவுடை யுடுத்திப் பலகார முண்டு திண்ணைக்கு வந்தார். அப்போது பக்கத்து வீட்டுப் புண் ணிய மூர்த்திபிள்ளை 'என்ன பிள்ளைவாள்? கங்கா ஸ்நானமாச்சா?' என்று கேட்டுக்கொண்டே வந்தார்.

அகோரம் பிள்ளைக்கு அவரைப் பார்க்கவோ, அவருடன் பேசவோ சம்மதமில்லை. என்றாலும் தம் வீடு தேடிவரும் அவருடன் எப்படிப் பேசாமலிருப்பது? 'ஆதலால் வாருங்கள்—ஆச்சு' என்று சொல்லி வைத்தார்.

அன்றுமாலை கடைத்தெருபக்கம் போனபோது வழியில் தம் வீட்டிற்கு முதல் நாள் சாமான் கொண்டுபோன வேலனைக் கண்டார். சாமான்களை யார் அனுப்பியது என்று அவர் கேட்ட தற்கு அவன் தனக்கு நிச்சயமாகத் தெரியாதென்றும், ஆனல் புண்ணியமூர்த்தி பிள்ளை தன் முதலாளியுடன் பேசியிருந்துவிட்டுப் போகையில் ஒரு ஜாப்தாவையும் சில்லரையையும் கொடுத்துப் போனரென்றும் கூறினன். அப்பால் ஜவுளிக்கடைக்கார சிறுவனும் புண்ணியமூர்த்தி பிள்ளையே அந்த உடைகளை யெல்லாம் வாங்கி அனுப்பினர் என்று தெரிவித்தான். இந்தச் செய்தி அவர் "இருதயத்தை உளி கொண்டு பிளந்ததுபோலிருந்தது!

———

ஐயோ பேய்!

[காரமடை S. குழந்தைசாமி.]

நான் இருக்கும் ஊராகிய காரைவனமென்பது சுத்தப் பட்டுக்காடு. எழுத்து வாசனை என்பதே இன்னதென்றறியாதார்தான் பெரும்பாலும் இங்கு குடியிருக்கின்றனர். இவ்வூரில் எனக்கு நெருங்கிய நண்பர்களுள் கிருஷ்ணசாமி, வடிவேலு, திருமலை ஆகிய மூவரும் முக்கியமானவர்கள். இவர்களுக்குச் சிறிது எழுத்து வாசனை இருந்தபோதிலும் வைதீகத்திலும் மூடநம்பிக்கையிலும் எனது கிராமவாசிகளின் அண்ணுத்தைகள்தான். இருப்பினும் இவர்களுள் கிருஷ்ணசாமி என்பவன் சிறிதளவு பகுத்தறிவுள்ளவனென்றே சொல்லலாம்.

ஓர் நாள் இரவு 9 மணி சுமாரிருக்கும். போஜனத்தை முடித்துக்கொண்டு வீட்டின் வெளிப்புறமுள்ள திண்ணையில் உட்கார்ந்து கொண்டிருந்தேன். அப்போது மேற்கூறிய நண்பர்கள் மூவரும் இராப்போஜனத்தை (அவர்கள் வீட்டில்தான்) முடித்துக்கொண்டு வழக்கம்போல் என் வீட்டிற்கு வந்தார்கள். அப்போது கிருஷ்ணசாமி எங்களைப் பார்த்து, 'வாங்கோ, பிரதர் ஜாலியாக வாக் போவோம்' என்முன். இந்த யோசனையைமற்ற இருவரும் ஆமோதிக்கவே, நாங்கள் நால்வரும் சேர்ந்து வாக்கிங் புறப்பட்டோம்.

சந்திரன் தன் 16 கலைகளும் நிறம்பப்பெற்றவனுய் வானத்தில் தேஜோமயமாய்ப் பிரகாசித்துக் கொண்டிருந்தான். நற்கமல மன்றலை வாரிவீசும் தென்றல் காற்ருனது 'புஸ் புஸ்' என்று வீசிக் கொண்டிருந்தது. எங்களை அறியாமல் வெகுதூரம் நடந்து சென்று விட்டோம். ஆஹா! தண்மதியும் தென்றற்காற்றும் சேர்ந்திருக்கும் வேளையில் காதல் விஷயமாகவும் சம்பாஷித்துக்கொண்டே சென்ருல், மணிதான் தெரியுமா? கால்கள்தான் நோகுமா? அன்றிக் கண்ணுக்குறக்கம்தான் வருமோ! இல்லவே இல்லை.

இவ்விதம் நாங்கள் வெகுதூரம் நடந்துசென்று கடைசியாக சுடுகாட்டுக்கு முன்னுள்ள 'இடுகாட்டுக்குச்' சமீபத்தில் வந்தோம். அப்போது வடிமேலு திடீரெனத் தன் கால்களுக்கு 'பிரேக்' போட்டு 'ஸார்! ஸார்! என்னவேலை செய்துவிட்டோம்! நில்லுங்கள். நாம் எங்கேவந்து சேர்ந்திருக்கிருேம் தெரியுமா?' என்முன்.

நான்:— ஏன்! இடுகாட்டுக்குச் சமீபத்தில். அதனுலென்ன?

வடிவேலு:—ஆம். இவ்விடத்தின் விஷயம் உமக்குத் தெரியாது. இங்குதான் பேய்கள் உலாவித்திரிவது. ஆதலால் நாம் இத்துடன் திரும்பிவிடுவோம்.

திருமலை:—ஆமாம். ஆமாம். என் தாத்தாகூட அடிக்கடி சொல்வார். அவர் இரவு 8 அல்லது 9 மணிக்கு சாப்பிட்டுவிட்டு தோட்டத்திலுள்ள நாய்க்கருக்கு (நாய்க்கர் என்பது ஓர் மனிதன் என்று நினைத்து விடாதீர்கள். நாய் என்னும் மிருகம்) கொஞ்சம் சாதம் எடுத்துக்கொண்டு இவ்வழியாகத்தான் தோட்டத்திற்குப் போவாராம். அவ்விதம் போகும்போதெல்லாம் ஒருபேய் வந்து அவரை வழிமறித்து நிற்குமாம். உடனே என் தாத்தா கொஞ்சம் சாதத்தை எடுத்து எறிந்து தூ! தூ!! தூ!!! என்று மூன்றுதரம் துப்புவாராம். உடனே அந்தப் பேய் இவர் எறிந்த சாதத்தை எடுத்துக்கொண்டு அதோ தெரிகிறதே, அந்த ஆலமரத்தில்போய் ஏறிக்கொள்ளுமாம். இவ்விதம் என் தாத்தா பலதரம் தன் கண்ணாரப் பார்த்ததாகச் சொல்லியிருக்கிறார். ஆதலால் நான் வரவில்லை. நீங்கள் வேண்டுமானால் போங்கள்.

வடிவேலு:—ஆமாம். இப்போதுதான் எனக்கும் ஞாபகம் வருகிறது. நம்ம மேற்குவீதி கந்தசாமி மகன் மயில்சாமி இறந்து விட்டானே, அவன் எதனால் இறந்தான் தெரியுமோ? அம்மரத்தி லுள்ள 'கருமுனி' (பேயின் பெயர்) அடித்துத்தான். ஆடுமேய்த்துக் கொண்டிருக்கும்போது அப்பேய் வந்து 'குப்குப்' என்று அடித்த தாம். மூன்றாம்நாள் அவன் இறந்துவிட்டான். ஐயோ! எனக்கு பயமாயிருக்கிறது. நான் வரவில்லை' என்றான் கைகால்கள் நடுங்க.

கிருஷ்ணசாமி:—போங்க சார்! பேயாவது கீயாவது! எல்லாம் மனப்பேய்தான். வேறொன்றுமில்லை.

திருமலை:—அப்படியல்ல. நெருப்பில்லாமல் புகையுண்டாகாது, என்பதைப்போல் 'பேய்' என்று ஒன்று இல்லாமல் அப்பெயர் உண்டாகக் காரணமில்லையல்லவா? ஆதலால் பேய் இருக்கும். இல்லாமல் போகாது. எதற்கும் ஏன் அவ்வளவு பாடு? அது இருந் தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, நாம் வாக்கிங் போனது போதும்; திரும்பிச் செல்வோம்.

இவர்களுடைய வாக்குவாதத்தையும் தொடை நடுக்கத்தையும் கண்டு எனக்கு என்ன சொல்வதென்று தோன்றவில்லை. 'அவர்களே முடிவு செய்யட்டும்' என்று நினைத்துக்கொண்டு நான் மௌனமாக நின்றுகொண்டிருந்தேன். அப்போது கிருஷ்ணசாமி பேச ஆரம் பித்து 'அதுமுடியாது. வாக்கிங் போனது போதும் என்றால், சரி. மற்றப்படி பேய் இருக்கிறது, அதனால் போகக்கூடாதென்றால் நான் ஒத்துக்கொள்ள முடியாது. அந்தப் பேய் வந்து நம்மை என்ன செய்கிறதென்றுதான் பார்ப்போமே' என்றான்.

வடிவேலு:—ஓஹோ! பெரிய தீரன்போல் பேசுகிறாயே. நாங் களும் உன்னைப்போல் ஆண்பிள்ளைகள்தான். எங்களுக்கும் தைரி

யமும் ரோஷமும் உண்டு. ஆனால் அவற்றைக் காட்டவேண்டிய இடத்தில் காட்டவேண்டும். தெரியுமா?

கிருஷ்ணசாமி:—அட போங்கையா! உங்கள் தைரியம் எனக்குத் தெரியும். இல்லாத ஒன்றைப்பற்றி நினைத்துக்கொண்டு இவ்விதம் நடுங்குகிறவர்கள், ஏதாவது உண்மையிலேயே இருந்துவிட்டாலோ, 'இம்மென்னுமுன் இருநூறும் முன்னூறும், அம்மென்றால் ஆயிர மடியும்தான்' என்றான்.

நான் சிரித்தேன்.

திருமலை:—சரி, நீ ஒரு பெரிய தீரனைப்போல் பேசுகிறாயே. எங்கே அந்த ஆலமரத்தின் மேலேறி ஒரு ஆணி அடித்துவிட்டு வா பார்க்கலாம்!

கிருஷ்ணசாமி:—அவ்விதம் செய்தால் எனக்கென்ன கொடுப்பாய்.

திருமலையும் வடிவேலும்:—(ஒரே மூச்சாக) நூறுரூபாய் கொடுக்கிறோம்.

'சரி' என்று சொல்லிவிட்டு கிருஷ்ணசாமி தன் சட்டைப் பையிலிருந்த ஒரு ஆணியையும் தெருவிலிருந்த ஒரு கல்லையும் எடுத்துக்கொண்டு ஆலமரத்தை நோக்கி நடந்தான். நாங்கள் மூவரும் அம்மரத்துக்குச் சுமார் 100 கெஜ தூரத்தில் நின்று கொண்டு அவனைக் கவனித்தவண்ணம் இருந்தோம். அப்போது திருமலை தன் திருவாயைத்திறந்து, 'அடே, பரவாயில்லை. கிருஷ்ண சாமி உண்மையிலேயே பெரிய தீரன்தான். அதோ மரத்தின் மீதேறிவிட்டானே!' என்றான்.

வடிவேலு:—ஆமாய்யா! அதோ ஆணியும்கூட அடிக் கின்றானே! சப்தம் கேட்கிறதே!

நான்:—சந்தேகமென்ன? ஆணிதான் அடிக்கின்றான்.

வடிவேலுவுக்கும் திருமலைக்கும் கிருஷ்ணசாமி மரத்தின் மீதேறி ஆணி அடித்துக் கொண்டிருந்தது பேராச்சரியத்தை விளை வித்தது. பேய் உண்டு என்பதில் கொஞ்சம் சந்தேகம்கொள்ள ஆரம்பித்தனர்.

அப்போது 'ஐயோ பேய்!' என்று கத்தினான் கிருஷ்ணசாமி. நாங்கள் மூவரும் உற்றுநோக்கினோம். கிருஷ்ணசாமி தான் நின்று கொண்டிருந்த மரக்கிளையிலிருந்து நிலைதப்பியவனாய்த் தொங்கிக் கொண்டிருந்தான். 'ஐயோ! பேய் பிடித்துக்கொண்டதே' என்று அலறும் சப்தம் மங்கிமங்கிக் கடைசியாக நிசப்தமாயிற்று.

எனக்கு இன்னது செய்வதென்று தோன்றாமல் பின்னால் திரும்பிப் பார்த்தேன். திருமலையும் வடிவேலும் '100 கெஜ பந்தயம் (100 Yards race') போகிறவர்களைப்போல் வாயுவேக மனோவேக மாய் கிராமத்தைப் நோக்கிப் பறந்து கொண்டிருந்தனர். 'ஐயோ பேய்' என்ற கிருஷ்ணசாமியின் பயங்கரக் குரலும் ஏனைய நண்பர் கள் இருவருடைய ஓட்டமும் எனக்கிருந்த சிறிது தைரியத்தையும் கைவிடச் செய்தது. எனவே, கிருஷ்ணசாமியிடம்சென்று அவனைக் காப்பாற்றலாமென்ற யோசனையைக் கைநழுவவிட்டு நானும் ஓட ஆரம்பித்தேன் கிராமத்தை நோக்கி.

மூவரும், (வடிவேலு, திருமலை, நான் ஆகிய மூவரும்) சென்று என் வீட்டின் வெளித்திண்ணையில் உட்கார்ந்தோம். ஓடிய களைப்பால் என்னால் ஒன்றும் பேசமுடியவில்லை. திருமலையும் வடிவேலும் சற்று முன்னாடியே வந்திருந்தார்களாகையால், அவர்கள் களைப்பு நீங்கிப் பேச ஆரம்பித்தனர்.

திருமலை:—பார்த்தீர்களா! பேய் இல்லை என்று வீம்பு பேசி னானே. இப்போது என்ன ஆயிற்று?

வடிவேலு:—சார்! அனியாயமாகப் பேயின் கையில் மாண்டு விட்டானே, ஸார்! ஐயோ கிருஷ்ணசாமி! இப்படியா உன் ஆயுள் முடியவேண்டும்?

திருமலை:—என் செய்வது! 'அடாது செய்பவன் படாத பாடுபடுவான்' என்று பெரியார்கள் தெரியாமலா சொல்லியிருக் கிறார்கள்?

வடிவேலு:—சரி, இவ்விஷயத்தை கிருஷ்ணசாமியின் பெற்றோர் களுக்குத் தெரிவிக்க வேண்டாமா?

நான்:—(இதற்குள் களைப்பு நீங்கப் பெற்றவனாய்) ஆமாம். உடனே சென்று தெரிவிக்கவேண்டும். நடங்கள் போவோம்.' என்று சொல்லவும், அவர்கள் இருவரும் எழுந்தனர். மூவரும் சென்று கிருஷ்ணசாமியினுடைய பெற்றோர்களிடம் இதுவிஷய மாகத் தெரிவித்தோம். உடனே அவனுடைய தாயார் 'ஐயோ மகனே! மாண்டாயோடா' என்று பலவாறு சொல்லிக் கதறி அழ ஆரம்பித்தாள். பின் சொல்லவேண்டுமா? அக்கம்பக்கத்திலுள்ளவர் களெல்லாம் வந்து கூடிவிட்டனர். சிறிதுநேரத்தில் விஷயம் ஊர் முழுதும் காட்டுத்தீப்போல் பறவிப்போயிற்று.

கிருஷ்ணசாமியினுடைய தகப்பனார் தன் தோட்டத்து ஆட் களையும் கிராமவாசிகளில் சிலரையுமாகச் சுமார் 50 ஆட்கள்வரைக் கூட்டிக்கொண்டு தீவட்டிகள் பிடித்துக்கொண்டு ஆலமரத்தை நோக்கிச்சென்றார். நாங்களும் சென்றோம். ஆனால் அம்மரத்தில்

நாங்கள் எதைக்கண்டோம்? பேயை என்று நினைக்கின்றீர்கள்? இல்லை. ஆனால் கிருஷ்ணசாமி மரக்கிளையிலிருந்து தொங்கிக்கொண்டிருந்தான். ஏன்? பேய்பிடித்துக் கொண்டதாலா? அல்ல. அவன் ஆணி அடிக்கும்போது முன்னால் தொங்கிக்கொண்டிருந்த தன் சட்டைச் துணியையும் சேர்த்து அடித்துவிட்டான். பிறகு கீழே இறங்க முயலும்போது சட்டையும் சேர்த்து அடிக்கப்பட்டிருப்பதால், அது தடுக்கலாயிற்று. அப்போது கிருஷ்ணசாமிக்கு திடீலென மனதில் பயம் உண்டாகவே, பேய்தான் பிடித்துக் கொண்டதென நினைத்துவிட்டான். இவ்விதம் மனப்பேய் அவனை அடிமைகொள்ள தன் நிலைதப்ப நினைவுமாறித் தானாக உளறிக் கொண்டு தொங்கலானான். உடனே அவ்வாணியைப் பிடுங்கி, கிருஷ்ணசாமியைக் கீழே கொண்டுவந்து கொஞ்சம் ஜலம் முகத்தில் தெளித்து விசிறியால் வீசினோம். சுவாசம் நின்று நின்று வந்து முடிவில் எழுந்தான் கிருஷ்ணசாமி.

வெளி வந்து விட்டது! வெளி வந்து விட்டது!!

தாசிகளும் தாசிகாந்தர்களும்

(ஓர் அரிய புதிய நாடக நூல்)

தமிழ்ப்புலவர் ஏ. சோக்கலிங்கம் பிள்ளை எழுதியது.

இந்நூல் தமிழர்களுக்கு ஒரு சிறந்த விருந்தாகவும், அநுபவ பொக்கிஷமாகவும், அறிவு புகட்டும் அருமை நண்பனாகவும் விளங்கும். இந் நூலைச் சிலபக்கங்கள் வரையில் படித்தால் கடைசிவரையில் படித்து முடிக்கும்படித் தூண்டுமென்பதற்கையமில்லை.

நல்ல கிளேஸ் காகிதத்தில் சித்திரப் படங்களோடு கூடிய அழகிய இப் புத்தகத்தின் விலை

எட்டணா தான்.

தபால் சிலவு அணா 2. 10 அணா ஸ்டாம்ப் அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

‘தமிழரசு’ புத்தகாலயம்,

31, வைத்தியநாத முதலி வீதி, சென்னை.

லக்ஷ்மி நாராயணன்

[R. V. ராமா ராவ்]

நடேசையர் பாலாற்றின் கரையின்மீது அமைக்கப்பட்டுள்ள வாணியம்பாடி யெனும் புண்ணிய நகரில் திலகமாய் விளங்கினார். பெருந்தனவந்தர். காங்கிரஸ் அபிமானி. சீர்திருத்தத்தில் பெரிதும் ஈடுபட்டவர். விதவா விவாகச் சங்கத்தின் தலைவர். இவர் அப்போதைக்கப்போது பற்பல விடங்களில் கூட்டங்கள் கூட்டி தான் உபன்னியாசங்கள் செய்வார். இவரது புகழ் தென்னாட்டில் எங்கும் பரவியிருந்தது. அன்னவருக்கு நாராயணன் எனும் 22 வயது மதிக்கத்தக்க ஓர் குமாரனும், சிறுவயதிலேயே தாரமிழந்த இராஜேஸ்வரி யென்னும் நாமமுள்ள 16 வயதுக் குமாரியும் உண்டு.

நாராயணன் B. A. பட்டம் பெற்றவன். அழகில் மன்மதனையும் தோற்கடிக்கக் கூடியவன். குணத்திலோ அனைவரிலும் சிறந்தவன். தந்தையைவிட பன்மடங்கு பொதுஜனங்களின் நன்மையில் ஈடுபட்டவன். உத்தியோகத்தைக் கனவிலுங் கருதாதவன். வாலிபச் சங்கத்தின் தலைவன். சுருங்கக் கூறுமிடத்து நாட்டினது நலத்தைக் கருதி உயிரைப் பறிகொடுக்கும் தியாகி.

கோபால்சாமி முதலியார் நடேசையருடைய ஆத்ம நண்பர். பக்கத்துத் தெருவில் வசித்து வருகிறார். காருண்ணியவள்ளல். ஜனங்களின் கஷ்டத்தைப் போக்க உலகத்தில் அவதரித்த உத்தம புருஷர். உடல் பொருள் ஆவி மூன்றையும் அர்ப்பணம் செய்யும் சீலர். தாரமிழந்த பல பெண்களுக்குத் தனது சொந்த செலவில் மறுமணம் செய்திருக்கும் புண்ணிய சீலர். இவ்வுத்தமருக்கு லக்ஷ்மி யென்னும் திருநாமமுள்ள 16 வயது கொண்ட ஓர் மங்கையுண்டு. லோகமாதாவாகிய இலக்ஷ்மியே பூமண்டலத்தில் அவதாரஞ் செய்திருக்கிறாள் எனச் சொல்லும்படியாக அவ்வளவு வனப்பு வாய்ந்தவளாகக் காணப்பட்டாள். அவள் கருமுகில் போன்ற நீண்ட கூந்தலையும் காமன்வில்லைப்பழித்த புருவத்தையும், ரோஜாப்பூவை யொத்த மெல்லிய கன்னங்களையும், பவளம் போன்ற சிறு உதடுகளையும் உடுக்கை போன்ற நுண்ணிய இடையையும், பூரித்த கொங்கையையும், கதலி போன்ற தொடைகளையும் பொன்போன்ற மேனியையுமுடையவளாய்த் தோன்றினாள்.

நமது நாராயணன் லக்ஷ்மியின் ரூபலாவண்யத்தில் பெரிதும் மதிமயங்கி அவளையே கண்கண்ட தெய்வமாக மதித்து வந்தாள். அவளைக் காணாது கணப்பொழுதும் இருக்கமாட்டாள். சிறுவயது முதற்கொண்டு ஒரே பள்ளியில் படித்தவர்கள். பள்ளிக்குப் போகும்

போதும் வரும்போதும் ஒன்றாகவே யிருப்பார்கள். மாலை நேரங்களில் உல்லாசமாய் ஆற்றங்கரைக்குச் சென்று அங்குத் தோன்றும் இயற்கைக் காட்சிகளைக் கண்டு ஆனந்திப்பார்கள். இராஜேஸ்வரியும் சிற்சில சமயங்களில் இவர்கள் கூடவே யிருப்பாள். லக்ஷ்மி இவளிடத்தில் பூர்ண அன்பு கொண்டவளாய் தங்கையென மதித்து வந்தாள். கோபால்சாமி முதலியாரும் இவர்கள் மூவரும் ஒரு மிக்கப் பழகுவதைப் பார்த்து மிகவும் சந்தோஷ மெய்தினர்.

வருடங்கள் சில கடந்தன. ஓர்நாள் மாலை லக்ஷ்மி தனது பூங்காவில் நாராயணனுடன் ஓர் மேடையின்மீது உட்கார்ந்து உரையாடிக்கொண்டிருந்தாள். திடீரென நாராயணன் முகம் வேறுபட்டது. தலையைக் கீழே தாழ்த்தினான். லக்ஷ்மி திடுக்கிட்டவளாய் ஒன்றும் தோன்றாது திகைத்தனள். பின்பு ஒருவாறு மனத்தை வசப்படுத்திக்கொண்டு நாராயணனுடைய சிரசைத் தடவிக் கொடுத்து 'நண்பரே! என்றுமில்லாதவாறு இன்று தற்செயலாய் தமது திருமுகம் வாட்டமடைந்ததின் காரணம் யாதோ? தாங்கள் இவ்வித நிலைமையில் இருப்பதைப் பார்க்க என் மனம் சகிக்குமா? நான் தங்களிடம் ஏதாவது தவறுதலாய் நடந்து கொண்டேனோ? எனக்கு யாதொன்றும் விளங்கவில்லையே. தயை செய்து காரணத்தைப் பகலுவீர்களாகில் என்னால் இயன்றதைச் செய்ய தயாராகக் காத்துக்கொண்டிருக்கிறேன்' என்று அன்பு ததும்பிய குரலில் லக்ஷ்மி நாராயணனை வினவலும் 'பிரியை, எல்லாவற்றிற்குப் காரணம் நீயே. பல நாட்களாக உன்னிடம் சில விஷயங்களைத் தெரிவிக்கவேண்டி நாவெடுக்கும் போதெல்லாம் என்னையும் தெரியாமல் ஏதோ ஒன்று என் தொண்டையை கெட்டியாக அழுத்தி வந்தது. இன்று என் உள்ளம் கரைபுரண்டுவிட்டது. நீ என் மனதை முற்றுங் கொள்ளைகொண்டு விட்டாய். நீயே இவ்வுலகில் எனக்குத் தகுந்த ஆருயிர்க் காதலியென்று தீர்மானித்து விட்டேன். உன்னையன்றி பரஸ்திரீகளைக் கனவிலும் கருத மாட்டேனென்பது முக்காலும் நிச்சயம். உன்னுடைய பதில் யாதோ' எனத் தடுமாறிய குரலில் கூறி நிறுத்தினான் நாராயணன். லக்ஷ்மிக்கு யாது பதில் சொல்லுவதெனத் தெரியவில்லை. சற்று நேரம் மனம் ஊசலாடிற்று. நாராயணன் இவ்விதம் தன்னைக் கேட்பானென அவள் சற்றும் எதிர்பார்க்கவில்லை. மனம் சிந்தனையில் ஆழ்ந்தது. பிறகு ஓர்வித முடிவிற்கு வந்தவளாய் நாராயணனை நோக்கி 'நண்பரே, நானும் தங்கள்பால் அளவுகடந்த காதல் கொண்டுள்ளேன் என்பதில் சற்றும் ஐயமில்லை. ஆனால் நான் தங்களைக் காதலிப்பதானது முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப் படுதலைப் போலவன்றோ இருக்கின்றது. நான் இதுவரை எனது எண்ணத்தை வெளிக்குக் காட்டாமல் அனலிலிட்ட மெழுகுபோல்

உருகி வந்தேன். நாம் ஒருவரை யொருவர் காதலிப்பது அர்த்த மற்றதாகவன்றோ இருக்கிறது. சற்றும் நீதியாகத் தோற்ற வில்லையே. தாங்களோ உயர்குலத்தினர். நானோ வேறு குலத்தினள். மேலும் உங்கள் பெற்றோர்கள் உங்கள் ஏற்பாட்டிற்குச் சம்மதிப் பார்களோ? அவர்களை யறியாமல் நாம் முடிவிற்கு வருவது சரி யல்லவே' என்று கூறி நிறுத்தலும் நாராயணன் பேசத் தொடங்கி 'எனது காதற்களஞ்சியமே! யாது கூறினை? குலம் என்பது எங்கே யுளது? சகலரும் ஒன்றென்பதை நீ உணரவில்லையா? 'சாதி இரண் டொழிய வேறில்லை' யென்பதை நீ மறந்துவிட்டாயோ? நான் யார் என்பதையும் நீ அறிந்திலை போலும். சீர்திருத்த இயக்கத்தில் முற்றும் மூழ்கினவனன்றோ நான். ஜனங்கள் மூடநம்பிக்கை யாலும் அறிவின்மையாலும் பலவாறாக பிதற்றுகின்றனர். அவை களையெல்லாம் போக்கப்பாடுபடுவதே நமது முதற்கடமை.என் தகப் பனார் எனது சம்மதத்திற்கு விரோதமாக ஒருக்காலும் போகார். நீ ஒன்றும் தெரியாததைப் போலல்லவா பேசுகிறாய். ஒருக்கால் என்னைச் சோதித்துப் பார்க்கலாமென நினைக்கிறாயோ? இப்போ தாகிலும் உனது பவளவாய் திறந்து உனது விருப்பத்தைத் தெரியப்படுத்துவாய்' என்று நாராயணன் புகலவும 'இதுவே எனது விருப்பத்திற்கு யறிகுறி' யாகுமெனச் சொல்லிக்கொண்டே நாராயணன் கன்னங்களில் முத்தமிட்டாள் லக்ஷ்மி.

'ஆம் ஒன்று மறந்து விட்டேன். நீங்கள் கூறியது யாவும் உண் மையே யெனினும் இராஜேஸ்வரிக்கு ஏன் இன்னும் மறுமணத் திற்கு ஏற்பாடு செய்யவில்லை? நான் நேற்று இதைப்பற்றி அவளைக் கேட்டதற்கு 'எனது தந்தை அதைப்பற்றி பிரயத்தனம் எடுத்துக் கொள்ளவில்லை. நான் எவ்விதம் அவரைக் கேட்கமுடியும் எனக் கூறினாளே. சற்று யோசித்துப் பாருங்கள், இது தருமமாகுமா? உங்கள் வீட்டிலேயே இவ்விதம் வைத்துக்கொண்டு நாட்டிற்கு உபதேசம் செய்வது தகுமா?' என்று நாராயணனை நோக்கி லக்ஷ்மி கேட்கவும்; நாராயணன் 'ஆம் பிரியே! நீ கூறினது முற்றும் சரி. நானும் அதைத்தான் பல நாட்களாக நினைத்துக்கொண்டிருக் கிறேன். கூடிய சீக்கிரம் விவாகம் நடத்த வேண்டுமென்பது எனது கோரிக்கை. எனது தகப்பனாருக்கு இது விஷயத்தை இன்று நினைவு படுத்துகிறேன்' என்று சொல்லிய பின்பு இருவரும் வேண்டா மனதுடன் ஒருவரைவிட்டொருவர் பிரிந்தனர்.

நடேச ஐயர் ஓர்நாள் மாலை காப்பியருந்திவிட்டு சாய்வு நாற் காலியில் சாய்ந்தபடியே நாராயணனைக் கூப்பிட்டு 'நாராயணா இன்று நான் உனக்கு ஓர் நல்ல விஷயத்தைத் தெரிவிக்கப் போகி றேன். உனக்கு விவாகம்செய்ய ஏற்பாடு செய்திருக்கிறேன். இது உனக்குச் சம்மதந்தானே' என்று கேட்டார்.

நாராயணனுக்கோ அடிவயிற்றில் நெருப்பு விழுந்ததைப் போலாயிற்று. ஒருசமயம் தான் லக்ஷ்மியுடன் நேசமாயிருப்பதை யறிந்து அதைத்தான் சொல்லுகிருரோவென நினைத்தான். எதற்கும் அவரது உள்ளக் கருத்தை யறிந்துகொள்ள ஆவல்கொண்டவனுய் யாரையப்பா நிச்சயம் செய்திருக்கிறீர்கள் ?' என்று கேட்டுவிட்டு தகப்பனுரின் முகத்தையே உற்றுக் கவனித்தவண்ணமிருந்தான்.

'யாரை யென்ன நிச்சயம் செய்வது! நமக்குத்தான் பெண் தேடவேண்டிய அவசியமே யில்லையே. இதோ பார் இக்கடிதத்தை. எனது மைத்துனர் எழுதியிருக்கிருர். அவருடைய பெண் சரசாவை உனக்குக் கொடுக்கப் பிரியப்படுகிருர். ஒரே மகள். ஏராளமான சொத்து. அவருக்குப் பின்னுல் அவைகளெல்லாம் உனக்கே சேரும். நீ பெருத்த அதிர்ஷ்டசாலிதான். என்ன உனக்கு சம்மதந்தானே ? என்று கேட்கவும் நாராயணனுக்கு தூக்கிவாரிப்போட்டது. யாது பதில் சொல்லுவதென உள்ளம் தடுமாறிற்று. கோபம் பொங்கி யெழுந்தது. இருந்தாலும் வெளிக்குக் காட்டாதவனுய், 'தந்தையே யாது காரியம் செய்யத் துணிந்தீர்கள்! நீங்கள் எடுத்துக்கொண் டிருக்கும் கருமத்திற்கு இது முற்றும் விரோதமானதென நீங்கள் யோசிக்கவில்லையா? சற்றும் நீதியல்ல. உலகம் உங்களை பழிக்காதா? 'வஞ்சகம் பேசேல்' என ஆன்ருேர் செப்பியிருக்கின்றன... எல லாம் தெரிந்த உங்கட்கு இத்தகாத செயல்களை நாவால் கூறுவதும் பாவமெனத் தோற்றவில்லையா? சாரதா சட்டத்தை அமுலுக்குக் கொண்டுவர முனைந்து நிற்பவராயிற்றே, சரசாவிற்கு இன்னும் பத்துகூட நிறம்பவில்லையே! பால் மணம்மாருக் கன்னியாயிற்றே. அப்பா! பன்முறை உங்களை கேட்டுக்கொள்ளுகிறேன். இக்கொடிய நினைப்பை இன்றுடன் மறந்து விடுங்கள்' என அதிவினயத்துடன் உத்தரம் பகலவும், நடேச ஐயர் மீண்டும் நாராயணனை நோக்கி 'குழந்தையே, உனக்கு உலக அனுபவம் போதாது. அப்படி நினைக்க வேண்டாம். உலகத்தில் மானிடர்கள் எத்தனையோ பேர் பொது மக்களின் நன்மையைப்பெறவும் கௌரவம் பட்டம் அடையவும் பலவிதமாக நடந்து கொள்ளுதல் இயல்பே. அதற்காக நமது குலாசாரத்தை துறப்பது நீதியாகுமா? அன்றியும் விவாகம் 300 மைல்களுக்கப்பால் அன்ருே நடக்கப்போகிறது. ஆகையால் நீ இவைகளையெல்லாம் கருதாது எனது கருத்திற்கு இணங்குவாய்' என்று கூறினதுதான் தாமதம்; நாராயணனுக்கு வந்துவிட்டது ஆவேசம். நெஞ்சம் துடித்தது, மனம் பதைத்தது. கண்களில் தீப் பொறிகள் பறந்தன. 'தந்தையே யாது கூறினீர்கள்? உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார் மகா பாவிகளல்லவா? உலகம் ஏற்குமா? மகா பாதகம். வழிதவறி நடத்தல் முற்றும் விலக்கத் தக்கதல்லவா? நியாயம் யாவர்க்கும் ஒன்றல்லவா? பூவுலகில்

இதைவிட பெரும் பழியைச் சுமத்திவைக்க கூடியது வேறேதேனும் உளதோ? பிறர் உங்களிடம் எவ்விதம் நடக்கவேண்டுமென்று நீங்கள் விரும்புகிறீர்களோ அதன்படி நீங்கள் நடந்துகொள்ள வேண்டாமா? 300 மைல்கள் ஆனலென்ன? 3000 மைல்கள் ஆனலென்ன? திருடன் என்று எல்லோரும் எளனஞ் செய்யமாட்டார்களா? பிதாவே—வேண்டாம்—வேண்டாம். ஏன் இக்கொடும் பாவத்தைக் கட்டிக்கொள்ளப் பார்க்கிறீர்கள்? நீங்கங் எனது விவாகத்தின் பொருட்டு சற்றும் கவலையுறவேண்டாம். ஏற்கனவே நான் நமது லக்ஷ்மியை உற்ற துணைவியாகக்கொள்ள தீர்மானஞ் செய்துவிட்டேன். கிழக்கு உதிக்கும் சூரியன் மேற்கில் தோன்றினாலும் சரி, நான் கொண்டுள்ள எண்ணத்தை ஒருவராலும் மாற்றமுடியாது. அவளையன்றி வேறொரு ஸ்திரீயைக் கண்ணெடுத்துப் பாரேன் என்பது சத்தியம்' என்று சொல்லிக்கொண்டே இராஜேஸ்வரியை நோக்கி, 'தங்காய் பயப்படாதே. உனது அண்ணன் நான் இருக்கிறேன். எனக்கே இவ்வளவுதூரம் வாதாடுகிறவர் இனி உன்னை எங்கு கவனிப்பார்? உனது அபிப்பிராயத்தை நான் உணர்ந்தேன். சஞ்சலப்படாதே. உனக்கும் சீக்கிரம் மணமுடிக்க ஏற்பாடுகள் செய்கிறேன்' என்று தங்கைக்கு ஆறுதல் கூறினன்.

'அடே பாவி! என்ன சொல்லத் துணிந்தாய்? தந்தையென்பதை சற்றும் உணராமல் மனப்போனபடியெல்லாம் பிதற்றுகின்றாய். குலத்தைக் கெடுக்கவல்லவோ பிறந்தாய். நீ அழிவதுமல்லாமல் இராஜேஸ்வரியையுமா துணை சேர்த்துக்கொள்ளப் பார்க்கிறாய்? வீண் அகம்பாவம் ஏன்? சற்றும் பலிக்காது. பிள்ளையெனப் பாவித்து இம்முறை மன்னித்தேன். இல்லாவிடில் உனது நாஇரண்டு துண்டங்களாயிருக்கும். நீ எனக்குப் புத்தி புகட்டுவதுமன்றி குலத்தையே நாசப்படுத்த வழிதேடினாய். லக்ஷ்மியா, லக்ஷ்மி—உம்—தெரியுமடா பலபேர்கள் சொல்லியும் நான் அவர்களுடைய வார்த்தையைக் கேட்கவில்லை. உன்னை அவளுடன் சேரவிடுத்ததே இவ்வளவிற்கும் காரணம். உனது செயல்களையெல்லாம் நான் நன்கறிவேன். என் முன் இனி நில்லாதே ஓடிப்போ. நீ எனக்கு மகனல்ல. சத்துருவாக வந்து வாய்த்தாய்—உம் என் கண்முன் நில்லாதே' எனக் கர்ஜித்தார் நடேச ஐயர்.

'யானை தன் தலைமேல் தானே மண்ணைவாரிப் போட்டுக்கொண்டதென்பதற்கிணங்க நீங்கள் உங்கள் பதவியையும் கௌரவத்தையும் இழந்து இழிவைச் சம்பாதித்துக்கொள்ள வழிதேடிவிட்டீர்கள். நான் எவ்வளவு நியாயங்கள் எடுத்துரைத்தும் செவிடன் காதில் சங்கூதினாற்போல் முடிந்தது. இதனால் உங்கட்குப் பெருந்தீங்குநேர்வது திண்ணம். உங்கள் ஆக்ஞைப்படியே நான் வெளி

யேறுகிறேன். உங்கள் முகத்தில் விழிக்கவும் எனக்கு இஷ்டமில்லை உங்களது போலிச்சாமியார் வேஷத்தையெல்லாம் நான் ஒரு கை பார்க்கிறேன். நான் உங்கள் புதல்வன் நாராயணனேயாகில் நான் கோரிய காதலியை உங்கள் முன்னிலையிலேயே விவாகம் செய்து கொள்ளுகிறேன்' என்று சொல்லிக்கொண்டே நாராயணன் வெளிக் கிளம்பினான்.

'என்ன ஐயர்வாள், உங்கள் நாராயணனை 2, 3 நாட்களாகக் காணோமே, எவ்விடம் அனுப்பினீர்கள்?.'

'மாமன் வீட்டிற்குப்போய் வருவதாகச் சொல்லிப் போயிருக் கிறான். வந்துவிடுவான் ஒருவாரத்திற்குள்.'

'அடடா சமயத்தில் இல்லாமல் போய்விட்டானே. போகு முன்பு என்னிடம் ஒருவார்த்தை சொல்லியிருக்கலாகாதா? என் செய்வது? முக்கியமான சமயத்தில் இல்லாமற் போய்விட்டான். லக்ஷ்மிக்கு திங்கட்கிழமை விவாகம் நிச்சயித்திருக்கிறேன்'

'ஓகோ! அப்படியா? எனக்குத் தெரியாமல் போயிற்றே. ஏதோ லக்ஷ்மியும் நமது நாராயணனும் ஒன்றாகப் பழகிவந்தார்கள். இருந்திருந்தால் மிகவும் சந்தோஷப்படுவான். சரி என் செய்வது? வரன் எங்கே பார்த்திருக்கிறீர்கள். நல்ல இடந்தானா?'

'அதைத்தான் எனக்குச் சொல்ல வெட்கமாய் இருக்கிறது. மாப்பிள்ளை யென்னமோ நன்றாகப் படித்தவர்தான். தகப்பனாருக்கு ஒரே புத்திரன். பணக்கார வீடுதான். ஆனால் பார்ப்பதற்கு ஒரு மாதிரியாக இருக்கிறார். கிழவரைப்போலவும் முனிவரைப்போலவும் காணப்படுகிறார். ஆனால் தேசசேவையில் அவருக்கு நிகரானவர் இல்லை. ஆகியிடமும் இதுதானும். நமது லக்ஷ்மியும் அன்னவரையே விவாகம் செய்துகொள்ள சம்மதமுடையவளாய் இருக்கிறாள். அவளுடைய இஷ்டத்தைப் பொறுத்தது. விவாக விஷயத்தில் நாம் குறுக்கிடலாகாது. பிற்பாடு அனுபவிப்பவர்கள் அவர்கள்தானே. மாப்பிள்ளையும் இவ்விடம் 2 நாட்களுக்கு முன் வந்திருந்தார். விவாக நிச்சயம் செய்துகொண்டு போயிருக்கிறார். என்ன ஐயர்வாள் தாங்கள்தான் முன்னின்று விவாகத்தை நடப்பித்துக் கொடுக்க வேண்டும்.'

'ரொம்பவும் சரி, அதற்கென்ன கேட்கவேண்டுமா?' தடை யில்லாமல் ஆகட்டும்'

நடேச ஐயருக்கோ ஆனந்தம் சொல்ல வேண்டியதில்லை. இனி நாராயணனுடைய ஜபம் சாயாது. எல்லாம் கடவுள் கிருபை. திருட்டுப் பயல் எங்கே போகிறான். கோபம் தணிந்ததும் வந்து

சேருகிறான். தேவடியாமுண்டை நாராயணனைக் கெடுக்கவல்லவோ இருந்தாள். ஆகவேண்டும் கழுதைக்கு' என்று எண்ணுதவைகளை யெல்லாம் எண்ணி எண்ணி மன அமைதி அடைந்தார்.

விவாகத்திற்கு குறிப்பிட்ட நாளும் வந்தது. ஏராளமான ஜனங்களுக்கிடையில் மணமகனும் மணமகளும், மணப்பந்தலில் வீற்றிருக்கின்றனர். ஜனங்களுக்குள் அமைதியென்பது கிடையாது. எங்கும் மொணமொணவென்ற பேச்சுத்தான். முதலியாரைத் தூஷித்தனர் சிலர். லக்ஷ்மியின் விதியை நொந்தனர் சிலர். இவ்வளவிற்கும் காரணம் மாப்பிள்ளையின் விகார சொரூபமே. கருத்த மேனியும் பெருத்த உடலும், தாடியும் மீசையும் ஓரடி நீண்டு முனிவரைப் போல் காணப்பட்டால் யாருக்குத்தான் மன அமைதியிருக்கும்? நடேச ஐயருக்குமட்டும் அடங்கா ஆனந்தம். கலியாணப்பந்தலில் எங்கு பார்த்தாலும் அவருடைய ஆர்ப்பாட்டந்தான். விதிப்படி விவாகம் நிறைவேறிற்று.

இரவு மணி 9. முதலியார் வீட்டின் " முன்புறத்திலுள்ள அகண்ட பந்தலில் திரண்ட கூட்டத்தினிடையில் நடேச ஐயர் தலைமையின்கீழ் நமது மாப்பிள்ளையின் சொற்பொழிவு நிகழ்ந்தது. அதன் சாராமாவது:—

'சகோதர சகோதரிகளே, நான் இவ்வூருக்கு மாப்யிள்ளையாக ஆகப்பெற்றது எனது பெரும்பாக்கியமே. ஆனால் நீங்கள் அனைவரும் என்னைப்பற்றி கேவலமாக நினைத்துவிடக்கூடாது. நீங்கள் நினைப்பது போல நான் கிழவனுமல்ல சந்நியாசியுமல்ல. கால வித்தியாசத்தால் இவ்விதம் உருமாறும்படி நேரிட்டது. நான் லக்ஷ்மியின் மீது அடங்காக் காதல் கொண்டு அவளையே எனது வாழ்க்கைத் துணைவியாகக்கொள்ள உறுதிகொண்டேன். எனது பிதா வேறு ஒரு பத்துவயதுகூட நிறம்பாக் கன்னியை எனக்கு நிச்சயித்து அவளைத்தான் கலியாணம் செய்துகொள்ள வேண்டுமென வற்புறுத்தினர். அவரோ சீர்திருத்த முறையில் ஈடுபட்டிருந்தும் என்னை இவ்வாறு வற்புறுத்துதல் தகாததாகையாலும், அவருக்குப் பல புத்திமதிகள் சொல்லியும் கேளாமையாலும் நான் அவருடைய நயவஞ்சகத்தை வெறுத்து எனது வாக்குறுதியின்படி உருமாறி அவரது முன்னிலையிலேயே எனது லக்ஷ்மியை அடையவேண்டியதாயிற்று. எனது தந்தையின் கொடுங்குணத்தைப் பாருங்கள்! போலிச் சாமியாரைப்போல் வேடந்தரித்து வருகிறார். அவரிடம் சூதும் வாதும் நிரம்பியுள்ளன. இப்பேர்ப்பட்ட குணமுடைய ஒருவரை நீங்கள் விருப்பமாட்டீர்களென நம்புகிறேன். அவருக்கு

வேண்டியது உங்கள் நட்பும் கௌரவமுந் தவிர வேறில்லை—பெரியோர்களே பார்த்தீர்களா அவருடைய கடுஞ்செயலை! அவர் தவருக நடந்து கொண்டதுமன்றி என்னையும் வீட்டைவிட்டு அப்புறப்படுத்தினுர். நான் அன்றுமுதல் எனது மாமனுர் கோபால்சாமி முதலியார் அவர்களின் ஆதரவில் இருந்து வந்து அவருடைய பெருங்குணத்தால் லக்ஷ்மியையும எனது மனைவியாக அடையப் பெற்றேன். என்னை யாரென அறிய நீங்கள் அனைவரும் அவாவுடையவர்களாயிருப்பீர்கள். தேச ஊழியனும் உங்கள் ஆசைமித்திரனும். இவ்விடம் அக்கிராசனம் வகித்திருக்கும் நடேசையருடைய புதல்வனுமான நாராயணனே நான்' என்று சொல்லிக்கொண்டே, தலையில் அணியப்பெற்றிருந்த டோபாவைக் கழற்றி யெறிந்தான். மக்கள் அடைந்த குதூகலத்திற்கும் ஆச்சரியத்திற்கும் ஓர் எல்லையுண்டோ? நடேச ஐயர் அன்று வீடு சேர்ந்தவர் இன்று வரை வெளிவரவில்லை.

அடுத்த முகூர்த்தத்திலேயே நமது இராஜேஸ்வரிக்கும் கோபாலசாமி முதலியார் தமையனுர் குமாரனுமான கோவிந்தசாமிக்கும் இனிதே விவாகம் நிறைவேறிற்று.

உங்கள் கைரேகைப் பலன்களை நீங்களே பார்த்துக் கொள்ளலாம்.

திரிகால ரேகை சாஸ்திரம்

(மூன்றும் பதிப்பு)

இப்புத்தகம் தூய்மையான தமிழில் எளிய நடையில் படங்களுடன் விளக்கமாய் அனுபவ ஹஸ்த ரேகை சாஸ்திர ஆசிரியரான சக்தி தாஸரால் எழுதப்பட்டிருக்கிறது. இதைப் படித்தும், இதில் படங்கள் மூலம் விளக்கப்பட்டிருக்கும் கை ரேகைகளின் டிணுகுணங்களைப் பார்த்தும், ஒவ்வொரு வரும் அவரவர்களின் ஆயுள், விவாகன், சந்தானம், பக்தி, அதிர்ஷ்டம், கண்டம், காரியசித்தி, இல்லற சுகம் முதலியவைகளை எல்லாம் சுலபமாகத் தெரிந்து கொள்ளலாம். இப்புத்தகம் வேண்டுவோர் பன்னிரண்டு அணு ஸ்டாம்புகள் அனுப்பி அன்ரிஜிஸ்டர் பார்சலாகப் பெற்றுக்கொள்ளலாம். வி. பி. யில் அனுப்பப்பட மாட்டாது.

'தமிழரசு' புத்தகாலயம்,

31, வைத்தியநாத முதலி தெரு, ஜி. டி. சென்னை.

பிச்சுவின் ஏமாற்றம்

[C. R. ஜெயலக்ஷ்மி]

என்னுடைய நோக்கமெல்லாம் சேர்ந்து, ஒரு கட்டுரை யாவது பத்திரிகையில் வெளிவரவேண்டுமென்பதுதான். ஆனால் இதுவரைக்கும் அதுதான் பூஜ்யமாய்விட்டது. இதற்காக நான்பட்ட சிரமமும் வாங்கிய கடனும் வளருவதைக் கண்டு, மேலும் வீண்பிடிவாதமே மேலிட்டது. இனி சிறு கட்டுரை யெழுதுவதை விட்டுவிட்டு தொடர் கதையாய்த்தான் எழுத வேண்டுமென்று நினைத்து, ஒருவிதமான முடிவிற்கு வந்து, என் மனைவியிடம் போய், 'அடியே, ராஜம்! எங்கே, முணுமுணுக் காதே இரண்டணா கொடு பார்ப்போம்' என்று கெஞ்சினேன்.

'சம்பளம் வாங்கறத்துக்கு இன்னும் பத்துநாள் இருக்கச்சியே காசு கேட்க வந்தூட்டயளே; இன்னும் குறை நாளே எப்படித் தள்ளுவியள்?' என்று கேட்டாள் இராஜம்.

'சரிதான்! ஆரம்பிச்சுட்டாயா கதையை! ஏதாவது ஒரு நல்ல விஷயத்துக்குன்னு வந்து கேட்டா, துக்குரியாட்டாமா பதில் சொல்றது! இந்த பொம்மனாட்டிக் கழுதைகளே இப்படித்தான்.'

'போறும் எனக்கு உங்கள் காரியம் தெரியாதா என்ன!! என்னமோ பிரமாதமா முழுகிப்போறுப்லே கேட்பியள், நான் எதுக்காவது அவசரத்துக்குன்னுட்டு வச்சிருக்கிறத்தெ உடனே எடுத்துக் கொடுத்தா இங்கே இருந்துபோய் வெள்ளைக் கடுதாசி வாங்கிண்டு வந்து கருப்பாக்கி போராததுக்கு மேல்கொண்டும் தக்ஷிணைவச்சு, போஸ்டு பண்ணுவியள். அந்தக் கடுதாசி எந்த மகராஜி குழந்தை கையிலே ஆப்பட்டு கப்பல்பண்ணி குப்பேலே போட்றதோ? யாரு கண்டா?'

'போதுண்டி வாயைமூடு. அதுக்குத்தான் இந்த பொம்ம னாட்டிகள் கையிலே சம்பளத்தைக் கொண்டுவந்து கொடுக்கப்படா துன்னு சொல்றது'.

'இந்தப் பிரமாதத்தை நீங்கதான் வச்சிண்டு செலவு பண்ணுங் கோளே! எனக்குன்னு ஒரு சல்லிக்காசு கூடவேண்டாம். யாராவது நாலுபேரோடே பேசிண்டிருக்கச்சே என்ன, கருகப் பிள்ளைக்கி ஒரு தம்பிடி கொடுங்கோ, தேங்காயுக்கு ஒரு தம்பிடி குடுங்கோ'ன்னு கேட்டு வாங்கிக்கிறேன். இதிலே எனக்கென்ன வந்துடுத்து இளப்பம்!' என்று முணுமுணுத்துக்கொண்டே அஞ்சாரப் பெட்டியிலிருந்து இரண்டணாவை யெடுத்து, என்முன் வீசி யெறிந்தாள்.

எப்படியோ, பரதேவதையிடமிருந்தே அருள் பெற்றதுபோல், பணம் வந்து சேரவே, இதேபோல் தாமதித்து என் கட்டுரையும் கட்டாயம் பத்திரிகையில் வெளியாகிவிடும் என்று மகிழ்ந்தவனாய் வெளிக்கிளம்பினேன். வழக்கப்படி நான் பேபர் வாங்கும் கடைக்காரனிடம் போக எனக்கிஷ்டமில்லை. ஏற்கனவே என் கட்டுரைக்காக அவனிடமிருந்த பேபர் யாவும் செலவழிந்துவிட்டதே அதற்குக் காரணம்.

பக்கத்துக் கடைக்குச் சென்று, குறட்டின்மேல் கால் வைத்ததுதான் தாமதம். கடைக்காரப் பையன் 'ஏன் ஸார்! எவ்வளவு கொயர் பேபர் வேணும்?' என்று கேட்ட கேள்வி என்னைத் திடுக்கிடச் செய்தது. 'ஆஹா! இதுவுமொரு பரதேவதையின் அருள் வாக்கே' என்று நினைத்து, விள்ளாது விரியாது 1½ அணாவுக்குப் பேப்பரும் ½ அணாவுக்குப் பென்சிலும் ('யானை' மார்க்கு போடப்பட்டது) வாங்கிக்கொண்டு வீட்டிற்குத் திரும்பினேன்.

இரண்டு வயது பேபி வந்து, என் காலைக் கட்டிக்கொண்டு ஊஞ்சலாடிக்கொண்டே, 'அப்பா, என்னை எத்துக்கோப்பா' என்று கொஞ்சிற்று. 'போடா பயலே! காரியம் இருக்கச்சே வந்து தொந்தரவு பண்றே' என்று இழுத்துவிட்டேன். இதைக் கேட்ட ராஜம், 'பேபி! வாடாண்ணா. அப்பா இப்போ பெரிய மூட்டையா தூக்கிண்டு வரப்போறா. ஒன்னெ தூக்கிக்க முடியுமோ!' என்று பேபியை எடுத்துக்கொண்டு 'விர்'ரென்று சமையலறைக்குச் சென்றுவிட்டாள்.

'இப்போ அப்படிதான் சொல்லுவாள். பணமட்டும் வந்துடுத்தானா, தன்னாலே வரா, நம்மை திருப்தி பண்றத்துக்கு!' என்றெண்ணியவனாய் உள்ளேபோய் என் வேலையைத் தொடங்கலானேன். ஆயிற்று! இரவு மணி ஒன்றடிக்கும்வரை எழுதித் தீர்த்தேன். அப்பொழுதுதான் கதாநாயகனை ராஜேந்திரன் அபாண்டமாய் குற்றம் சாட்டப்பட்டு கைதியாகிய கட்டத்திற்கு வந்து சேர்ந்தான். நேரமாய்விட்டபடியால் விடியற்காலையெழுந்து ஆபீஸ் போவதற்குள் எழுதி முடித்து விடுவதென்று தீர்மானித்தேன். அப்பொழுதுதான் அலாரம் வைக்க டேபிள் டைம்பீஸ் வாங்கிக் கொடுக்காத மாமனாரின் குறை மனதில் தோன்றியவாறே நித்திரையிலாழ்ந்தேன்.

* * *

சனிக்கிழமை மாலை என்னுடைய கட்டுரை பத்திரிகையில் வெளிவந்திருப்பதைக் கண்டு, பல நண்பர்கள் என்னிடம் வந்து 'மணி, நீ எழுதிய கதை எங்கள் மனதையெல்லாம் கொள்ளை

கொண்டு போய்விட்டது. கூடிய சீக்கிரம் மீதியையும் முடித்து எங்களைப் பரவசப்படுத்து' என்று கேட்பதும், பத்திரிகாசிரியரிடமிருந்து நன்மதிப்பும் பூராத் தொகையும் வந்ததைக் கண்டு கொண்ட என் மனைவி 'ஏன்னா, மத்தியானம் உங்களோடே பேசிண்டிருந்தவர் ஜவுளி வியாபாரியாமே! எனக்கு சொல்லாமே அவர்கிட்டே பொடவை வாங்கப் போறீளா என்ன? என்ன இருந்தாலும் எம்மேலே உங்களுக்கு ரொம்ப ரொம்ப அன்பு' என்று காதண்டை கொஞ்சும் சமயம், 'போடீ ராஜம்! அன்னிக்கி கேக்கச்சே இந்தக் கொஞ்சலெல்லாம் காணும்' என்று புறங்கையால் பலமாய்த் தட்டவே

'ஏன்னா, உங்களுக்கு உடம்பு கிடம்பு சரியாயில்லையா என்ன? அதுக்குதான் நான் அடிச்சுக்கிறது ராத்தூக்கம் முழிக்காதேயுங்கோன்னு. விடிஞ்சதும் விடியாதுமா நன்னா அடிச்சயள்' என்று என் மனைவி உதய ராகம் பாடவும், தான் திடுக்கிட்டெழுந்து இது வரையில் நான் கண்டது கனவென்றுணர்ந்து வெட்கினேன். டேபில் டைம்பீஸ் வாங்கிக் கொடுக்காத மாமனார் குறையைவிட்டு அதற்கு மேலான இராஜத்தைக் கொடுத்ததை நினைத்து அவரை மனமார வாழ்த்தினேன்.

போன அழுக்கும் போகாத அழுக்குமாய்க் குளித்து, ராஜம் கொடுத்தப் பொடிபோகாத காப்பியையும், மறுபேச்சின்றி அருந்திவிட்டு அறையில் கட்டிய துண்டுடன் எழுத உட்கார்ந்தேன். நிரபராதியான ராஜேந்திரனை மீட்க வகையறியாது, பேனா முனையைக் கடித்துக்கொண்டிருக்கும் சமயம் படபடவென்று வாசல்கதவு தட்டும் சப்தம் கேட்டது. 'யாரது? யாரது?' என்று கேட்டேன்.

'நான்தான்டா பிச்சு. கதவைத் திறடா'

'பிச்சைக்கூடையில் சனியன் புகுந்தாற்போல பிச்சுவே வந்துவிட்டானே! என்னடா செய்வது!' என்று யோசித்தேன். நான் கட்டுரை எழுதும்பொழுதெல்லாம் அவன் வராதநாள் கிடையாது. கேலி பண்ணாத நாளும் கிடையாது. அவன் மனதில் தன்னைவிட கெட்டிக்காரன் உலகத்தில் இல்லை என்று எண்ணம். அதுதான் கூடாது என்கிறது நான்! உனக்குத்தான் எழுதத் தெரியலேன்னா எனனைக் கேட்கப்படாதோடா?' என்பான். 'அதான்டா உன் பேர் பத்திரிகையெல்லாம் அடிபடுகிறது!' என்று கேட்டால் 'ஒருத்தன் கைக்காசு எனக்கென்னத்துக்குடா? நான் எழுதினால் கட்டாயம் பணம் கொடுக்க வருவார்கள். ஆனால் அவர்கள் கைமேலும் என்கை கீழேயுமிருக்கணும். அதனாலேதான் எனக்குப் பிடிக்கிறதில்லை' என்று பலதரம் பெருமை யடித்துக்கொள்வதை

என் மனம் பொறுக்காமல் என்றாவது ஒருநாள் இவனை திகைக்க அடிக்க வேண்டுமென்று கங்கணம் கட்டிக்கொண்டிருந்தேன்.

அதற்குத் தக்க சமயம் இப்பொழுதுதான் கிடைத்ததென்று நினைத்து கதவைத் திறந்தேன். அவனும் தாராளமாய் உள்ளே வந்து எனக்கு நேர்முகமாய் உட்கார்ந்துகொண்டு 'என்னடா மணி! வேஷ்டி கட்டிக்கக்கூட ஒழியாமே கட்டுரை எழுதக் கிளம்பிவிட்டாயோடா!' என்று சிரித்தான்.

'போடா! உனக்கு எப்பொழுது பார்த்தாலும் பரிகாசந் தான்டா! நல்லதைப் பேசுவோமென்பது கிடையாது'

'இல்லையப்பா! கோவிச்சுக்காதே. உனக்கு என்ன தெரிந்து கொள்ள வேணுமோ கேளு. சொல்றேன். இன்னும் நீ அனுப்பாத பத்திரிகைகள் எத்தனையென்று சந்தேகமாயிருக்கா? சொல்றேன். எண்ணிண்டு வா'.

'போடா! மறுபடியும் பார்த்தாயா! 'பழையகுருடி கதவைத் திறடி'ன்னு ஆரம்பிச்சுட்டே. இப்போ முக்கியமாய், நம்ப ராஜேந்திரனை ஒரு காரணமுமில்லாமல் அரஸ்டு பண்ணியிருக்கிறார்களே, அவன் நிரபராதி என்பதை எப்படி ருசுப்படுத்துகிறது?

'என்ன என்ன! துரைசாமி ஐயர் பிள்ளை ராஜேந்திரனையா? எந்த செக்ஷன் பேரில்டா?'

'அதான் 144 செக்ஷன் பேரில்'

'ஏன்டா! இதுவரைக்கும் அவனப்பா இதைப்பற்றி நடவடிக்கை எடுத்துக் கொள்ளவில்லை?'

'அவர்தான் அறுவடைக்காக மாயவரம் போய்விட்டாரே!'

'இவன்தான் காங்கிரஸ்னு கழிஞ்சுக்குவானே உள்ளே! தனியாயிருக்கும்போது எப்படி பிடித்தார்கள்?'

'ஏன்! அவன் அத்தை பெண் லலிதா இருக்காள். வேலைக் காரர்களெல்லாம் இருக்கும்போது அவன் ஏன் தனியாயிருக் கிறான் என்று சொல்லுகிறாய்?'

'இதென்னடா அதிசயமாயிருக்கு! இதுவரைக்கும் எனக்குத் தெரியவே தெரியாதே! சரி! போலீஸ் இன்ஸ்பெக்டருக்கு ஏதாவது போட்டா தீர்ந்தது.'

'அதுதானே அங்கே இருக்கிற கஷ்டம்! அந்த இன்ஸ்பெக்டர் வரதராஜுலு நாயுடு ஒருவரிடமும் ஒரு சல்லிக்காசுகூட வாங்க மாட்டேனே. உண்மையான காரணத்தை நிரூபித்தால் ஒழிய விட மாட்டானேடா'

'போடா அந்த வரதராஜுலுவை எனக்குத் தெரியாதா என்ன? நீ சொல்லுகிறது ரொம்ப விந்தையாயிருக்கே. நேற்றுத் தான் நாங்கூட அவன் அப்பாவைத் திண்ணையிலே பார்த்து க்ஷேமம் விசாரித்தேன். இதோ! இப்போ போய் நான் அவனை விடுவித்து விட்டுத்தான் மறுகாரியம் பார்ப்பேன்' என்று ஒரே தாவுதாவி மேல் துண்டையும் விட்டுவிட்டு எடுத்தான் ஓட்டம்!

தன் கிளாஞ்மேட் (Class mate) ராசேந்திரனுக்கு இவை யாவும் உண்மையில் நிகழ்ந்துவிட்டதாக நினைத்து, அவன் ஓடு வதைக் கண்டு என் வாழ்க்கையில் என் மனோரதம் முற்றுபெற்ற தாகவே எண்ணிக் களிப்புற்றேன். மறுகணம் 'ஏதடா சனியன் இப்பொழுதே இவன் ஊர் பூராவும் தமுக்கடிப்பான் போலிருக்கே' என்று பயந்து, அவனைப் பிடிக்க எடுத்தேன் ஓட்டம். அரைத் துண்டுடன் என்னைக்கண்ட அவன் 'அடே மணி! நீ போய் லலிதா வுக்குச் சமாதானம் சொல்லுடா. நான்போய் ஜாமீன் கொடுத்து அவனை மீட்டிக்கொண்டு வருகிறேன்' என்று கூறியவாறே நடையை வேகமாய்க் கட்டினான்.

இவ்விபரீதம் நாலு பேரறிந்தால் நகைப்பிற்காளாக நேரிடும் என்று நினைத்து, ஒரே மூச்சாய் ஓடி அவன் குடுமியைப் பிடித்தது தான் தாமதம், என்னிடம் அவன் ஏமாந்தபொழுதைக் காட்டிலும் பன்மடங்கு அதிக மகிழ்ச்சி யடைந்தேன். அவனோ குடுமியையும் பிடுங்கிக்கொண்டு ஓட எத்தனித்தான். 'அடே பிச்சு, ஆத்துக்கு வாடா சொல்லுகிறேன்' என்று திணறித்திணறிக் கூறி முடித்தேன்.

'என்னடா! உபகாரம் பண்ணுகிறவனையும் கெடுக்கிறாய். உன் னாலேதான் ஒன்னும் முடியாதுன்னு இத்தனை நாழி வெட்டிக்கதை எழுதிகொண்டு இருந்துவிட்டாய். நான்கூட அப்படி சிநேகித துரோகி என்று நினைத்தாயா என்ன? நமக்கு அவன் எத்தனைதரம் காப்பி சப்ளை பண்ணியிருக்கிறான்டா! இப்பதான் என்னமோ அவன் அத்தை பெண்ணுமவுசிலே யிருக்கிறான் என்று அதை எல்லாம் நாம் மறந்து விடுகிறதாடா?'

'அடே! சங்கதியைப் பூராவும் அறிந்து கொள்ளாமே, ஓடுகிறாயே! ஆசாமி இன்னாரென்று தெரிந்துகொள்ளாது பேசினால் எப்படிடா' என்று உளறிக் கூறிக்கொண்டே அவனை என் அறை க்கு அழைத்து வருவதற்குள் அரையிலிருந்து என் துண்டு நழுவ, அண்டையி லிருப்பவர்களுக்கெல்லாம் நகைப்பிற் கிடமாயிற்று.

அறைக்குள் வந்து என் உடையைச் சரிப்படுத்துவதற்குள், என்னடா மணி! இத்தனை நாழிகை ராஜேந்திரன் மனது என்ன பாடு படுகிறதோடா?'

'என்னடா! ரொம்பத்தான் ஒழுகிப்போறே! நான் சொன்ன தெல்லாம் யாரைப்பற்றி என்று நினைக்கிறாய்?'

'என் கிளாஸ்மேட் ராஜேந்திரனைத்தான், தெரியாதோடா? என்று வெகு அமத்தலுடன் கூறி என்னை விறைத்துப் பார்த்தான்.

'இப்போ அதான்டே இல்லேங்கிறது. நான் நேற்று எழுதி வைத்த கதாநாயகனான இராஜேந்திரனைப்பற்றி யோசித்துக்கொண் டிருக்கும்போது நீ வந்தாய். நீதான் எல்லாத்திலேயும் மேதாவி யாச்சே, உன்னைத்தான் கேட்டு எழுதி வைப்போம் என்று கேட்டு வைத்தேன்' என்று கூறி முடிப்பதற்குள் அவன் நின்றிருந்த விறைப் பெல்லாம் போய்த் திகைப்புடன் மூஞ்சியில் அசடு வழிந்ததைப் பார்க்க வேண்டுமே!!

உதார எண்ணம்

கையில் பணமில்லமல், ஒருவர் பசியின் கொடுமையால் வேதனைப் பட்டுக்கொண்டிருந்தார். அச்சமயம் விற்பனைக்கு வந்த பழத்தைப் பார்த்து, பக்கத்திலிருந்த பிரபுவிடம், 'பழம்' ரொம்ப தரமாயிருக்கும் வாங்கினால் தேவலே' என்று மிகவும் ஈனமான குரலில் தெரிவித்தர்.

கருமிப்பிரபு:—அப்படீன்ன நீதான் வாங்கே. என்னிடம் கத்தி இருக்கு. திருத்தி இரண்டு பேருமாய்ச் சாப்பிடலாம்.

* * *

கிருஷ்ணசாமி:— அப்பேர்ப்பட்ட அண்ணசாமியே இப் பொழுது எவ்வளவு பக்தியாய் கோவிலைச் சுற்றுகிறான் தெரியுமா!

கந்தசாமி:—இதிலே என்ன பிரமாதம்! அவன் வீட்டை அமீன சுற்றிக் கொண்டிருப்பான்!

செட்டியார்:—நான் உனக்கு கடன் கொடுத்து ஒரு வருஷ மாகியும் நீ இன்னும் கடனை திரும்பித் தரவில்லை. போனால் போகிறது. நீ சமுசாரியாச்சே யென்று நீ கொடுக்க வேண்டியதில் பாதியை நான் மறந்து விடுகிறேன்.

கடன் வாங்கியவன்:—ரொம்ப சந்தோஷம். ஆனால் மற்ற பாதியை நான் மறந்து விடுகிறேன்.

—வலம்புரி எஸ். சீனிவாசன்

ஏமாறிய தாசி

[தேவகோட்டை வி. மாணிக்கம்]

'என்ன மாமா! உங்கள்மேல் பாட்டி எப்போதும் குறை சொல்லிக்கொண்டே இருக்கிருள். உங்கள் வேலையைச் ஒழுங்காய்ச் செய்கிறீர்களில்லையாம்' என்று தனக்குச் சமீபத்தில் உலாவிக்கொண்டிருந்த மாமாவைப் பார்த்து கூறினுள் தாசி தங்கமணி.

மாமா:—ஆமா, உன்பாட்டி குற்றங் கண்டுபிடிப்பதில் பெரிய பிரகஸ்பதி. ஆகையால், எல்லோர்மேலும் குறைசொல்லுவதற்குத் தயங்கமாட்டாள். எனக்குத் தெரிந்தது இந்தமாதிரி கிழங்களைக் கட்டிக்கொண்டழுவதில் ஒன்றுமே பிரயோஜனமில்லை. நாமே இவர்களை எமலோகத்திற்கு அனுப்ப வழிதேடவேண்டும்' என்று சலிப்புடன் கூறினுர்.

தங்கமணி:—என்ன மாமா அப்படிச் சொல்லுகிறீர்கள்?

மாமா:—ஆம்! இந்தமாதிரி 60, 70 வயதான கிழங்களுக்கு கோடைகாலத்து குளம் குட்டைபோல் மூளைவறண்டு புத்திமந்தித்துப் போய்விடும்' அப்போது அவர்கள் தங்களைப்போல் கெட்டிக்காரர்கள் உலகத்தில் ஒருவரும் கிடையாதென்று நினைத்து, எதிரியைத்தூற்றி அவனது கோபத்தை கிளப்பிவிட்டு தீராப் பகையைத் தான் சம்பாதித்து கொள்வார்கள்.

தங்கமணி:—அது சரி, நேற்று கடற்கரையில் ஒரு மைனரைக் கண்டோமே! அவன் யாரென்று விசாரித்தீர்களா?

மாமா:—ஆம், அவன் இந்த ஊர் ஆசாமி இல்லை. அசலூர் மைனர். அவன் உன்னைச் சுற்றிச்சுற்றி வட்டமிட்டுக்கொண்டு திரிந்த மாதிரியில் உன் வலையில் சிக்கிவிட்டவன்போல் காணப்பட்டான். ஆகையால், அவனே விசாரித்துக்கொண்டு ஓடிவரப் போகிருன்.

தங்கமணி:—அவன் நம்வலையிற் சிக்கவேண்டுமென்பது தானே நம்முடைய பிரார்த்தனை!—என்று கூறியவண்ணம் தற் செயலாய் வீதியை நோக்கினுள்.

அப்போது அவர்களிருந்த இடம் மேல்மாடியாதலால் அவள் கீழே வீதியை நோக்கியபோது, தன் வீட்டிற்கெதிரில் ஒரு குதிரை வண்டி நிற்பதையும், அதிலிருந்து ஒரு யௌவன மைனர் இறங்குவதையும் கண்ட தங்கமணி 'மாமா! உங்களுடைய ஜோஸ்யம் பலித்துவிட்டது! இதோ பாருங்கள்! மைனர் குதிரைவண்டியை விட்டு இறங்குகிருர்' என்ருள்.

உடனே மாமா ஆவலுடன் கீழே பார்த்துவிட்டு 'பார்த்தாயா? அவன் உன்னைத் தேடிவந்து விடுவானென்றுகூறி வாய்மூடுமுன் இங்கே வந்து குதித்துவிட்டான். இந்தமாதிரி யூகிக்க சக்தியில்லா விடில் இந்த மாமா வேலையை ராஜிநாமாச்செய்யவேண்டியதுதான். சரி, உன்னை நன்றாய் 'மேக் அப்' செய்துகொள். நான்போய் மைனரை அழைத்துக்கொண்டு வருகிறேன்' என்று கூறியவண்ணம் கீழே இறங்கிப் போய்விட்டார்.

உடனே தங்கமணி தன் ஆடை முதலானதுகளை சீர்திருத்திக் கொண்டு மைனர் வரவை எதிர்ப்பார்த்துக் கொண்டிருந்தாள். அடுத்த நிமிஷம் மைனர்வாள் போடப்பட்டிருந்த அத்தர்வாடை அபரிமிதமாய்வந்து மோதிற்று, அதற்கடுத்தநிமிடம் மைனர்வாள் அங்கு பிரசன்னமானார். அவரைக் கண்டதும் தங்கமணி 'வாருங் கள்' என்று மிருதுவாகக் கூறியவண்ணம் தான் உட்கார்ந்திருந்த கட்டிலைவிட்டிறங்கி பதிவிரதைபோல் பாசாங்கு பண்ணினாள்.

அதைக்கண்ட மைனர், 'கட்டிலைவிட்டு இறங்கவேண்டாம்; அதிலிருந்துகொண்டு வரவேற்றால் அதுவே போதும்' என்று கொஞ்சலாகக் கூறிக்கொண்டே கட்டிலில் வந்தமர்ந்தார்.

தங்கமணி அதைக் கேட்காமல் கட்டிலின் ஒருபக்கத்து மூலையில் நின்றுகொண்டு தலை கீழே குனிந்தவண்ணம் கடைக் கண்ணால் மைனரைக் கவனித்தாள்.

மைனர், 'எவ்வளவு நேரத்திற்குதான் கால்கடுக்க இப்படி நின்றுகொண்டிருக்கப் போகிறாய்? ஆம்! முதலில் பெண்கள் இப்படித்தான் மரியாதை செய்வார்கள். அப்புறம் தலைமேல்கூட ஏறி உட்கார்ந்து விடுவார்கள். சரி, இவ்வளவு மரியாதை காட்டியது போதும். இப்படிவந்து என்பக்கத்தில் உட்கார்' என்று வேடிக்கை யாகக் கூறினார்.

அதற்கும் அசையாமல் அவள் நின்றுகொண்டிருந்ததைக் கண்ட மைனர், 'ஓ! நாணமா? குடும்பஸ்திரீகளிடம்கூட இல்லாத நாணம் இப்போது தாசிகளிடம்வந்து புகுந்திருக்கிறது!' என்று கூறிக்கொண்டே எழுந்து அவளுக்குப் பக்கத்தில்சென்று தனது வலக்கரத்தை அவள் முதுகின்மீது அணைத்து அவளை அழைத்துக் கொண்டுவந்து கட்டிலில் உட்கார்ந்ததும் மைனர், 'அப்பாட! இப்பொழுதுதான் என் மனம் குளிர்ந்தது. நேற்று உன்னைக் கடற் கரையில் கண்டதுமுதல் உன் நினைவுதான். என் ஆவியே உன்னி டம் புகுந்து விட்டது' என்றான்.

தங்கமணி:—என்; நானும் அதே நிலைமையில்தா னிருந்தேன். உங்களைக் கண்டதும் என் உயிர் உங்களைநாடி என்னை உயிரற்ற பதுமையாக்கி விட்டது. சரி, இருங்கள். இதோ ஐந்து நிமிஷத்தில்

வருகிறேன்' என்று கூறிக்கொண்டே எழுந்து அவ்விடத்தைவிட்டு கீழே இறங்கிப்போய் பழங்களும் பட்சணங்களும் நிறைந்த ஒரு தட்டை எடுத்துவந்து அவனுக்குப் பக்கத்தில் உட்கார்ந்தாள்.

சாப்பிட்டு முடிந்ததும் இரண்டுபேரும் சிறிது பால் சாப்பிட்டார்கள். உடனே மைனர் உயர்தர சிகரெட்டு ஒன்றை எடுத்து பற்றவைத்து ஆனந்தமாக புகையை இழுக்கலானார். அப்போது தங்கமணி 'சரி, சாப்பாட்டுவிருந்து முடிந்துவிட்டது. இனி சங்கீத விருந்து நடத்தப்போகிறேன்' என்று கூறியவண்ணம் அதை விட்டெழுந்து சிறிது தூரத்தில் வைக்கப்பட்டிருந்த வீணையை எடுத்து வைத்துக்கொண்டு ஒரு இந்துஸ்த்தான் பாட்டைத் தளுக்கு மினுக்கு குலுக்குடன் பாடினாள்.

அதைக்கேட்ட மைனர் 'பேஷ்! சங்கீத விஷயத்திலும் அபார சாமர்த்தியமுள்ளவர்களாக விருக்கிறாயே! சரி, நேற்று இதே நேரத்திற்கு என்ன கண்டேன் தெரியுமா? நீ ஆசையோடு வந்து கட்டிப் பிடிப்பதுபோல் கனவு கண்டேன்' என்றார்.

உடனே தங்கமணி 'ஓ! அப்படியா கனவு கண்டீர்கள்? அப்படியானால் நேற்று கனவில் கண்டபடி இன்று உண்மையில் அனுபவிக்கிறீர்களா?' என்றவண்ணம் அவனை ஆனந்தத்தில் ஆழ்த்தினாள்.

இப்படி ஆனந்தமாக அன்றிரவு கழிந்தது. மறுநாள் காலை பத்துமணி சுமாருக்கு மைனரும் தங்கமணியும் சம்பாஷித்துக் கொண்டிருந்தனர். அப்போது மாமா அங்குவந்து மைனரைப் பார்த்து 'யாரோ ராமநாதனாம், உங்களைப் பார்க்க வேண்டுமாம். ஆகையால் உங்களைக் கூட்டிக்கொண்டு வரச்சொல்லுகிறான்' என்றார்.

அதைக் கேட்ட மைனர், 'ஓ! நண்பன் ராமநாதன் போலிருக்கிறது. வெளியில் நிற்கிறானா? இதோ வருகிறேன்' என்று துடியாக எழுந்து மாமாகூட சென்று அவனைக் கண்டு பேசிவிட்டு சிறிது நேரத்தில் திரும்பி வந்தான். அப்போது அவன் கையில் 100 ரூபாய் நோட்டுகளடங்கிய ஒரு கட்டு காணப்பெற்றது.

அதைக்கண்ட தங்கமணி, 'இதேது? இதைத் தரத்தான் உங்கள் நண்பர் அழைத்ததோ?' என்றாள்.

மைனர்:—ஆம், என்னிடம் கடனாக 1000 ரூபாய் இரண்டு தினத்திற்கு முன் வாங்கியிருந்தான். அதை நேரே இங்குவந்து திருப்பிக் கொடுத்துவிட்டான். சரி, இதை வைக்கவேண்டும். அதோ இருக்கிறதே என்னுடைய தோல்பெட்டி அதை எடுத்துக் கொண்டுவா' என்று அவன் கூறவே, தங்கமணி அவன் பெட்டியை எடுத்துவந்து கொடுத்தாள்.

அவன் அதைத் திறந்து நோட்டுக்கட்டை வைக்கும்பொழுது அந்த பெட்டியில் நூறு ரூபாய் நோட்டுகள் அநேகம் இருப்பது தங்கமணிக்கு பளிச்சென்று தெரிந்தது. அவ்வளவும் தனக்குத்தா னென்று அப்போதே மனக்கோட்டை கட்டினாள்.

அன்றுமாலை 4 மணி. மைனர் ஒரு புஸ்தகத்தை வைத்துப் படித்துக்கொண்டிருக்கிறார். தங்கமணி பக்கத்தில் அமர்ந்திருந் தாள். அப்போது சுமார் இருபது வயது மதிக்கத்தக்க வாலிபன் ஒருவன் அவ்விடத்திற்கு வரவே, அவனைக்கண்ட மைனர் 'வா, சோமசுந்திரம்! இப்படி வந்து உட்கார்' என்று உபசரித் தான்.

சோமசுந்தரம் ஒரு சோபாவில் உட்கார்ந்துகொண்டு 'நீ இங்கிருக்கிறாய் என்பதை ராமநாதன் மூலமாய் தெரிந்துகொண் டேன். ஒரு அவசர காரியத்தை முன்னிட்டு நீ இருக்கும் இடத்தை கூடப் பாராமல் இங்கு வந்தேன்' என்றான்.

மைனர்:—'அப்படி என்ன அவசர காரியம்?

சோமசுந்தரம்:—'வேறொன்றுமில்லை. 500 ரூபாய் உன் னிடம் கடனாகப் பெற்றுப் போகலாமென்று வந்தேன். பணம் ரொம்ப முக்கியமாக தேவை; அதை உத்தேசித்துத்தான் உன்னிடம் வந்தேன்.

மைனர்:—இவ்வளவுதானே? இதோ தருகிறேன்—என்று கூறி அவ்விடத்தைவிட்டு வெளியில் வந்தார். அப்போது அவரைத் தொடர்ந்துவந்த தங்கமணி, 'இவர் யார்? உங்களுக்கு ரொம்பத் தெரிந்தவரோ?' என்றாள்.

அதைக்கேட்ட மைனர், 'ஆம் ரொம்பத் தெரிந்தவன்தான். இப்போது நான் பெட்டியைத் திறந்து ரூபாயை எடுத்துக்கொடுத் தால் அதற்குள் வேண்டிய ரூபாய்கள் இருப்பதைப் பார்த்து, கூட 500 ரூபாய் கேட்டாலும் கேட்பான். நான் தடைசொல் லாமல் கொடுக்கவேண்டியது நேர்ந்துவிடும். பெட்டியில் மொத்தம் 3000 ரூபாய்தானிருக்கிறது. அதில் 1000 ம் போய்விட்டால் 2000 ம் தானிருக்கும். உனக்கு வைரமாலை ஒன்று வாங்கித்தர தீர்மானித்திருக்கிறேன். அதற்கு குறைந்தது 2500 ரூபாயாவது வேண்டும். இவனுக்கு கூட ரூபாய் கொடுக்கவேண்டி நேர்ந்தால் வைரமாலைக்கு ரூபாய் காணாமல் போய்விடும். ஆகையால், உன்னிட மிருந்தால் 500 ரூபாய் கொடு; அவன் இதைவிட்டகன்றதும் பெட்டியைத் திறந்து உனக்கு எடுத்து தந்துவிடுகிறேன்' என்றார்.

உடனே தங்கமணி தனக்கு வைரமாலை வாங்கித்தரப்போவதை குறித்து மகிழ்ச்சியுற்று, 'சரி இதோ தருகிறேன். இவ்விடத்திலேயே

இருங்கள். எடுத்துக்கொண்டு வருகிறேன்' என்றுகூறி அவ் விடத்தைவிட்டகன்று சிறிதுநேரத்தில் திரும்பிவந்து ரூபாயைக் கொடுத்தாள்.

மைனர் அதைப் பெற்றுக்கொண்டு சோமசுந்தரம் இருந்த இடத்திற்குவந்து அவனிடம் ரூபாயைக் கொடுத்தான். அவன் அதை வாங்கிக்கொண்டு, 'ரொம்ப சந்தோஷம்; நல்ல சமயத்தில் கொடுத்துதவினாய். சரி, என்கூட வீட்டுவரையில் வந்துவிட்டு வரமுடியுமா?

மைனர்:—அப்படி என்ன விஷயம்?

சோமசுந்தரம்:—அதைத்தான் என் கூடவந்தால் சொல்லலா மென்று நினைத்தேன்.

மைனர்:—அப்படியானால் இதோ வருகிறேன்'—என்று எழுந்து சிறிதுநேரத்தில் வந்துவிடுவதாக தங்கமணியிடம் சொல்லி விடை பெற்றுக்கொள்ளவே, அடுத்த நிமிஷம் இருவரும் அவ் விடத்தை விட்டகன்றனர்.

அவர்கள் சென்றதும் மாமா அங்குவந்து சேர்ந்தார். அவர் தற்செயலாய் மைனரது பெட்டி இருந்த பக்கம் பார்க்கவே, அந்த பெட்டிமீது ஒரு கடிதம் இருப்பது தெரிந்தது. உடனே அவர் அதை ஆவலுடன் எடுத்துபிரித்து பார்க்கவே அதில் அடியில்வரும் விஷயம் காணப்பெற்றது:—

ஏ ஏமாறிய சோணகிரிகளே!

நாங்கள் விரித்த மாயவலையிற் சிக்கி 500 ரூபாய் கொடுத்து நீங்கள் ஏமாறி விட்டீர்கள். என்னை ஒரு பணக்கார மைனரென்று நீங்கள் நினைக்க வேண்டுமென்றே என் நண்பன் 1000 ரூபாய் கடனாக பெற்றதை திருப்பிக் கொடுப்பதுபோல் நடித்தான். மற்றொருவனை என்னிடம் கடன்கேட்க வருவதுபோல் வரச்செய்து நான் தந்திரமாய் வெளியேகி விட்டோம். நீங்கள் இல்லாத சமயத் தில் பெட்டிக்குள்ளிருந்த நோட்டுக் கட்டுகளை எடுத்து நான் பத்திரப் படுத்திக்கொண்டேனாதலால் பெட்டிக்குள் நோட்டுக ளிருக்குமென்று திறந்து பார்த்தால் நிச்சயமாக ஏமாறிப் போவீர் கள். நீங்கள் அநேகம்பேரை ஏமாற்றி நடுத்தெருவில் விட்டவர்க ளாதலால், உங்களை ஏமாற்றி உங்களிடமிருந்தே பணத்தை பிடுங்க வேண்டுமென்று நாங்கள் நினைத்து செய்த சூழ்ச்சியே இது. 'மைனர்'—என்று எழுதப்பட்டிருந்த கடிதத்தை வாய்விட்டு படித்த மாமாவும் தங்கமணியும் என்ன நிலைமையை அடைந்திருப் பார்களென்பதை வாசகர்களே யூகித்துக் கொள்ளுங்கள்.

பழிக்குப் பழி

[நந்தகோபன் மணல்மேடு]

நடுநிசி. காரிருள். மதனபுரிக்கு அருகாமையிலுள்ள பிரம்மாண்டமான காடு. சிங்கம், புலி, கரடி முதலிய கொடிய மிருகங்களும் பறவை இனங்களும் அளவின்றி உறையுமிடமாயிருந்தாலும் அன்று என்ன காரணங்கொண்டோ கானகமெங்கும் அமைதி குடிகொண்டு நிசப்தம் நிலவி இருந்தது. ஆனால் இளங்காற்றினால் மரங்களின் அடர்ந்த தழைகள் அசைந்து சலசலவென்று மெல்லிய ஓசையைக் கிளப்பிக்கொண்டிருந்தன. கோட்டான்கள் கூவும் சப்தமும் இடையிடையே எழுந்து மறைந்துகொண்டிருந்தது.

அந்தகாரம் நிறைந்த அவ்விருண்ட கானகத்தினூடே ஓர் பெரிய ஆலமரத்தினடியில் அமைந்திருந்த கற்பாறையின்மேல் ஓர் மானிட உருவம் உட்கார்ந்துகொண்டு அடிக்கடி இருண்ட பூமியை நோக்கியவண்ணமும், கண்களில் கண்ணீரை தாரைதாரையாய்ப் பெருக்கியவண்ணமும், 'ஈசா, உனக்குக் கண்களில்லையா? இவ்வாறும் என்னைச் சோதிக்க வேண்டுமா? ஐயோ, 'பெண்களை நம்பலாகாது' என்னும் பெரியோர் கூற்று நான் அருமையாகப் பெற்று வளர்த்த எனது மகளின்பாலே வாய்த்ததே, ஆ......மகளா? பாதகி....குடியைக் கெடுக்கவந்த கோடாரிக் காம்பு......அடி........ துரோகி, என் மகளாய் பிறந்த உனக்கே எனக்குத் துரோகம் செய்ய மனம் துணிந்ததே, உன் மனம் கல்லா, அல்லது கரையாப் பாறையா? ஐயோ! நான் உன்மேல்கொண்ட அன்பினாலன்றோ எனது ராஜ்ஜியத்தையே உனக்கு மரணசாஸனமாகப் பட்டம்சூட்டினேன். அப்படியிருக்க அந்தியத்தில் உன்னை அண்டிச் சுகம் பெறலாம் என்று வந்த எனக்கு ஒரு வேளை அன்னமுமிடாமல் 'வந்த வழியே போ' என்று சொல்ல உன் வாய் எழுந்ததன்றோ? ஆ கடவுளே! நான் வியாதியாய் விழுந்தபொழுதே இறந்திருக்கலாகாதா?........ஆ........கற்பிற்கரசி........பத்மாவதி........ஐயோ........ கற்பவதியாகச் சென்ற நீ எங்கெங்கு சென்று எவ்வாறு துடித்தனையோ?........அல்லது இன்னும் என்னைப்போல் துடிக்கின்றனையோ? சிறியவளின் மேல்கொண்ட மோகத்தாலன்றோ இப்பாவி மதிமயங்கி உன்னை கற்பவதியென்றும் பாராமல் அரண்மனையைவிட்டு வெளியேற்றினேன்........ஐயோ! சிறியவளாலும் அவளது மகளாலும் நான் அடைந்த சுகம் போதும்........போதும். அப்பா, என்ன உலக வாழ்க்கை? போதுமா? போதாது. வேண்டும் வேண்டும், இன்னும் வேண்டும். மதனபுரி அரசன் ஞானசேகரன் காரிருளில் கானகத்தில் கொடிய மிருகங்களுக்கிடையில் மனத்

துயராற்ருது புலம்புகின்ருன் என்னும் செய்தி இவ்வூராருக்குத் தெரிந்தால் என்ன நினைப்பார்கள்?........ஆ........என் அருமைப் பிரஜைகள் என்ன நினைப்பார்களா?........ஐயோ நான் உயிருட னிருப்பது தெரிந்தால்தானே........? அடி........பாதகி, துரோகி, எனக்கு ஊரார் யாராவது உதவிபுரிவார்கள் என்றெண்ணி பிரஜைகள் யாவரும் அறியும்படி பகிரங்கமாக, 'மதனபுரி அரசன் ஞானசேககன் தீராப்பிணியால் உயிர்நீத்தான்' என்று பறை சாற்றுவித்து விட்டனையே.......என்ன கொடுமை?........ஹூம், உலகமே பொய், செல்வம் மின்னலைப் போன்றது. உலகில் மானமே பெரிது.......அம்மானம் அழிந்தபின் இம்மோச உலகில் ஒருக் கணமும் உயிர்வாழலாகாது. ஹே........கடவுளே, இதோ யான் உனது பாதங்களை அடைகின்றேன். என்னை ஏற்றுக்கொள்வாயா? அல்லது இப்பாவியை........வெறுத்துவிடுவாயா?.....'என்று புலம்பிய வண்ணம் தனது உடைகளில் ஒன்றை நன்ருய் முறுக்கி எடுத்துக் கொண்டு தடுமாற்றத்துடன் தத்தித்தத்தி மரத்தின்மேல் ஏற லானுன். அப்படி ஏறி உச்சிக்கிளையை அடைந்தவன் திடீரென்று பெரிதும் மாறுதலடைந்து ஆத்திரங் கொண்டவனுய் பற்களை நறநறவென்று கடித்துக்கொண்டு, 'ஆ........என்ன........' உயிரை விடுவதா? என்ன பேதமை, நான் அவளைப் பழிக்குப் பழி வாங்கா மல் உயிரைவிட்டு விடுவதா........என்னை இந்நிலையில் வைத்த அத் துரோகியை நான் இந்நிலையில் வைத்து என் கண்களால் கண்டு எனது பழியைத் தீர்த்துக்கொள்ளாமல் உயிரை விடுவதா?' என்று ஆத்திரத்துடன் கூவியவண்ணம் மரத்தினின்றும் தடதடவென்று கீழே இறங்கலானுன். அப்போது காட்டினூடே சிறிது தூரத்தில் சில பந்தங்கள் கூட்டமாகத் தெரிவதையும் சிலபந்தங்கள் தான் இருக்குமிடத்தை நோக்கி வருவதையும் கண்டான். அரசன் அதையே உற்று நோக்கியவண்ணம் தடுமாற்றத்துடன் மரத்தினின் றும் இறங்குகையில் கால்தவறி கைப்பிடிசோர மரத்தினின்றும் தொப்பொன்று கீழே விழுந்தான். அந்தோ! பாறையின்மேல் விழுந் ததினுல் பலத்த அடிபட்டு மூர்ச்சையாகி சவம்போல் ஆனுன்.

* * *

தனது சுயநிலை வரக் கண்விழித்தான். தான் ஒரு சிறிய சீலைக் கூடாரத்தினுள் ஓர் படுக்கையின்மேல் கிடத்தப்பட்டிருப்பதையும், சூரியனின் பொன்னிறம் பொருந்திய ஒளி தன்மீது படுவதையும், தன்னைச் சுற்றிலும் பல வீரர்கள் நிற்பதையும் காண அவனுக்கு வியப்பும் பயமும் ஒருங்கே உண்டாயிற்று. தான் காண்பது கனவா அல்லது உண்மைதானு என்று தயங்கினுன். ஒன்றும் தெரியாமல் விழித்தான். பிறகு சிறிது கழித்து தடுமாற்றத்துடனும் நாக்குழற வும், 'ஐயா, நான் எப்படி இங்கு வந்தேன்? என்னை எதற்காக

இங்குகொண்டு வந்தீர்கள்?' என்று கேட்டான். இதைக்கேட்ட வீரர்களில் ஒருவன், 'பெரியவரே, நாங்கள் எங்களது அரசர் ஆணைப்படி வேட்டையாட இக்காட்டிற்கு வந்தோம். நாங்கள் சென்ற இரவு எங்களது கூடாரங்களில் தங்கி இருந்தபொழுது எங்களது செவிகளில் ஏதோ ஒருவித பரிதாபமான புலம்பல சப்தம் கேட்டது. உடனே நாங்கள் என்னவென்று பார்க்கும் பொருட்டு பந்தங்களுடன் சப்தம் உண்டான இடத்தை நோக்கி நடந்தோம். அங்கு ஒரு பெரிய ஆலவிருக்ஷத்தினடியிலிருந்த கற்பாறையின்மேல் தாங்கள் மூர்ச்சையாகிக் கிடந்தீர்கள். உடனே நாங்கள் எங்களது முறைப்படித் தங்களைத் தூக்கிவந்து சேர்த்தோம்' என்று சொன்னான்.

அரசன் ஞானசேகரன்:—'ஐயா........நீங்கள் இப்பொழுது என்னை என்ன செய்யப் போகின்றீர்கள்?'

வீரன்:—'எங்களது அரசன் சமூகத்திற்கு அழைத்துச் செல்லப் போகின்றோம்'

ஞானசேகரன் படபடப்புடன், 'ஐயோ என்னையா? அக் கொடும்பாவியின் முன்பா? நான் அவள் முகத்தில் விழியேன். இது சத்தியம். என்னைத் துன்புறுத்தாதீர்கள்' என்று பைத்தியம் பிடித்தவன்போல் உளறினான். இதைக்கேட்ட வீரன் ஆச்சரியமடைந்தவனாய், 'ஐயா பெரியவரே, ஏன் இப்படிப் பயப்படுகின்றீர்கள்? எங்களது அரசர் மிகவும் நல்லவராயிற்றே. நீதி பிறழாத மன்னர். குடிகளின் குறைகளைத் தனது குறைகளைப்போல் எண்ணுபவர். திக்கற்றவர்களுக்கு தெய்வம் போன்றவர். தாங்கள் தங்களது குறைகளை அவரிடம் தெரிவித்தால் தங்களது குறைகளைப் போக்குவார் என்பதில் சந்தேகமில்லை. அப்படியிருக்கத் தாங்கள்....' அரசன் குறுக்கிட்டு, 'தங்களது அரசர் பெயரென்ன?' என்று கேட்டான்.

வீரன், 'வீரகேசரி என்பது எங்களது அரசர் பெயர்' என்றான். இதைக்கேட்ட ஞானசேகரன் சற்று சமாதான மடைந்தான்.

* * *

பிறகு ஞானசேகரனும் வீரர்களுடன் வெகு தூரத்திற்கப்பாலிருந்த அரண்மனைக்கு அழைத்துச் செல்லப்பட்டான். அரண்மனையைக்கண்ட ஞானசேகரனுக்குத் தனது கழிந்த வாழ்நாட்களின் நினைவுகளெல்லாம் ஒவ்வொன்றாய் மனக்கண்முன் படம்போல் தோன்றி மறைந்தன. கண்கள் கண்ணீரை ஆராய்ப் பெருக்கின. அடக்கொணுத் துயரம் மேலிட்டது. இந்நிலையில்

மதனபுரி அரசன் ஞானசேகரன் அவ்வூர் பாலிய சிற்றரசன் முன் கொண்டுபோய் நிறுத்தப்பட்டான்.

ஞானசேகரனது பரிதாப நிலையைக்கண்ட பதினெட்டு வயதும் நிரம்பாத அவ்வூர் அரசன் வீரகேசரியின் மனம் கரைந்தது. அவன் 'பெரியாரே, தாங்கள் எந்த ஊர்? அக்கா ரிருளில் கானகத்தில் தன்னந்தனியாய் தவித்துக்கொண்டிருந்ததின் காரணம் என்ன?' என்று கேட்டான் ஞானசேகரனது முகத்தை நோக்கியவண்ணம்.

ஞானசேகரன், துக்கம் சகிக்கமாட்டாதவனாய் கண்களில் பெருகிய கண்ணீர் தரையில் பொலபொல வென்று சிந்த தலை குனிந்தவண்ணம், 'அரசே, என் விருத்தாந்தங்களையா கேட்கின் றீர்கள்? ஐயோ........அதைச் சொல்லவும் என் நா எழவில்லையே' என்று கதறினான்.

வீரகேசரி, ஞானசேகரனைப் பலவாறு தேற்றி 'பெரியவரே, தாங்கள் தங்களது குறைகளை என்னிடம் தெரிவிக்கும் பக்ஷத்தில் தங்களுக்கு என்னால் கூடுமான உதவியை செய்ய காத்துக்கொண் டிருக்கிறேன். தயங்காது கூறுங்கள்' என்றான்.

ஞானசேகரன் பூமியை நோக்கியவண்ணம் ஆத்திரம் தொண் டையை யடைக்க, 'அரசே, என் பெயர் ஞானசேகரன் என்பது. மதனபுரி என்னும் பதியை அரசாண்டவனும் நானே. இப்பொழுது இப்பரதேசிக் கோலத்துடன் இருப்பவனும் நானே....எனக்கு இரு மனைவியர் இருந்தனர். அவர்களில் மூத்தவள் பெயர் பத்மாவதி. (ஹா....பத்மாவதி) கற்பிற்கரசி (என்று சொல்லும்போது அவனது துயரம் மேன்மேலும் மிகுந்தது) அவளே முதலில் எனது பட்ட மகிஷி. நான் எனது இரண்டாவது மனைவியின்மேல் கொண்ட பாழும் மோகத்தால் முதலவளாகிய பத்மாவதியை வெறுத்து கற்பவதி என்றும் பாராமல் அவளை நாட்டைவிட்டு வெளியேற்றி னேன். (ஹா........பத்மாவதி, கற்பிற்கருங்கலமே, கற்பவதியாகச் சென்ற நீ எங்கெங்கு சென்று எவ்வாறு துடித்தனையோ!)........' (இதையெல்லாம் கேட்ட சிற்றரசனுக்கு தலை 'கிர்' என்று சுழன்றது. கண்களில் நீர்பெருகிற்று. மதனபுரி, ஞானசேகரன், பத்மாவதி, என்னும் மூன்று வார்த்தைகளும் மூன்று பாணங்கள்போல் அவனது இருதயத்தில் பாய்ந்து தைத்தன. அவன் அக்கணமே, 'ஆ, தந்தையே........தந்தையே, அம்மா, இதோ எனது தந்தை....' என்று அலறி சிம்மாசனத்தினின்றும் உருண்டு தரையில் வீழ்ந்து மூர்ச்சை ஆனான்.

சபாமண்டபம் எங்கும் குழப்பம். சிற்றரசனுக்கு நேர்ந்த விபத்து என்னவென்பதை அறிய ஒருவராலும் முடியவில்லை. ஞானசேகரன் அசைவற்று தூண்போல் நின்றுவிட்டான்.

அப்பொழுது சுமார் ஐம்பது வயது மதிக்கக்கூடிய ஒரு மங்கை அலறிப் புடைத்துக்கொண்டு, 'ஆ! என் கண்ணே, வீரகேசரி உனக்கென்னடா விபத்து வந்தது? என் கண்மணி' என்று—கதறியவண்ணம் சிற்றரசனிடம் ஓடினாள். சிலர் சிற்றரசனுக்கு சிகிச்சை செய்தனர். அப்பெண்மணியைக்கண்ட ஞானசேகரன் துடிதுடித்தவண்ணம், 'ஹா........பத்மாவதி, பத்மாவதி....' என்று அலறி, வந்த மங்கையின் பாதங்களில் அடியற்ற மரம்போல் வீழ்ந்தான். இதைக்கண்ட சபையிலிருந்தோர் யாவரும் அளவற்ற ஆச்சரியமடைந்தனர்.

பெண்மணி திடுக்கிட்டு விலகி நின்று யாரோ ஒருவர் தனது பெயரைச் சொல்லி அலறித் தன் பாதங்களில் விழுந்ததைக் கண்டு வியப்பும் திகிலுமடைந்து, 'தாங்கள் யார்?' என்று வினவினாள்.

இதைக்கேட்ட அரசன் ஞானசேகரன் அளவுமீறிய துயரத்துடனும் வெட்கத்துடனும் விம்மிவிம்மி அழுதுகொண்டே, 'பத்மாவதி........உனது துரோகி, உனது கணவன். மதனபுரி அரசன் ஞானசேகரன் அல்லவா நான்? பத்மாமதி........என்னை மன்னிப்பாயா?' என்று கதறினான்.

இதைக்கேட்டவள் அப்படியே இடிந்து விட்டாள். அவள் ஒருபுறம் இடி ஓசைகேட்ட நாகம்போலும், ஒருபுறம் மணியை இழந்த நாகம் அம்மணியை மீண்டும் பெற்றதைப் போலும் அலறிக்கொண்டு, 'ஆ நாதா, நாதா........தாங்கள்தானா? ஐயோ' என்று ஞானசேகரனது கரங்களைப்பற்றித் தூக்கி, 'நாதா........ நாதா, தங்களையா நான் இந்நிலையில் காண்பது?........ஐயோ தங்களுக்கா இக்கதி நேரவேண்டும்? தங்களை இந்நிலையில் காண நான் என்ன பாபம் செய்தேனோ? என் மனம் துடிக்கின்றதே. ஹே, கடவுளே, என் நாதனை ஏன் இக்கதிக்கு ஆளாக்கினாய்?' என்று கதறி ஞானசேகரனது கண்களைத் துடைத்தாள். இதற்குள் சிற்றரசன் வீரகேசரியும் மூர்ச்சை தெளிந்து, 'தந்தையே' என்று ஓடி ஞானசேகரனைக் கட்டிக்கொண்டான். பத்மாவதி வீரகேசரியை நோக்கி, 'அப்பா, இவர்தான் உனது தந்தை' என்றாள். ஞானசேகரன் கண்களில் கண்ணீர் ததும்ப பத்மாவதியையும், வீரகேசரியையும் கட்டித்தழுவினான். இதைக்கண்ட ஒவ்வொருவரும் ஒன்று மறியாமல் திகைத்தனர்.

நாட்கள் பல சென்றன. ஞானசேகரன் தனது முதல் மனைவி பத்மாவதியையும், குமாரனையும் எதிர்பாராதவிதமாய் அடைந்தது

ணல் ஒருபுறம் சந்தோஷமும், தனது மகள் செய்த கொடுமையினல் ஒரு புறம் பெரிதும் துயரமும் கொண்டவனய் மாளிகையில் வீற் றிருந்தான். அவன் அருகில் பத்மாவதியும் வீரகேசரியும் அமர்ந் திருந்தனர். அரசன் தனது மகளின் கொடுமையை நினைத்த வண் ணம் கண்ணீர் வடித்தான்.

அரசனது முகத்தை நோக்கிய பத்மாவதி, 'நாதா! செழிப் பென்பதே சிறிதுமில்லாமல் சதா கலக்கத்துடனும் கண்ணீருடனும் இருப்பதின் காரணம் என்ன? நாதா, தாங்கள் அந்தக் கோர நிலை யில் இருந்ததின் காரணம் என்ன?' என்று கலக்கத்துடன் வினவி ணள். இதைக்கேட்ட அரசன் மேலும் துக்கம் மிகுந்தவனய், 'பத்மா வதி, அதை நான் உன்னிடம் எவ்வாறு தெரிவிப்பேன்? நான் துணிந்தாலும் என் நாவு துணியவில்லையே. என்ருலும் தெரிவிக்கின் றேன்........ஆனல் ஒன்று, நான் 'பழிக்குப் பழி' வாங்கவேண்டும். அதை நீங்கள் தடுக்கலாகாது' என்ருன்.

இதைக்கேட்ட பத்மாவதி திடுக்கிட்டு 'நாதா! பழிக்குப்பழியா? அது என்ன அவ்வாறு கூறுகின்றீர்கள்?' என்ருள்.

ஞானசேகரன், 'பத்மாவதி! எனது மனைவி இளையவளின் வயிற்றில் ஒரு பெண் பிறந்தது உனக்குத் தெரியுமல்லவா? உன்னை பாவியான நான் அரண்மனையை விட்டு கற்பவதி யென்றும் பாராமல் வெளிப்பேற்றினேன், நீ அரண்மனையைவிட்டு சென்ருய். எனக்குப் பிடித்தது சனியன். பத்மாவதி! நீ வந்த ஒரு வருடத்திற் கெல்லாம் இளையவளும் காலமானள். அந்தோ! அவளது பெண்ணையே நான் பெருஞ் செல்வமாக எண்ணி சீருடன் வளர்த்து காலத்தில் அவளை ஒரு ராஜகுமாரனுக்கே மணம் புரிவித்தேன். அந்தோ! சிறிது காலங்கழித்து எனக்கு ஒருவித கொடிய வியாதி உண்டாயிற்று. ஆ! பத்மாவதி, 'வியாதியில் பிழைக்கமாட்டோம்' என்ற எண்ணத்தினலும் நான் அக்கொடியவளின் மீது கொண்டி ருந்த அளவுகடந்த அன்பினலும், நமது மதனபுரி ராஜ்ஜியத்தையே அவளுக்கு மரண சாஸனமாகப் பட்டம் சூட்டினேன். ஆனல் நான் வியாதியால் இறந்துவிடாமல் நாளடைவில் சிறிது குண மடைந்தபோது (என்று அதி ஆத்திரத்துடன் பெரு மூச்சு விட்டுப் புலம்பி) அவளை அண்டிச் சுகமாய் வாழலாம் என்றெண்ணி அரண் மனையில் ஓர் அடி எடுத்து வைத்தேன். ஐயோ! மேலே கூற முடி யாமல் என் மனம துடிக்கின்றதே, தலை சுழல்கின்றதே' (பத்மா வதியும் வீரகேசரியும் அடக்கொணத் துயரத்துடன் அரசனைத் தேற்றினர்.) அரசன் மேலும், 'அப்பாதகி, ஐயோ! என்னென்று சொல்லுவேன்' என்று தேம்பினன். 'நாதா! நாதா! என்ன

நேர்ந்தது? என்ன தெரிவித்தாள்?' என்று பதட்டத்துடன் வினவினாள் பத்மாவதி.

அரசன், 'அவளா, அப்பாதகியா, எனக்கு ஒருவேளை அன்னமுமிடாமல், என் காதில் நாராசத்தைக் காய்ச்சி விட்டாற்போல் என் ஹிருதயத்தைக் கோடாரிகொண்டு பிளந்தாற்போல், ஹா! 'வந்தவழியே போ, கிழப்பயலே' என்று சொல்லி வசைச் சொற்கள் பலவற்றாலும் தூஷித்தனளே! ஆ! நான் உயிருடனிருக்கும் போதே, 'மதனபுரி அரசன் ஞானசேகரன் தீராப் பிணியால் உயிர் நீத்தான்' என்று பறைசாற்றுவித்தனளே! ஐயோ, என் செய்வேன்? 'பழிக்குப்பழி' வாங்கவேண்டாமா? பழிக்குப்பழி' என்று கதறி சாய்ந்தான்.

இதைக்கேட்ட பத்மாவதி, 'ஆ! என்ன என்ன? ஐயோ' என்று அலறினாள்.

வீரகேசரியோ அளவுகடந்த ஆத்திரத்துடன் 'ஆ! தந்தையே! தங்களையா? தங்களையா அவ்வாறு செய்தாள்? இதோ ஒருவார்த்தை கூறுங்கள். அக்கொடிய பாதகியைக் கொன்றொழித்துப் பழிக்குப்பழி வாங்கி அவளது இராஜ்ஜியத்தையும் நாசம் செய்துவருகிறேன்' என்று துடித்தான்.

இதைக்கேட்ட ஞானசேகரன் சற்றுத் தெளிந்து, 'அப்பா! வீரகேசரி, எனது அருமைப் பிரஜைகள் நிறைந்த இராஜ்யம் ஒரு பாபத்தையுமறியாது. அவளைக் கொல்வது சரியல்ல, நான் சொல்வதைக்கேள். அவள் என்னை எவ்வாறு துடிக்கவைத்தனளோ, அதைப்போல் பன்மடங்கு, தீயில்பட்ட புழுவென, அவளைத் துடிக்க வைத்து நாம் கண்ணாரக்கண்டு நமது பழியைத் தீர்த்துக்கொள்ள வேண்டும். அப்பா! அக்கொடியவளுக்கு நான் ஒரு லிகிதம் எழுதித் தருகிறேன். அதை நீயே பத்திரமாக எடுத்துச் சென்று அவளிடம் கொடுத்து அவளது தன்மையை அறிந்துவா. ஆசைப் பேய் கொண்ட அப்பாபி கடிதத்தைக்கண்ட மாத்திரத்தில் உன்னோடு இங்கு வருவாள். பிறகு, அதற்குமேல் நான் பார்த்துக்கொள்கிறேன். நீ செல்லும்போது ஓர் ஒற்றனது வேடம் புனைந்து செல்லவேண்டும்' என்றான்.

* * *

அரசன் லிகிதம் வரைந்து கொடுக்க, வீரகேசரி 'தந்தை சொல் மிக்க மந்திரமில்லை' என்றபடி, ஓர் ஒற்றன்போல் வேடம் புனைந்து ஓர் குதிரையின்மேல் கடிதத்துடன் புறப்பட்டு மதனபுரியை அடைந்தான். தனக்கு நிகர் யாருமில்லை என்ற கர்வத்துடன் சிம்மாசனத்தில் வீற்றிருந்த அரசியிடம் சென்று வணங்கி நின்று 'மாளவ

புரத்தரசர் ஞானசேகரர் இக்கடிதத்தைத் தங்களிடம் சேர்த்து வரச் சொன்னர்' என்று வாய்பொத்தி நின்றான்.

இதைக்கேட்டதும் அரசி, 'ஆ! யார்? ஞானசேகரனு? மாளவபுரத்து அரசனு? ஞானசேகரன் இன்னும் உயிருடன் இருக்கின்றானு? எதற்காக இக்கடிதம்?' என்று அடுக்கினுள்.

இதைக்கேட்ட ஒற்றனது வேடத்தில் வந்த வீரகேசரிக்கு அடக்கொணு ஆத்திரம் பொங்கி எழுந்தது. அவனது வலதுகை அவனை அறியாமலே உடைவாளை நெருங்கியது. ஆனல் தந்தை சொல் மனத்தில் உதிக்கவே ஒருவாறு சாந்தமடைந்தான். ஆத்திரத்தை அடக்கிக்கொண்டு 'தேவி! ஏதோ ஒரு சுபசமாசாரம். அதன்பொருட்டே இக்கடிதம்' என்றான்.

உடனே அரசி கடிதத்தை வாங்கிப் பரபரப்புடன் பிரித்துப் படிக்கலானுள். கடிதத்தைப் படிக்கப்படிக்க அவளுக்கு அளவு கடந்த ஆச்சரியமும் ஆனந்தமும், சந்தோஷமும் உண்டாயிற்று. 'எனது தகப்பனு? ஞானசேகரனு? விருந்தா? எனக்கு மாளவபுரி பட்டாபிஷேகமா?' என்று வாய்விட்டுச் சொல்லி கலகலவென்று சிரித்தாள்.

வீரகேசரிக்குக் கைகள் படவென்று துடித்தன. கண்கள் சிவந்தன. பற்களை நறநறவென்று கடித்தான். பிறகு ஒருவாறு சாந்தமடைந்தான். உடனே அரசி தனது கணவனுடனும், பரிவாரங்களுடனும் மாளவபுரத்தை அடைந்தாள். அவளைக்கண்ட ஞானசேகரனே தன்னுள்ளத்தில் எழுந்த ஆத்திரத்தை எல்லாம் அடக்கிக்கொண்டு, 'ஆ! கண்ணே மீனு! வந்தனையா? இன்றே என் அரண்மனை புனிதமடைந்தது. நீயே பாக்கியவதி, புனிதவதி' என்று பலவாறு வாழ்த்தி வந்த அரசியாகிய தனது துரோகியை வரவேற்றான். அன்று எல்லோருக்கும் சம்பிரமாக விருந்து அளிக்கப்பட்டது.

அன்றுமாலை ஞானசேகரன் தனது மகள்—தனது துரோகி மீனலோசனியை தனியாக ஓரிடத்திலழைத்து, 'கண்ணே! மீனு! நான் உன்னை எதற்காக இங்கு வரவழைத்தேன் என்பது தெரியுமன்றே? இந்த மாளவபுரி ராஜ்ஜியத்தையும் உனக்கு மகுடம் சூட்டத்தான். ஆனல் மதனபுரி ராஜ்ஜியத்தின் மரண சாசஸனத்தையும் செங்கோலையும் கொண்டுவந்தால் நல்லதென்று நினைக்கிறேன். நான் இவ்விராஜ்ஜியத்தையும் சேர்த்து ஒரே பத்திரத்தில் சாஸனமாக எழுதித் தந்துவிடுகிறேன். செங்கோலும் ஒன்ருய் இருத்தல் நலம். உனது அபிப்பிராயம் என்ன?' என்று மிகத் தந்திரமாகவும், சந்தோஷமாகவும் (உள்ளே கிளம்பிய ஆத்திரத்தை எல்லாம் அடக்கிக்கொண்டு) கேட்டான்.

இதைக்கேட்ட அரசி அதிக சந்தோஷமடைந்து, 'தந்தையே! நன்மைக்காகவே இதோ அப்பழைய சாஸனத்தையும், செங்கோலையும் கொண்டுவந்துள்ளேன்' என்று தன் கையிலிருந்த உறையிட்ட ஓர் செங்கோலையும், சாஸனமாகிய உறையிட்ட ஓர் கடிதத்தையும் அரசன் முன் வைத்தாள்.

இதைக்கண்ட ஞானசேகரன் 'கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்தது' என நினைத்து, மிகவும் சந்தோஷத்துடன் 'கண்மணி மீனலோசனி, இக்கந்தல் காகிதமும், இம்மரக்கட்டையும் எதற்கு? வேறொரு சாஸனமும், செங்கோலும்தான் ஏற்படுத்தப் போகின்றோமே, இப்பழைய சாஸனமும் செங்கோலும் வேறு எவர் கையிலாவது அகப்படின் நமக்கு ஆபத்து உண்டாகும். ஆகையால் நீயே இவைகளை நெருப்பில்போட்டு எரித்துவிடு.' என்றான் தந்திரமாக. உடனே அரசி சந்தோஷ மிகுதியாலும் அவசரபுத்தியினாலும் அளவற்ற ஆசையினாலும் அந்த சாஸனத்தையும், செங்கோலையும் பரபரப்புடன் எடுத்து அவளருகில் மணத்திற்காக எரிந்து கொண்டிருந்த அகிற்கட்டைத்தீயில் எரிந்து விட்டாள். காகிதமாகிய சாஸனம் நொடிப்பொழுதில் எரிந்து சாம்பலாயிற்று. சந்தனக் கட்டையினலாகிய செங்கோல் சிறிது நேரத்தில் கருகி சிவந்து நெருப்போடு நெருப்பாய்மாறி கம்மென்ற வாசனையைக் கிளப்பியது.

அரசன் ஞானசேகரன் களிகூர்ந்து, 'மீனலோசனி,....நீயே பாக்கியவதி....நீயே புனிதவதி. நீ சந்தோஷமாக இன்று மதனபுரி போய்ச் சேர். நான் நாளைய இரவு இரண்டு ராஜ்ஜியங்களுக்கும் சேர்த்து பொற்தகட்டில் பொறிக்கப்பட்ட சாஸனத்துடனும், வைரங்களால் இழைக்கப்பட்ட செங்கோலுடனும் உன்னிடம்வந்து சேருகிறேன். பிறகு நீ இம்மாளவபுரத்தையும் மதனபுரியோடு சேர்த்து ஏகபோக ராஜ்ஜியமாக ஆளலாம். இப்பொழுது நான் உன்னுடன் வந்தால் ஊரார் கலகம் செய்தாலும் செய்வார்கள்....' என்று தந்திரமாகச் சொன்னான். இவை யாவும் உண்மை என்று நம்பிய அரசியும், 'தந்தையே! நாளை இரவு வந்துவிடுகின்றீர்களா? நான் இப்பொழுது போகின்றேன்....நாளை இரவுவந்து சேருங்கள்' என்று சொல்லி சந்தோஷமாய் தனது கணவனுடனும் பரிவாரங்களுடனும் மதனபுரியை அடைந்தாள்.

* * *

மறுநாள் வந்தது. அரசி மீனலோசனி எப்பொழுது இரவு வரும் வருமென்று காத்துக் கொண்டிருந்தாள். இரவும் வந்தது. ஜயபேரிகை முழக்கத்துடன் ஒருபெரிய கூட்டம் மதனபுரியை நோக்கி வந்துகொண்டிருந்தது. அதைக்கண்ட அரசி சந்தோஷத்தால் கூத்தாடினாள். இரு ராஜ்ஜிய செங்கோலைத்தாங்க அவளது

கைகள் துடித்தன. கூட்டமும் அரண்மனையை அடைந்தது. அரசி கூட்டத்தை சுற்றி சுற்றிவந்து கூத்தாடினுள். ஆனல் ஞானசேகர னைக் கூட்டத்தில் காணேம். விஷயம் யாதென்று விசாரித்தாள். 'அரசர் ஞானசேகரருக்கு தேகம் அசௌகிரியமா யிருக்கிறது. அவர் சாஸனத்தையும், செங்கோலையும் எங்களிடம் கொடுத்து பத்திரமாகத் தங்களிடம் சேர்த்து வரும்படி கட்டளையிட்டார். அரசர் உடம்பு சௌகரியமானவுடன் தங்களிடம்வந்து சேர்வார்' என்று ஒற்றர்கள் தெரிவித்து தாங்கள் சுமந்துவந்த ஒருபெரிய இருமபுப் பெட்டியை அரசியின்முன் இறக்கி வைத்து அதன் திறவு கோலையும் அவளிடம் தந்தனர்.

உடனே அரசி ஆனந்தத்தை அடங்கமாட்டாதவளாய், 'கிழவன் இனிமேல் வந்தாலென்ன? போனலென்ன?' என்றெண்ணி அந்த இருப்புப் பெட்டியைத்தானே தூக்கிக்கொண்டு மதயானையைப்போல் அந்தப்புரத்திற்கு ஓடினுள். (பெட்டியைக் கொண்டு வந்த வீரர்கள் மறைந்தனர்.)

அரசி சந்தோஷக்கடலில் மூழ்கித் தத்தளித்தவண்ணம் திறவு கோல்கொண்டு பெட்டியை விரைவில் திறந்தாள். திறந்தவள் திகில் கொண்டு மருண்டு 'ஓ' வென்றலறிப் பின்னடைந்தாள். அவளது சந்தோஷமெல்லாம் ஆயிரமடங்கு துக்கமாகவும் திகிலாகவும் மாறியது. ஏதேதோ கூறி அலறினுள். இந்த அலறல் சப்தத்தைக்கேட்ட அவளது கணவன் திகிலடைந்து அங்கு ஓடிவந்து பார்க்க, அப்பெட்டியினுள் இரண்டு மனித மண்டையோடுகளும், இரண்டு உறையிட்ட குத்துவாள்களும், ஒரு கடிதமும் இருந்தன. இதைக்கண்ட அரசனும் தலையில் இடிவிழுந்தவன்போல் ஆனன். உடனே அரசியும் அரசனும் திகிலுடனும், மதிமயக்கத்துடனும் கைகள் நடுங்கக் கடிதத்தைப் பிரித்துப் படிக்கலாயினர். கடிதம பின்வருமாறு:—

என் குடியைக் கெடுக்கவந்த கோடாரிக்காம்பே, அடி பாதகி, என் வயிற்றில் பிறந்த நீ எனக்கு ஒருவேளை அன்னமுமிடாமல் 'வந்த வழியே போ கிழப்பயலே' என்று சொன்னயல்லவா? பெற்ற மனதை புண்படுத்திய பேயே, இவை யாவும் உன்னைப் பிடித்திருக்கும் ஆசை, கர்வம் என்னும பேய்கள் செய்யும் வேலை அல்லவா? அடி வஞ்சனை மிக்க நெஞ்சம்வாய்ந்த பஞ்சமா பாதகி! உனக்குச் செங்கோலா வேண்டும்? செங்கோல்,....என்ன ஆசை? 'ஆசைக்கோர் அளவில்லை' என்னும் வாக்கியத்தை உன்பாலே கண்டேன். அடி பாதகி, நான் உனக்கு அனுப்பியுள்ள ஆஸ்தி இவைகளே. (1) உங்களது கொடிய உயிர்களைப் போக்கிக்கொள்ள இவ்விரு உடைவாள்கள். (2) பேய்களே, அப்படி உயிரைவிடத் துணியாவிட்டால் உங்களது உயிருள்ளவரை வயிறு வளர்க்கும்பொருட்டு

புலைச்சேரிக்குச் சென்று பிச்சை வாங்க இவ்விரு மண்டையோடுகள். ஆசைப் பேய்களே, நான் எனது பழியைத் தீர்த்துக்கொண்டேன். இப்படிக்கு, எனது பழியை உங்கள் வசம் தீர்த்துக்கொண்ட மதன புரி மாளவபுரி அரசன்,

ஞானசேகரன்.

இதைப் படித்த மாத்திரத்தில் அரசி மீனுவும், அரசனும் பைத்தியம் பிடித்தவர்கள் போலாயினர். ஏதேதோ பிதற்றினர். ஓடினர். தனது தந்தைக்குச்செய்த துரோகங்களெல்லாம் அரசியின் மனதில் கூரிய ஈட்டிகள்போல் தைத்தன. தனக்கு நேர்ந்த அவமானத்தை நினைத்து உருகினுள். தந்தைக்குச்செய்த பாதகங்களை நினைத்துக் கதறினுள். 'ஹா! தந்தையே, தந்தையே நல்ல புத்தி, நல்ல புத்தி கற்பித்தீர்கள். என்னைப்போன்ற துரோகியும் இவ்வுலகில் இனிமேல் பிறக்கப் போகின்றனரா? ஆ மெய், மெய். நான் ஆசை என்னும் கடலில்தான் இவ்வளவு காலம் மூழ்கிக்கிடந்தேன். தாங்கள் கரையேற்றினீர்கள். தந்தையே, ஐயோ! தந்தை என்றும் பாராமல் தகாத கொடிய ஈவிரக்கமற்ற துரோகங்களை எல்லாம் செய்த என்மனம் பிளந்து போகாதா? என் தலையில் இடிவிழாதா? நான் இனி இவ்வுலகில் ஒருக்கணநேரமும் உயிருடனிருப்பது தகுதியல்ல என்ருலும் தந்தையே, நான் தங்களிடம் கடைசிமுறையாக மன்னிப்புக் கேட்டுக்கொண்டு உயிரை விடுவதே மேல். உங்களது கையினுலேயே என் உயிர் போனுல் எனது ஜன்மம் ஒருவேளை கடைத்தேறினுலும் தேறும். ஹா! எனக்கு இத்தண்டனை போதாது. வேண்டும், இன்னும் வேண்டும். தந்தையே!' என்றலறி மூர்ச்சித்துக் கீழே சாய்ந்தாள்.

*　　*　　*

தன் சுயநிலைவரக் கண்விழித்தாள். அந்தகாரம் நிறைந்த அந் நடுநிசியில் ஊரெங்கும் ஜனக்குழப்பம். 'அவளைக் குத்துங்கள். கொல்லுங்கள். துரோகி, பெற்ற மனதைப் புண்படுத்திய பேய். தந்தை உயிருடனிருக்கும் பொழுதே ஊரார் யாவரும் அறிய, 'இறந்துவிட்டான்' என்று பறைசாற்றுவித்த துரோகி. கொடியவள் ஆ! எங்கள் அரசர் ஞானசேகரரை என்று காண்போம்? என்று எங்கள் துயர் தீரும்? அவளைக் குத்து, கொல்லு' என்ற ஒரே ஆரவாரமும், திடீர் திடீர் என்று அரண்மனையின் கதவுகளை இடிக்கும் சப்தமும் கேட்டது.

இதைக்கேட்ட அரசி மீனலோசனி தான் தனது தந்தைக்குச் செய்த துரோகம் ஊராருக்குத் தெரிந்துவிட்டதை உணர்ந்தாள். நிச்சயம் அவர்கள் தன்னைக் கொன்றுவிடுவார்கள் என்றெண்ணினுள். கதறினுள் துடித்தாள். உடனே தனது தந்தையால் அனுப்ப

பட்ட உடைவாள்களில் ஒன்றை எடுத்துக் கையில் பிடித்துக் கொண்டு கண்களில் கண்ணீரை தாரைதாரையாய்ப் பெருக்கிய வண்ணம் நின்றாள். அப்பொழுது அவளது கணவன், 'ஆ மீனா, மீனா, மோசம், மோசம். அவர்கள் கையினால் நாம் இறப்பதைவிட நாமே நமது உயிரைப் போக்கிக்கொள்வது நலம்' என்று அலறிய வண்ணம் ஓடிவந்து ஞானசேகரனால் அனுப்பப்பட்ட மற்றொரு உடைவாளை எடுத்துக் கையில் ஏந்தியவண்ணம் கண்கலங்கித் தயங்கி நின்றான். அரசி மீனலோசனியோ, 'ஆ, தந்தையே நான் தங்களிடம் கடைசி முறையாக மன்னிப்புக் கேட்டுக்கொள்ளவும் முடியாது போலிருக்கிறதே, ஐயோ, தந்தையே அதோ அதோ வந்து விட்டார்கள். தந்தையே' என்று கதறியவண்ணம் உடைவாளேந்திய வலது கையை மேலே உயர்த்தி உடைவாளை அதிவேகமாக இடது மார்பில் சொருகப்போன அதேசமயம், 'வேண்டாம் நிறுத்து' என்ற சப்தத்துடன் ஒரு கரம் வாளேந்திய அவளது வலதுகையை இறுகப்பற்றியது. அரசி திகில்கொண்டு நடுக்கத்துடன் திரும்பியவள், 'ஆ, தந்தையே, தந்தையே என்னை மன்னிப்பீர்களா? நான் ஓர் கொடிய பாபி. இதோ இந்த வாளைக்கொண்டே ஈவிரக்கமற்ற என் இருதயத்தைப் பிளந்து தங்களது பழியைத் தீர்த்துக் கொள்ளுங்கள்' என்று கதறி தனது கரத்தைப்பற்றி நின்ற ஞான சேகரனது பாதங்களில் விழுந்தாள். அவளது கணவனும், 'அரசே, என்னையும் மன்னித்துத் தங்களது கரங்களாலேயே எனது ஆவியைப் போக்கித் தங்களது பழியைத் தீர்த்துக் கொள்ளுங்கள்' என்றுகூறி ஞானசேகரனது பாதங்களில் விழுந்தான்.

இதை எல்லாம் கண்ட ஞானசேகரன் அசைவற்று ஸ்தம்பம் போல் நின்றுவிட்டான். அவனது மனம் கரைந்தது. கண்களில் கண்ணீர் ததும்பிற்று. அவன் கலக்கமும், இரக்கமும் நிறைந்த குரலில், 'மீனலோசனி ஆசை, அகங்காரம் என்னும் பேய்கள் வாய்ப்பாட்டு 'எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம், உய்வில்லை, செய் நன்றிகொன்றமகற்கு' என்னும் பெரியோரின் திருவாக்கையும் மறந்து உன்னைப் பெற்றெடுத்த என் மனதைப் புண்படுத்திவிட்டாய். என்றாலும் அது உன்மீது குற்றமில்லை. தெய்வத்தின் சோதனை. உங்களுக்கு இந்த தண்டனை போதும். இனிமேலாவது நீங்கள் அகங்காரத்தை ஒழித்து இன்பமாய் வாழ்வீர்களென்று நம்புகிறேன். நான் எனது மனப்பூர்வமாக உங்களை மன்னித்து விட்டேன். மீனலோசனி, உனது கணவனுக்கு இந்த ராஜ்ஜியத்தில் முதன் மந்திரி பட்டத்தை அளிக்கின்றேன். நீயும், உனது கணவனும் ஒரு குறைவுமின்றி வாழலாம். எழுந்து என் பின்னே வாருங்கள்' என்றான். மீனலோசனி மெய்சோர கால்கள் நடுங்க மெள்ள எழுந்தாள். ஞானசேகரனது முகத்தை நோக்கவும்

மனமில்லாதவளாய் தலைகுனிந்து நின்றாள். அவளது கண்களில் கண்ணீர் அருவிபோல் ஓடியது. அவளது கணவனும் எழுந்து பைத்தியம் கொண்டவன்போல் நின்றான். பிறகு ஞானசேகரன் முன்னால் நடக்க இருவரும் கால்கள் தள்ளாட அவன் பின்னால் சென்றனர்.

அன்று வீரகேசரிக்கு மதனபுரி பட்டாபிஷேகம். மதனபுரி எங்கும் ஒரே சந்தோஷ ஆரவாரம். தெருக்களெங்கும் தோரணங்கள் அழகாகத் தொங்கிக்கொண்டிருந்தன. ஆடவரும், பெண்டிரும் நல்லுடை தரித்துக் கூட்டம்கூட்டமாக அரண்மனையை நோக்கிச் சென்றனர். அரண்மனை தேவேந்திரன் கொலுமண்டபம்போல் சிங்காரிக்கப்பட்டிருந்தது. அரண்மனை எங்கும் எள்விழ இடமில்லாதபடி மாளவபுரி, மதனபுரி இவ்விரண்டு ராஜ்ஜியப் பிரஜைகளும்கூடி இருந்தனர்.

எங்கும் ஜயபேரிகை முழங்கிற்று. சிம்மாசனத்தில் வீரகேசரி சர்வ அலங்காரத்துடன் வீற்றிருந்தான். அவனருகில் ஒருபக்கத்தில் ஞானசேகரனும் பத்மாவதியும, மறுபக்கத்தில் மீனலோசனியும் அவளது கணவனுமாக நின்றனர். ஞானசேகரன் மகுடத்தை வீரகேசரியின் சிரத்தில் சூட்டினான். அதே சமயம் டமடமவென்ற ஜயபேரிகை முழக்கத்துடன் 'வீரகேசரி மகாராஜாவுக்கு 'ஜே' என்ற சந்தோஷ ஆரவாரம் கிளம்பிற்று. 'அரசர்க்கு அரசர் ஞானசேகர மகாராஜாவுக்கு' 'ஜே' 'பத்மாவதிதேவிக்கு ஜே' என்ற ஆரவாரமும் கிளம்பிற்று. வீரகேசரியின் கைகளில் இரு ராஜ்ஜியங்களின் செங்கோல் ஒளியுடன் பிரகாசித்தது. ஞானசேகரனும், பத்மாவதிதேவியும் வீரகேசரியை ஆசீர்வதித்தனர். வீரகேசரி 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' என்றெண்ணி அவர்களது பாதங்களில் வணங்கினான். மீனலோசனியும் அவளது கணவனும் வீரகேசரியை தங்கள் மனப்பூர்வமாக ஆசீர்வதித்தனர். ஞானசேகரன் மீனலோசனியின் கணவனுக்கு மந்திரிப் பட்டத்தை அளித்தான். மீனலோசனி தந்தையின் பாதத்தில் விழுந்து நமஸ்கரித்தாள். ஞானசேகரன் அவளை அன்புடன் ஆசிர்வதித்தான். பிரஜைகளுக்கு கணக்கற்ற தானதருமங்கள் வழங்கப்பட்டன. ஆயிரக்கணக்கான அன்ன மடங்கள் திறக்கப்பட்டன.

ஒருவன்:—அடே! என் மாமியாரின் முகம் இந்த நாயின் முகத்தைப் போலிருப்பதாகக் கூறினையல்லவா?

மற்றொருவன்:—ஆமாம்! அதற்கென்ன இப்போது?

முதல்வன்:—வா சண்டைக்கு. என் நாயை அவமதிப்பாக பேசுகிறவர்களை நான் சும்மாவிடமாட்டேன். —S. செல்லப்பா.

நண்பனின் துயரம்.

[மேட்டுப்பாளையம் வி. எ. ஜானகிராமன்]

என் பிரியமுள்ள ஷண்முகத்திற்கு,

நண்பா! நீ என் விவாகத்தைக் குறித்து அடிக்கடி கேட்டுவந்தும் அதைப்பற்றி பிரஸ்தாபிக்காததற்குக் காரணம், தக்க சமயத்தை எதிர்பார்த்திருந்ததுதான். என் நலத்தைக் கோருவதில் நீ என் பெற்றோர்களைக் காட்டிலும் சிரத்தை கொண்டவன் என்பதை நான் அறிவேன். உன்னுடைய பூரண அன்பிற்குப் பாத்திரமான எனக்கு இன்று ஏற்பட்டுள்ள இடரைக் கண்டு நீ ஏமாற்றமடைந்த போதிலும், நான் கொண்டுள்ள முடிவுமாத்திரம் எவ்விதத்திலும் நியாயமானதென்பதை சந்தேகமற உணர்வாய். சென்ற இரண்டு வருடமாக வற்புறுத்திவந்தும் இவ்விஷயத்தில் எவ்வித சம்மதத்தையும் தெரிவிக்காததுபற்றி நீ மிகவும் வருத்தத்துடன் எழுதியிருக்கிறாய். உண்மையை அறியாத நீ கூறும் இவைகளைக் கண்டு ஆச்சரியப்படுவதற்கில்லை. பெற்றோர்களது மாறுபாடான கொள்கையை யறிந்த நான் வெகு நாள்வரை என் அபிப்பிராயத்தைத் தெரிவிக்க தைரியமற்றவனாகவே இருந்தேன். ஆனால் கொஞ்ச நாட்கட்குமுன் அவர்களுடைய துரிதமான ஏற்பாடுகளைக் கண்டதும் என் விருப்பத்தைத் தெரிவிப்பதவசியமென்றெண்ணி நான் மனமார காதலித்த உத்தமி லக்ஷ்மியைப்பற்றிகூறி அவளைத் தவிர வேறொருவரை மணந்து என்னால் ஒருவித இன்பமும் அடைய முடியாதென்றும் தெரிவித்தேன். அவ்வளவுதான். அன்றுமுதல் நானடையும் நிந்தனைக்கும் கொடுமைகளுக்கும் கணக்கே கிடையாது. கொள்ளிக் கட்டையாம். குலத்தைக் கெடுக்கவந்த கோடாலியாம். துரதிர்ஷ்டவசமாக அவள் வேறு ஜாதியினளாயிருப்பது வாஸ்தவமே. காதலென்ன இவர்களைப்போல் குலத்தையும் கோத்திரத்தையுமா தேடிச்செல்கிறது? உள்ளத்தினின்றும் கிளர்ந்தெழும் உண்மைக் காதலின் வீரத்தை யறியாத இவர்கள் என்னென்னவோ மிரட்டுகிறார்கள். அன்னிய ஜாதியில் பிறந்த அவள்மேல் கொண்ட காதலைக் கைவிடாவிடில் என் முகத்திலும் விழிக்கமாட்டார்களாம். காதலானது மோகத்தினால் தூண்டப்பட்ட மதியற்ற செயலென்றும் மடமையென்றும் ஏசுகிறார்கள்.

இத்தகைய கடுகடுப்புடன் பேசும் இவர்களுக்குக் காதலென்றால் வெறுப்போவெனில் ஒருக்காலுமில்லை. நாடகத்தில் காதல் என்றால் நயப்புக்கொண்டு கண்ணெரிய உடல்வலிக்க நாடகங்களுக்குச்சென்று நோக்குகின்றனர். காதல் கருத்தமைந்த நாவல் என்றால் காலைமுதல் மாலைவரை சலியாமல் படிப்பர். ஆனால் பருவமடைந்த நாம் ஒரு பெண்ணோடு தனித்துப் பேசினோம் என்றால்

தடிகொண்டு தாக்குகின்றனர். ஒரு ஆண் ஒரு மங்கையைப்பற்றிச் சிந்திப்பதோ, ஒருபெண் ஒரு ஆணைப்பற்றிஎண்ணுவதோ பாவமாம், பழிக்கிடமாம். காதல்கொண்ட காதலர் இருவரும் ஊராரால் இகழப்படுகின்றனர். உற்றாரால் வெறுக்கப்படுகின்றனர். பெற்றோரால் வீட்டைவிட்டு ஓட்டப்படுகின்றனர். பின்பு அவர்கள் கதி அதோகதிதான். காதல் வழிதான் கரடுமுரடானதென்பர், அதிலும் கல்லும் முள்ளுமானதென்றே கூறவேண்டும். நம்நாட்டில் பகுத்தறிவற்ற மிருகங்களும்கூட ஒன்று தனக்கேற்ற இன்னொன்றைத் தானே தேடிக்கொள்ளுகிறது. அவ்வாறே பறவைகளுள்ளும் ஒரு புறா தனக்கேற்ற பெண் புறாவைத்தானே தேடிக்கொள்கிறது. வம்பிலே ஜோடி சேர்க்கவேண்டி ஒரு ஆண்புறாவோடு ஒரு பேடையைக் கூண்டிலடைத்துவைப்பின், பறவைகளிரண்டும் கொத்திக் கொத்தி பலவிடங்களில் காயம்பட்டு தலைவீங்கி இரத்தம் பீறிட்டிருக்கும் கோரம் தெரியும். அதேபோல் வம்பிலே இவர்களால் இணைக்கப்படும் நாங்களும் இவ்வுலகத்தில் துன்புற்றுழல்வது விந்தையாகாது. விவாகத்தின் உயரிய கருத்தையுணராது வீணே என்னைத் துன்புறுத்தி வருகிறார்கள். மக்களின் விவாக விஷயத்தில் பெற்றோர்களுக்குத் தக்க பொறுப்புண்டென்பதை நான் மறுக்கவில்லை. ஆனால் அது மணமக்களின் மனதையும் தன்மையையும் ஒத்ததாகவே இருக்கவேண்டுமென்பதுதான் என் கருத்து. மணமென்பது [illegible] மக்களின் மணமொத்ததல்லவா?

நண்பா! **விவேகமற்ற இவர்களது** செய்கைக்கிசைந்து இன்பமற்ற இல்லறத்தை நடத்துவதைக் காட்டிலும் எஞ்சிய என்னுயுளையும் பிரம்மச்சாரியாகவே கழிப்பது மேலென்று எனக்குத் தோன்றுகிறது. இதுவே நான் கொண்ட உறுதியான முடிவும். காதலுக்காக உயிரையும் இழக்கின்றனர். நான் என்ன கலியாணத்தைத்தானே இழக்கின்றேன். இதைக் கண்டாவது அவர்கள் காதலின் வன்மையை உணரட்டும். இன்று நம்மில் பெற்றோர்களின் பேதமையினால் வாழ்க்கையின் இன்பத்தை இழந்து துன்பத்தில் வீழ்ந்து துள்ளித்தவிப்பவர் எத்தனை பேர்? மக்களையடக்கி மனதிற்கொப்பாத மணத்திற் புகுத்தும் இக்கொடிய பழக்கத்தைவிடுத்து, அழியா இன்பந்தரும் அரும்பெரும் காதலின் இயற்கைச் சுதந்திரத்தையளிப்பார்களாயின் நம் சமூகம் எவ்வளவு சீர்படும்.

இப்படிக்கு,

துர்பாக்கியசாலியான நண்பன்

............ராமன்.

வெளி வந்துவிட்டது ! வெளி வந்துவிட்டது ! !

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்கள்

எழுதிய

ஜீவ இரகசியம்

என்ற

அரிய ஆராய்ச்சி நூல் வெளிவந்து விட்டது

உயிரை வளர்ப்பதற்கும், உய்விப்பதற்கும் உரிய வழிகளைப் பற்றி இந்நூலில் பெரிதும் ஆராயப்பட்டிருப்பதால் இதற்கு 'ஜீவ இரகசியம்' என்ற பெயர் சூட்டப்பட்டுள்ளது.

இதில் டாக்டர் முதலியாரவர்கள் நீண்ட காலமாக அனேக சாதுக்களிடத்திலும், யோகிகளிடத்திலும், அறிஞர்களிடத்திலும் பழகி அவர்களிடமிருந்து அறிந்துகொண்ட விஷயங்களில் தமது அறிவிற்கும் அனுபவத்திற்கும் உண்மை யெனப்பட்ட பல அரிய பொருள்களை ஆராய்ந்திருக்கிறார்கள்.

இந்நூலில் உயிர் வாழ்வதற்கு மிகவும் அவசியமான சுகத்தை —தேக சுகம், மனோ சுகம், ஆன்ம சுகம் என மூன்று பிரிவாக வகுத்து ஒவ்வொரு பிரிவைப் பற்றியும் விரிவுபடுத்தி எழுதப்பட்டிருக்கிறது. நீராடும் நெறி, மூச்சு விடும் வகை, சூரியனால் அடையும் பயன், காற்றின் உபயோகம், சரீர நிலை அறிதல், வழிபாடுகளின் உண்மைத் தத்துவங்கள் முதலான பல இன்றியமையாத பொருள்களைப் பற்றியும் இதில் ஆராயப்பட்டுள்ளது. மற்றும் இப்புத்தகத்தில் சகல மதங்களின் உற்பத்தியைப் பற்றியும், அவற்றின் கருத்துக்களைப் பற்றியும் அறியலாம்.

இந்நூலை ஒவ்வொருவரும் படித்தறிய வேண்டியது மிகமிக அவசியமாகும்.

இதன் விலை ரூபா 1.

தபால் சார்ஜ் வேறு.

'தமிழரசு' புத்தகாலயம்,

31, வைத்தியநாதமுதலி வீதி, சென்னை.

இணையற்ற அயத்தங்க திராவகம்



நண்பர்களே! இந்த மருந்தானது மலேரியா என்னும் விஷ சுரத்தினாலாவது அல்லது வேறு எந்த சுரத்தினாலாவது சரீரம் இளைத்து இரத்தம் குறைந்து சோகை போலும் வெளுத்துக் காணப்படும் இளைத்த தேகிகளுக்கு ஒரு ஆச்சரிய அபூர்வமெனவே காட்டும்.

இதைச் சாப்பிடுபவர்களுக்கு மயிர் கறுத்து வளரும்; பசியின்மை நீங்கும்; மலம் தாராளமாய்க் கழியும்; காது விருத்தி உண்டாகும்; பரிசுத்த இரத்தம் பெருகும்; நல்ல பசியுண்டாகும்; முகம் வசீகரமாய்க் காணும்; மேனி சிவக்கும்; நரம்புகள் தடிக்கும்; பசி யதிகரிக்கும். இம்மருந்[illegible]பிட்டவர்கள் வீரர்களாகவும் பலசாலிகளாகவும், இரத்த சுத்தியும், இரத்தப் பெருக்கும் பெற்று பித்த சோகை, பித்த பாண்டு, ஊதுகாமாலை, எனும் புருக்கி முதலிய நோய் நீங்கப் பெறுவார்கள்.

இம் மருந்தால் மலமும் தாராளமாய்க் கழியும். இம் மருந்தைச் சாப்பிட்டவர்கள் பயில்வான்களாவார்கள். திடகாத்திர புத்திரர்களைப் பெறுவார்கள்; இன்பத்தையும் அடைவார்கள்.

4 மாதம் சாப்பிடக்கூடிய மருந்தின் விலை புட்டி **1-க்கு அணா 12.**

விலாசம்:--31, வைத்தியநாத முதலி வீதி, சென்னை.

Edited, Printed and Published by Dr. M. Masilamani Mudaliar at Meenatchi Press, 31, Vaithiyanatha Mudali Street, Madras.